கல்கி

KALKI 1-7-1973 45 காசு





ஆண்,
ஆளப்பிறந்தவன்.
அவன் துணைவி,
அவனது இதயராணி.
பிள்ளைக் கனியமுது,
பேசும பொற் சித்திரம்.

இல்லறத்தின்
சுவைக்களனில்
மலர்ந்தவை,
மபத்லால்
துணிமணிகள்!

மெஃப்ரின் எஸ்டர்காட் டெரோவெல்

எளிய சாயல்களிலும்,
எடுப்பான வண்ணங்களிலும்,
பெருமித பிரிண்டுகளிலும்
'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர்
சேலைகள், பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன் சேலைகள்;
'மெஃப்ரின்' பாலியெஸ்டர்
இழைகலந்த உடுப்புத்
துணிகள் — இலேசான வானகள்.
கோடை நிழல் படரும்
கேம்பிரிக்குகள், கோலாகல
நகை மிளிரும் பாப்ளின்கள்;
இன்னொளி மிளிரும்
வண்ணங்களிலே, வரிகளிலே,
கட்டங்களிலே 'எஸ்டர்காட்'
பாலியெஸ்டர் இழைகலந்த
காட்டன் சூட்டிங்குகள்: அதி
நவீனமான அரும்பெரும் அழகு
வண்ணங்களில், பிரிண்டுகளில்
'டெரோவெல்' பாலியெஸ்டர்
இழைகலந்த காட்டன்
ஷர்ட்டிங்குகள்.

**மபத்லால்
க்ரூப்**

AIYARS-M.174 TM

கல்கி



பொருளடக்கம்

பிரமாதீச ஆனி 17 ★ ஜூலை 1, 1973

அட்டையில் : வண்ணத்தாமரை கண்டு
எண்ணங்கள் கோடி உண்டு
வண்ணப்படம் : ஞானலிங்கம்

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


ஸ்ரீ வரசித்தி விநாயகர் மகா கும்பாபிஷேகம்

சென்னை மயிலாப்பூரிலுள்ள வி. ஐ. டி. காலனியில் ஸ்ரீ வரசித்தி விநாயகருக்கு ஓர் அரிய சிறிய நூதன ஆலயம் எழுப்பப்பட்டிருக்கிறது. ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகளின் அருளாசியுடன் தொடங்கப்பட்ட இப்பணியானது தொழில் நுட்பக் கல்விக் கூட்டு இயக்குநர் திரு எஸ். வையாபுரி அவர்களின் தாராளமான உதவியாலும் தளராத உழைப்பாலும், அவருக்கு உறுதுணையாக நின்ற முன்னாள் மின்வாரிய சூப்பரிண்டண்டிங் என்ஜினீர் திரு டி. என். ராஜகோபாலின் நன்முயற்சியாலும், மற்றும் திருப்பணிக் குழுவின் ஊக்கத்தாலும், ஆஸ்திகப் பொது மக்களின் ஆதரவாலும் நிறைவு பெற்று, வருகிற விநாயக சதுர்த்தியாகிய ஆகஸ்டு 31-ந் தேதியன்று இவ்வாலயத்துக்கு மகா கும்பாபிஷேகம் நடக்கவிருக்கிறது.




ஆலயத்தில் குடிகொள்ளும் விநாயகப் பெருமானின் விக்கிரகம் ரத்னகிரி திரு பாலமுருகன் சுவாமிகளால் மனமுவந்து அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

வரசித்தி விநாயகர் குடமுழுக்கு விழாவில் மக்கள் பெருமளவில் கலந்துகொண்டு பெருமானின் திரு அருளுக்குப் பாத்திரராக வேணும். திருப்பணிக்குப் பொருளுதவி அடியிற் காணும் முகவரிக்கு அனுப்பலாம்: திரு டி.என். ராஜகோபால், பொருளாளர், வரசித்தி விநாயகர் கோயில், 12, இரண்டாவது மெயின் ரோடு, வி. ஐ. டி. காலனி, சென்னை-4.



பிரெஷ்னேவ்
நிக்ஸன்
இந்திரா
ட்ருடியூ



ஸிந்துபாத்தும் கடல் கிழவனும்!
மாட்டேன், மாட்டேன்!
இறங்கவே மாட்டேன்!
இந்தியன்

கல்கி

மலர் 32
இதழ் 48

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா

— பாரதியார்

செய்வன திருந்தச் செய்

தெய்வத் தமிழகத்தில் பேயாட்சி செய்து வந்த கள்ளுக்கடைகள் மூடப்படும் என்கிற செய்தி இன்பத் தேனாகக் காதில் பாய்கிறது. மதுவிலக்கு ரத்தினாலேயே ராஜாஜியின் உரம் பாய்ந்த மனமும் உடைந்து போயிற்று. அந்த ஆன்மா தி.மு.க. அரசுக்கு ஆசி புகலும். தி. மு. க. அரசுக்கு உரிய வாழ்த்தினை, நாமும் தயங்காமல் நல்குகிறோம்.

மதுவிலக்கை மறுபடியும் அமல் செய்தாலொழியத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முடியாது என்கிற சொந்த நலனை முன்னிட்டே தி. மு. க. இந்த முடிவை எடுத்திருக்கிறது என்று சில எதிர்க் கட்சிகள் சாடியிருக்கின்றன. இதில் உண்மை இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். எது எப்படி இருந்தாலும் இதன் நிகர விளைவாக நம் அருமைத் தமிழகத்தில் கண்ணறுவியாகத் தொங்கிக் கொண்டிருந்த கள்ளுக் கடைப் பலகைகள் எடுபடுகின்றன. அதற்காக அரசைப் பாராட்டுகிறோம்.

அதைவிட உற்சாகத்தோடு தமிழ் மக்களைப் பாராட்டுகிறோம். மது மோகினியின் சபலத்துக்கு மயங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்து ஓர் அரசாங்கத்தையே தங்களுடைய சங்கற்பத்துக்குத் தலைபணிய வைத்துவிட்ட தமிழ் மக்களை, குறிப்பாகப் பெண் குலத்தைப் பற்றிப் பெருமிதம் கொள்கிறோம்.

செய்வன திருந்தச் செய்ய வேண்டும். பாதிக் கிணறு தாண்டிப் பயனில்லை. மதுவிலக்கு ரத்தில் இப்போது அரைகுறையாக நின்றுள்ள அரசு தீரத்துடன் இப்பிரச்னையைப் பூரணமாகத் தீர்க்க வேண்டும் — அதாவது கள்ளுக் கடைகளை மட்டுமின்றி, சாராயக் கடைகளுக்கும் மூடுவிழா நடத்த வேண்டும்.

கள்ளுக் கடைகளை மூடுவதால் ஏற்படும் ரூ. 11 கோடி நஷ்டத்தைச் சமாளிப்பதே சிரமம் என்றும், சாராயக் கடைகளையும் மூடுவதால் மேலும் ஏற்படக்கூடிய 18 கோடி நஷ்டத்தைச் சமாளிப்பது இயலாமற் போகும் என்றும் சர்க்கார் கூறுகிறது. மக்களுக்குத் தீமை செய்கிற கெட்ட பழக்கம் என்று ஒன்றை உணர்ந்த பிற்பாடும் அதை ரூபாய் பைசா ரீதியில் கணித்துப் பார்ப்பது சற்றும் பொருந்தாது. சாராய விற்பனைப் பணத்தால் பொது நலன் செய்யப் போகிறோம் என்பது கண்ணிரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்கப் போகிறோம் என்பது போலத்தான்.

கள்ளுக் கடைகளை மூடிச் சாராயக் கடைகளைத் திறந்து வைப்பதால் பல கட்குடியர்கள் சாராயக் கடைக்குத் திரும்புவார்கள். உணவுச் சத்தில் கள்ளையும்விட மட்டமானதும், விலையில் கள்ளைவிட உயர்ந்ததுமான சாராயத்துக்குத் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுப்பது முறையாகுமா?

கலால்வரி நஷ்டத்துக்காகச் சாராயக் கடைகளை விட்டு வைப்பதோ, அல்லது தமிழக அரசு புது வரிகளைப் போடுவதோ அவசியமில்லை. அரசியல் சாஸனத்திலேயே இடம் பெறும் மதுவிலக்குக் கொள்கையை அமல் செய்யும் மாநிலம் என்கிற முறையில், இந்த இனத்தில் ஏற்படும் நிதி நஷ்டத்துக்கு மத்திய சர்க்காரிடமிருந்து ஈட்டுத் தொகை பெற அரசு முயல வேண்டும். கட்சி பேதங்கள் இன்றித் தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சிகளும் தோளோடு தோள் நின்று மத்திய அரசிடம் இதை வற்புறுத்த வேண்டும். தமிழகத்தின் சகல மக்களும், சகல கட்சிகளும் ஏகோபித்துத் தங்கள் நியாயமான கோரிக்கையை வலியுறுத்தினால் புதிய நிதிக் கமிஷன் நிச்சயமாக நமக்குச் சாதகமாகத் தில்லி அரசிடம் பரிந்துரைக்கும்.

இப்படிப்பட்ட ஐக்கிய உணர்ச்சிக்கு அடியெடுத்து வைத்து, மதுவிலக்கைப் பூரணமாக அமலுக்குக் கொண்டு வருவதே தமிழக அரசின் கடமை. இப்போது இன்னோராண்டு சாராய அரக்கனுக்கு ஆயுள் தந்திருக்கிற முடிவை மாற்றி, எப்படியும் **அடுத்த ராஜாஜி ஜயந்தியாகிய டிசம்பர் 8-க்குள் பூரண மதுவிலக்கினை அமலாக்கி,** நம் அண்ணலுக்கு அஞ்சலி செலுத்துவதே முறையாகும். மாறாக, அரைகுறை மதுவிலக்கோடு தி. மு. க. திருப்தி அடையுமானால், ஸ்தாபன காங்கிரஸ், அ. தி. மு.க. முதலிய கட்சிகள் தங்கள் பழைய உத்தேசப்படி மதுவிலக்கை அமலாக்கப் போராட்டம் நடத்துவதைத் தமிழகம் முழுதும் ஆதரிக்கவே வேண்டும்.

பகை இருள் விலகுகிறது

உலக மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட வேண்டுமாயின் அணு ஆயுத உற்பத்தியையும் சோதனையையும் அறவே நிறுத்தியாக வேண்டும். இந்த முடிவுக்கு உடனடியாக வராவிடினும், 1974க்குள் அணு ஆயுதங்களைப் பெருமளவில் கட்டுப்படுத்த வேண்டும் என்று அமெரிக்காவும் ருஷியாவும் செய்து கொண்டுள்ள உடன்பாடு போற்றி வரவேற்கத் தக்கது. தம்மிரு நாடுகளுக்குள் அணு ஆயுதப் போர் செய்வதில்லை என்பதோடு மற்ற நாடுகளிலும் அணுகுண்டைப் பிரயோகிக்காமல் இருக்க வழி காண வேண்டும் என்று நிக்ஸனும் பிரெஸ்நேவும் வலியுறுத்தியிருப்பது உலக சமாதானத்தில் அக்கறை உள்ள அனைவருக்கும் திருப்தி ஊட்டும்.

ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து முதலிய பிற தேசங்களைப் பாதிக்கும் வகையில் அணுகுண்டு சோதனை நடத்த பிரான்ஸுக்கு உரிமையில்லை என்று உலகநீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ள அதே தினத்தில் மேற்படி உடன்பாடு பிறந்திருப்பது நல்ல சகுனமாகும். (துரதிருஷ்டவசமாக இந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்பட பிரான்ஸ் மறுத்திருக்கிறது. ஆனால் உலக அபிப்பிராயத்துக்குத் தலை வணங்காமல் எந்த நாடும் செயல்பட முடியாது என்பதால் பிரான்ஸும் தன் முரட்டுத் தனத்தைக் கைவிடும் நாள் விரைவில் வரும் என்று நம்பலாம்.)

அமெரிக்காவும் ருஷியாவும் உடன்பாடு கண்டிருப்பதில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமும் உள்ளது. சமீப காலம் வரை அவை மாறாத பகை நாடுகள் என்றே கருதப்பட்டு வந்தன. ஆனால் பிரெஸ்நேவின் அமெரிக்கச் சுற்றுப்பயணமும், இரு தலைவர்களின் கூட்டறிக்கையும் பகைமை எவ்வளவு தூரம் நலிந்து, நேசக் கூட்டுறவுக்கு எத்தனை விதங்களில் வழி ஏற்பட்டுள்ளது என்பதை நிதரிசனமாக்குகின்றன.

மாற்ற முடியாத துவேஷம் என்று ஒன்று இருப்பதற்கில்லையென்பது நன்கு புலனாகிறது. இது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் குறிப்பாக ஒரு முன் உதாரணமாகும். பரம வைரிகளாகக் கருதப்பட்ட அமெரிக்காவும் ருஷியாவும் அதே போல் அமெரிக்காவும் சீனமும் போர்ச் சிந்தனையை விடுத்து, பரஸ்பர மேம்பாட்டுக்காக ஒத்துழைக்க முடியுமாயின், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒன்றாகவே இருந்த இந்திய உபகண்டத்தில் உள்ள இரு நாடுகள் ஏன் நட்பு நாடுகளாக முடியாது? நேசமும் ஒத்துழைப்பும்தான் இரு நாடுகளுக்கும் பொருளாதாரத்திலும் சரி, ஆன்மீக ரீதியிலும் சரி, நன்மை பயப்பதாகும். இந்த ஜீவாதாரமான நட்புப் பணியில் பாரதம் முழுமூச்சுடன் தயங்காமல் முற்படுமாக!

தமிழ் நாட்டிலே...


தீரன்


உழவர் சட்டமும் சொல் ஏர் உழவரும்

உழவர்கள் சிறுகச் சிறுக விலை கொடுத்துப் பன்னிரண்டு ஆண்டுகளில் நிலத்தைத் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ள வசதி தரும் ஒரு மசோதா தமிழக அரசால் கொண்டுவரப்பட்டதை அனைவரும் அறிவர். இந்தத் திட்டத்திலுள்ள பல குறைபாடுகளை அறிஞர்கள் எடுத்துக் காட்டினர். குறிப்பாக, கோவில் நிலங்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் தேவஸ்தானங்களின் கையை விட்டுத் தனியாரின் கைக்குப் போய்விடுமாயின், நஷ்டஈடாகக் கோயில்கள் பெற்ற சொற்பத் தொகை செலவான பின், இவற்றை நம்பி வாழ்க்கை நடத்தும் ஏராளமான சிப்பந்திகளை நட்டாற்றில் விட்டதாகும்; நித்திய பூஜை, திருவிழா எல்லாமே நின்று போகும் — என்பதைப் பலர் எடுத்துக் காட்டினர். குறிப்பாக இந்த விஷயம் பற்றித் ''தினமணி''யில் ஆசிரியர் திரு ஏ. என். சிவராமன் அவர்கள் வெளியிட்ட தொடர் கட்டுரைகள் பல நுணுக்கமான அம்சங்களை அபாரத் தெளிவுடன் விளக்கி வைத்தன.

''வாளை விட வலியது பேனா'' என்று நம்பி வந்த ஒரு காலம் இருந்தது. நம் 'சுதந்திர ஜனநாயகத்திலோ' இதற்கு மாறாக ஆள்கிற கட்சிக்கு நியாயமான எதிர்ப்பைத் தருகிற பத்திரிகைத் தர்மத்துக்கு மிகுந்த சங்கட நிலைமையே ஏற்பட்டு வந்திருக்கிறது. இந்தத் துர்ப்பாக்கிய சூழ்நிலையில் புத்துணர்ச்சி ஊட்டும் ஒரு நற்செய்தி வெளியாகியிருக்கிறது. தமிழக முதல்வர் திரு கருணாநிதி அவர்கள், திரு சிவராமன் அவர்களின் கட்டுரைகளைத் தாம் கவனமாகப் படித்ததாகவும், அதில் கண்டுள்ள சில திருத்தங்களை ஆலோசித்துப் பார்ப்பதாகவும் கூறியுள்ளார். சமீபத்தில் கொண்டு வந்த உழவர் மசோதா முடிந்து போய்விட்ட விஷயம் என்று எண்ணிவிட வேண்டாம் என்றும் முதல்வர் கூறியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ''எப்பொருள் யாரார் வாய் கேட்பினும்'' அதிலுள்ள உண்மையை, நன்மையை ஏற்கிற பண்பு தமிழக அரசுக்கு வளருமாக!

மேற்படி மசோதாவுக்குப் பல திசைகளிலிருந்து எதிர்ப்பு வந்திருந்தபோதிலும், திரு சிவராமனின் கட்டுரைகளை முதல்வர் குறிப்பிட்டுப் பிரஸ்தாபித்திருப்பதில் சக பத்திரிகை-


இரட்டை இலைகள்
எம்.ஜி.ஆர்
பயிர் வளம் பெருக்க வந்த மண்புழுக்கள்
பயிரை அழிக்க வரும் சந்தர்ப்பவாத புழுக்கள்


ஒட்டுப் போடப் போறேன்! வோட்டைத் தயாரா வைச்சுக்க!
திமுக ஊழல்கள்
துண்டையே மாத்திறத்தான் உண்டு!

யாளர் என்ற முறையில் மகிழ்ச்சி அடைகிறோம். எழுத்தாளர்களைச் ''சொல்லேர் உழவர்'' என்று சிறப்பிப்பது தமிழ் மரபு. கருத்துச் செறிவும், சொல்லில் தெளிவும் நிரம்பிய ஒரு ஜாம்பவானாகிய சொல் ஏர் உழவரின் எழுத்தால் உழவர் பரிசோதனா மாற்றம் கண்டால் அது எத்துணை மகிழ்ச்சிக்குரிய விஷயம்!

வருணனின் கருணை

தென் மேற்குப் பருவ மழை வெளுத்துக் கட்டத் தொடங்கி விட்டது. நீர்த் தேக்கங்கள் நிரம்பத் தொடங்கி விட்டன. விசை வெட்டு படிப்படியாகக் குறைக்கப்படுகிறது. மேட்டூர் முதலிய அணைகளிலிருந்து பாசனத்துக்காக நீர் விடப்படுகிறது. எல்லோர் இதயமும் குளிரும் செய்தி. ஆண்டவன் கருணை தவிர மழைக்கு வேறு வழியில்லை என்று ராஜாஜி கூறுவது நினைவு வருகிறது.

சமீபத்தில் ஏற்பட்ட பயங்கர விசை வெட்டை நமது தொழில் துறையினர் அற்புதமாகச் சமாளித்து வெளிவந்திருக்கின்றனர். உற்பத்திக் குறைவாலும், ஜெனரேட்டர் வைத்துக் கொள்ளும் செலவாலும் அவர்கள் அடைந்துள்ள கஷ்ட நஷ்டங்கள் சொல்லத் தரமன்று. பொருளாதாரம் செழிக்கவும், வேலை வாய்ப்புக்கள் பெருகவும், ஜீவாதாரமாக உள்ள தொழில் துறையினருக்கு இவ்வருடம் ஏற்பட்ட உற்பாதம் இனி ஒரு போதும் ஏற்படக்கூடாது. இதைக் கவனித்து ஆவன செய்வது அரசாங்கத்தின் இன்றியமையாத பொறுப்பாகும். அரசு சென்ற ஆண்டே தீர்க்காலோசனையுடன் நடந்து கொண்டிருந்தால் இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டிராது என்பதே அறிஞர் கருத்து. பருவ மழையைத் தொக்கி நிற்கும் நீர்விசைத் திட்டங்களை மட்டும் நம்பியிராமல், அனல் விசைத் திட்டங்களை விரிவுபடுத்துவதில் அரசு விரைவு காட்ட வேண்டும். ஆயினும் இதில் செலவு அதிகம் என்பதை மறப்பதற்கில்லை. எனவே திரு சித்ரா நாராயணசாமி அவர்கள் எடுத்துக்காட்டியிருப்பது போல், காற்றுள்ள போதே தூற்றிக்கொள்கிற வகையில் பருவ மழை வலுவாக உள்ளபோதே அதிகச் செலவில்லாத சிறிய சிறிய நீர்விசைத் திட்டங்களை நிறுவி, அந்தந்தப் பகுதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

அறிவுரைகளின் மறுபுறம்

சென்ற மாதம் மூன்றாவது வாரத்தில் கூடிய தி. மு. க. பொதுக் குழு நிறைவேற்றிய சில தீர்மானங்களைப் பார்க்கும்போது அதன் மறுபக்கமாகத் தெரியும் சில உண்மைகளைப் புரிந்து கொள்ள முடிகிறது.

(1) தி. மு. கழகத்தின் பொறுப்பிலுள்ளவர்கள் பல பொது அமைப்புக்களில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ நியமனப் பதவிகளில் இருப்பதைத் தவிர்த்துக் கொண்டு பிறருக்கு அந்த வாய்ப்பை அளிக்க வேண்டும்.

(2) தி. மு. க. பொறுப்பில் உள்ளவர்கள் மக்களுடைய பொதுப் பிரச்னைகளைத் தவிர வேறு எந்தப் பிரச்னைகளுக்கும் அரசாங்க அதிகாரிகளை நேரடியாக அணுகாமல், நியாயத்துக்குப் புறம்பான செயல்கள் எந்தப் பகுதியிலாவது நடைபெற்றால் அவைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும். கழகத்தைச் சேர்ந்தவர்கள் அரசு அதிகாரிகள் குறித்து எந்த விதமான சிபாரிசுகளையும் செய்வதற்கு முன்வரக் கூடாது.

(3) தி. மு. க. வின் பொறுப்பில் உள்ளவர்கள் அரசு நிலங்களைப் பெற்றிருந்தால் அவற்றை உடனே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று ஏற்கனவே முதலமைச்சர் அறிவித்ததற்கு இணங்க அப்படி நிலப் பட்டா வாங்கிய சிலர் திருப்பி ஒப்படைத்துள்ளனர். இன்னும் யாராவது திருப்பித் தராதவர்கள் இருந்தால் அவர்கள் திருப்பித் தந்துவிட வேண்டும்.

(4) பொதுமக்களுக்குச் சர்க்கரை, உரம், மண்ணெண்ணெய், உணவு போன்ற அத்தியாவசியப் பொருள்களைத் தனிப்பட்டவர்கள் மூலம் விநியோகிக்கும் முறையை மாற்றிட அரசு எடுத்துள்ள முயற்சிக்கு ஆக்கம் அளித்து ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இந்தத் தீர்மானங்களில் முதல் மூன்று தீர்மானங்களின் மறுபக்கமாக அவற்றைத் தீர்மானங்களாக நிறைவேற்றுவதற்கான காரணங்கள் இருந்தன என்பதைத் தீர்மானம் நிறைவேற்றியவர்களே ஒப்புக்கொள்வதாகத் தெரிகிறது. தி. மு. க.வில் ஒருவரே பல பதவிகளைக் கட்டி ஆண்டு வருவது உண்மை என்பதையும், தி. மு. க.வினர் அரசு அதிகாரிகள் சம்பந்தமான சிபாரிசுகளில் இறங்குவதும் தி. மு. க.வினரே நிலப் பட்டாக்கள் பெற்றிருப்பதும் ஆகிய மறு பக்க உண்மைகளை இந்தத் தீர்மானங்கள் சொல்லுகின்றன. நான்காவது தீர்மானம் நடைமுறையில் எப்படி எப்படி சாத்தியம் என்று தெரியவில்லை. இதிலும் ஊழல் மேலும் அதிகரிக்கும் என்றே தோன்றுகிறது.

அரசு வெளியிட்ட பாட நூல்கள்

கல்வி நிலையங்களின் உபயோகத்துக்காக அரசு வெளியிட்டிருக்கும் பாட நூல்களில் சிலவற்றின் விலை இந்த ஆண்டு மிகவும் உயர்ந்திருக்கிறது. இரண்டு மடங்குவரையில் விலை உயர்ந்துள்ள இந்தப் புத்தகங்களில் சில கடைகளில் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது.

கடந்த வருடம் 35 பைசாவுக்குக் கிடைத்த முதல் வகுப்புப் பாடப் புத்தகத்தின் விலை இந்த ஆண்டு 80 பைசாவாக உயர்ந்திருக்கிறது. 40 பைசாவுக்கு விற்ற இரண்டாவது வகுப்புப் பாடப் புத்தகத்தின் விலை இந்த வருடம் 90 பைசா ஆகும். மூன்றாவது வகுப்புப் புத்தகத்தின் விலை 45 பைசாவிலிருந்து ஒரு ரூபாயாக உயர்ந்து விட்டது. கடந்த ஆண்டு 60 பைசாவுக்கு விற்ற நான்காவது வகுப்புப் புத்தகம் இந்த ஆண்டு ஒரு ரூபாய் பத்து காசாகவும், 65 காசுக்குக் கிடைத்த ஐந்தாவது வகுப்புப் புத்தகம் இப்போது ஒரு ரூபாய் 20 பைசாவாகவும் உயர்ந்து விட்டன. விலை உயர்வுத் துயர் போதாதென்று முன்பே ஆர்டர் செய்திருந்தும் தேவையான அளவு புத்தகங்கள் கிடைப்பதில்லை என்ற சிரமம்

நியூஸிலாந்து பாட்ஸ்மன் வாட்ஸ்வொர்த்தை அவுட் ஆக்கப் பந்தைப் பாய்ந்து பி டி ப் ப வ ர் இங்கிலாந்து கோஷ்டியைச் சேர்ந்த ரூப்.

இந்த டெஸ்டில் முப்பத்தெட்டு ரன்களில் இங்கிலாந்து வெற்றி பெற்றது என்றாலும் தார்மீக வெற்றி நியூஸிலாந்துக்கே என்றுல்மிகையாகாது. வெற்றிக்கு நாலாவது இன்னிங்கில் 479 ரன்கள் தேவை என்றிருந்த நிலையில் நியூஸிலாந்து இந்த அசுர சாதனையைப் புரிய அமரர்மல் முன் வந்தது. 440 ரன்கள் எடுத்து உலக ரிக்கார்ட் ஏற்படுத்தியது அசகாய சூரத்தனமல்லவா? தோல்வியுற்ற எந்த ஒரு கட்சியும் எந்த டெஸ்டிலும் நாலாவது இன்னிங்கில் இத்தனை ரன்கள் எடுத்ததில்லை.

- பிரிட்டிஷ் தகவல் நிலையம்



வேறு. வாங்குபவர்களும், சிறு கடைக்காரர்களும் புகார் கூறிக்கொண்டிருக்கிறார்கள். படிக்கிற குழந்தைகளின் பெற்றோர்களும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். "வகுப்புகள் தொடங்கிப் பல நாட்கள் ஆகியும் புத்தகங்கள் இல்லாமல் வகுப்புக்களில் பாடங்கள் நடத்துவது சிரமமாக இருப்பதாகவும், ஆண்டுக்கு ஆண்டு புத்தகங்களை மாற்றிவிடுவதால் மாணவர்கள் பழைய புத்தகங்களை நம்பிக் கொண்டிருக்க முடியவில்லை என்பதாகவும் ஆசிரியர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

முன்பு தனியார் துறையில் எளிதாகவும் நன்றாகவும் இருந்த பல காரியங்கள் அரசு மேற்கொண்டவுடனே இப்படிக் குறைபாடுகள் காண இடம் தருவது நாளடைவில் மக்களால் தெளிவாக உணரப்படுகிறது. கவனக் குறைவு, பொறுப்பின்மை இவை தாம் தேசிய மயமாக்கப்படுவதின் விளைவு என்பது பன்முறை பல விதங்களில் நிரூபணமாகியும் பல்வேறு கட்சிகளும் மாநில, மத்திய அரசாங்கங்களும் தேசிய மயம் என்ற மயக்கு வாதத்தை விட்டபாடாயில்லை.

நகரசபைக்கு அரசாங்கநோட்டீஸ்

சென்ற ஆண்டு விருத்தாசலம், இராமநாதபுரம், போடிநாயக்கனூர் ஆகிய ஊர்களில் மாணவர்கள் மீது நடைபெற்ற தடியடிப் பிரயோகத்தையும், துப்பாக்கிச் சூட்டையும் கண்டித்தும், மாணவர்களுக்கு அநுதாபம் தெரிவித்தும் திருச்சி நகரசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருந்தது. திருச்சி நகரசபை ஸ்தாபன காங்கிரஸ் பொறுப்பில் இருக்கிறது.

'இத்தீர்மானம் 1920ம் ஆண்டின் தமிழ்நாடு முனிஸிடாலிடிகள் சட்டத்தின் வரம்புகளுக்கு அப்பாற்பட்டது — இதை ஏன் ரத்து செய்யக் கூடாது?' என்று கேட்டுத் தமிழ்நாடு அரசு இப்போது திருச்சி நகரசபைக்கு நோட்டீஸ் அனுப்பி யிருக்கிறது.

தீர்மானத்தை ரத்து செய்ய அவசியமில்லை என்று கூறி நோட்டீஸை மறு பரிசீலனை செய்யுமாறு அரசுக்குப் பதில் கூறி விட்டது திருச்சி நகரசபை.

பாதிக்கப் பட்டவர்களுக்கு அநுதாபம் தெரிவிப்பது ஒரு மரபு என்றும், சர்க்கார் இப்படி யெல்லாம் நகரசபைக்கு நோட்டீஸ் அனுப்புவது நகரசபையின் தன்மானத்துக்கே இழுக்கு என்றும் ஒரு கவுன்சிலர் வருத்தப் பட்டிருக்கிறார்.

மத்திய அரசிடம் அதிக உரிமைகள் கேட்கும் தி. மு. க. ஆட்சி தன் கீழுள்ள நகரசபைகளின் சுதந்திரத்தில் தலையிடாது சிறிது தாராளமாக நடந்து கொண்டால் என்ன குறைந்துவிடும்? ஒன்றுமில்லாத விஷயத்துக்குக் கெடுபிடி செய்வானேன்?

படிப்படியாக....?

படிப்படியாக மதுவிலக்கை மீண்டும் அமுல் படுத்தலாம் என்ற தி. மு. க. பொதுக் குழுவின் கருத்தை யொட்டித் 'தமிழ் நாட்டிலுள்ள கள்ளுக் கடைகள் செப்டம்பர் முதல் தேதியிலிருந்து மூடப்படும்' என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. திண்டுக்கல் தேர்தல் முடிவும் தி. மு. க. மக்களிடையே ஆதரவிழந்து வருவதும் இம்முடிவுக்குக் காரணமாய் இருக்கலாம். கள்ளுக்கடைகளை மூடப் போவதாக அறிவித்திருக்கும் அதே சமயத்தில் 'சாராயக் கடைகளை மூடுவதாக உத்தேசம் இல்லை' என்பதையும் சேர்த்தே அறிவித்திருக்கிறார்கள். கள்ளுக் கடையை மூடுவதால் 11 கோடி ரூபாய்தான் நஷ்டம் என்றும், சாராயக்

கடைகளை மூடுவதாலும் மேலும் 18 கோடி ரூபாய் நஷ்டமாகி விடும் என்றும் அரசாங்கம் லாப - நஷ்டக் கணக்குப் பார்க்கிறது.

மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் 'படிப்படியாக' என்ற வாதம் சரியில்லை. ஒரு தீமையை முழுமையாக ஒழிப்பது தான் விவேகமே ஒழியப் படிப்படியாக ஒழிப்பது என்பது தட்டிக் கழிப்பதில் ஒரு வகை தான்.

டாக்டர் ஹண்டே

தமிழக சுதந்திரக் கட்சிச் செயலாளரும் தமிழ்நாடு சட்டசபையின் சுதந்திரக் கட்சித் தலைவருமான டாக்டர் ஹண்டே திடீரென்று அ. தி. மு. க.வில் சேர்ந்து விட்டார் என்ற செய்தி கடந்த வாரத்தின் பரபரப்பூட்டும் நிகழ்ச்சி.

மதுவிலக்கு, லஞ்ச ஊழல் ஆகிய இரு பிரச்னைகளின் அடிப்படையில் திரு ஹண்டே அ. தி. மு. க.வில் சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த இரு பிரச்னைகளையும் பற்றிச் சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான ராஜாஜியை விட அதிகமாகச் சிந்தித்தவர்களோ, இவ்விஷயங்களில் மக்களுக்கு நன்மை செய்ய நினைத்தவர்களோ இருக்க முடியாது. அவ்வாறிருக்க மேற்கூறிய காரணங்களை திரு ஹண்டே குறிப்பிட்டிருப்பது அபத்தமாகப் படுகிறது. ராஜாஜியின் மறைவினால் தனும் பிய கண்ணீர் வற்றுவதற்குள் திரு ஹண்டே கட்சி மாறியது மட்டுமின்றி 'ராஜாஜி இருந்திருந்தால் நான் எதைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்திருப்பாரோ அதைத்தான் செய்திருக்கிறேன்' என்று கூறியுள்ளதைப் படிக்கும்போது, உண்மையான கொள்கைப் பற்றில்லாதவர்கள் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி விடுவதை ராஜாஜி வரவேற்கவே செய்வார் என்ற அளவில் திரு ஹண்டே கூறுவதைச் சரி என்றே ஒப்புக் கொள்ள நாம் தயங்கவில்லை.

''சுதந்திரக் கட்சி சம்பந்தப்பட்டவரையில் எந்தத் தனிநபரையும் அது நம்பியிருக்கவில்லை. ஹண்டே வெளியேறியது அதைப் பாதிக்காது'' என்று தமிழ்நாடு சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ஜி. கே. சுந்தரம் அவர்கள் அறிவித்திருப்பதை வரவேற்கிறோம். அவரது இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள கருத்தே பலரது கருத்தாகவும் இருக்கும். சுதந்திரக் கட்சி அதன் உறுதியான, தர்ம நியாயமான, நாட்டு முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய, உன்னதமான கொள்கைகளையே நம்பி இயங்குகிறது. தனிநபர்களையல்ல. சுதந்திரக் கட்சியில் பணியாற்றுபவர்கள் பதவி, பணம், செல்வாக்கு, அதிகாரம், பிராபல்யம் என்றெல்லாம் எதிர்பார்த்தால் ஏமாற்றமே அடைவார்கள். சிறுபான்மையினராய் இருந்தாலும் கொள்கைப் பிடிப்புடன் விளங்கி, பெரும்பான்மை பலமுடைய கட்சியிடம் வாதாடி, விரும்பத்தக்க மாறுதல்களை இயன்றவரை ஆட்சியில் ஏற்படுத்துவதே சுதந்திரக் கட்சியின் இன்றையப் பணி. இதில் பெருமிதம் கொள்பவர்களே சுதந்திரக் கட்சியில் இருப்பதில் மகிழ்ச்சி கொள்ள முடியும்.

ராஜாஜி சிந்தனை

கலையில் உண்மையிருக்க வேண்டும். உண்மையின்றிக் கலையில்லை. ஆனால் உண்மையெல்லாம் கலையாகி விடாது.

ஃ ஃ ஃ

அறிவைப் பெறுவதற்காகத் தான் நமது முன்னோர்கள் பிரபந்தங்களை இயற்றியுள்ளார்கள். கதா காலக்ஷேபங்களைக் கேட்டு அதன் மூலம் பாமரர்களும் அறிவைப் பெற்று ஆனந்தமடைகிறார்கள். புராணங்களிலிருந்து நல்ல கதைகளைப் பொறுக்கி எடுத்துச் சரியாக வகுத்து மக்களுக்குப் பயன்படும்படி விவரிக்க வேண்டும். இது நல்ல தங்க ஆபரணத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணிக்கக் கற்களைப் பதிப்பது போலாகும். இக்கற்கள் பித்தளையில் பதிக்கப்பட்டால் அவற்றுக்கு மதிப்புக் கிடையாது. அது போலவே கதைகளும் புராணங்களிலிருந்து எடுக்கப்பட்டுப் பௌராணிகர்களால் திரித்துக் கூறப்பட்டால் ஹரிகதையிலுள்ள நம்பிக்கையை ஜனங்கள் இழந்து விடுவார்கள். ஹாஸ்யத்தைப் புகுத்த முயன்று கதாகால க்ஷேபம் முழுவதையும் சில சமயங்களில் சிலர் பாழ்படுத்தி விடுகிறார்கள்.

ஃ ஃ ஃ

பாம்புகளும், பாம்புகளும் இருக்கும் ஒரு பழைய வீட்டில் குடியிருந்தால் எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்போமோ, அப்படியே வாழ்க்கையில் காமமும், லோபமுமாகிய விஷப் பொருள்களைப்பற்றி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.



மதபோதகரின் யோக்கியதாம்சங்கள்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

இப்போது உலக நாடுகள் எல்லாவற்றிலும் உள்ள தத்துவ ஆராய்ச்சிக்காரர்களும், ஆத்ம சாதகர்களும் அத்வைதத்தையே பரம தத்துவமாக அங்கீகரிக்கிறார்கள். என்னை அத்வைத மத குரு என்று சொல்கிறீர்கள். ஆனபடியால் நம் தேசத்தில் அத்வைத சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வளவு பேர் இருப்பதற்குக் காரணம் அதன் சித்தாந்தத்தில் உள்ள சிறப்புத்தான் என்று நான் சொல்வேன் என்று எதிர்பார்ப்பீர்கள்.

ஆனால் எனக்கு நனே யோசித்துப் பார்க்கிறேன். அத்வைத சித்தாந்தம் ஒன்றை மட்டும்தான் சகல ஜனங்களும் பின்பற்றுகிறார்களா? உலகில் எத்தனையோ சித்தாந்தங்களை, எத்தனையோ மதங்களை மக்கள் அநுசரிக்கிறார்கள். ஒரு தேசத்து மக்களே ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்துக்கு மாறவும் செய்கிறார்கள். புத்தரின் காலத்தில் வைதிக மதஸ்தர்கள் பௌத்தத்தில் சேர்ந்தார்கள். பிற்காலத்திலும் எத்தனையோ ஹிந்துக்கள் முகம்மதிய மதத்திலும் கிறிஸ்துவ மதத்திலும் சேர்ந்திருக்கிறார்கள். ஜைனர்கள் வைஷ்ணவர்களாக மாறி 'புஷ்டி மார்க்கி'கள் என்று பெயர் பெற்றிருக்கிறார்கள். ஸ்ரீ ராமாநுஜர் காலத்தில் பலர் விசிஷ்டாத்வைதிகளானார்கள். ஸ்ரீ மத்வரின் காலத்தில் பலர் மத்வ சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஸ்ரீ ஆதிசங்கரரின் காலத்தில் அவைதிக மதங்களான பௌத்தம், ஜைனம் முதலியவற்றுக்கு நலிவு ஏற்பட்டது. வைதிக மதத்தில் ஒரு பாகமாகிய கர்ம மார்க்கத்தை மட்டும் அநுசரித்து வந்தவர்கள் அவரது காலத்தில் பூரண வைதிகமான அத்வைதத்துக்குத் திரும்பினார்கள். இப்படியாக ஒரு சமயத்தை, சித்தாந்தத்தை ஏற்கிற சகல ஜனங்களும் அதன் தத்துவங்களை ஆராய்ந்து பார்த்து அதனால்தான் அதில் சேருகிறார்களா? அறிவாளிகள் வேண்டுமானால் சித்தாந்தங்களை எடை போட்டு அதில் சேரலாம். ஆனால் ஒரு . மதத்திலுள்ள ஏராளமான பொதுஜனங்களைப் பற்றி நான் அப்படிச் சொல்ல மாட்டேன்.

எந்த மதமும் அதில் உள்ள தத்துவத்தினால் மட்டும் வளருவதில்லை என்பது என் அபிப்பிராயம். சாமானிய ஜனங்களுக்குத் தத்துவத்தைப் பற்றிக் கவலை இல்லை. நல்ல குணம், நல்ல பழக்கம் உள்ளவராக, கருணையும் சாந்தமும் உள்ளவராக ஒரு மகான் வந்தால் அவரைப் பார்த்த மாத்திரத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை உண்டாகிறது. அவர் எந்தத் தத்துவத்தைச் சொன்னாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்ற திடமான நம்பிக்கையுடன் அவரது மதத்தில் ஜனங்கள் சேருகிறார்கள். மாறாக, ஒரு மதக் கோட்பாடுகள் எத்தனைதான் பரம சத்தியங்களை விளக்கினாலும், அந்த மதப் பிரதிநிதியாக இருக்கிற தலைவர்களிடத்தில் ஒழுங்கு தப்பிவிட்டால் உடனே அந்த மதம் அழியத் தொடங்கி விடுகிறது.

புத்தர் வந்தார். அவரது சரித்திரத்தைக் கேட்கக் கேட்கப் பால் வடிகிற அவரது விக்கிரகங்களைப் பார்க்கப் பார்க்க நமக்கே சாந்தமும் கருணையும் ஆனந்தமும் உண்டாகிறது. அந்தக் காலத்து ஜனங்களுக்கும் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் பௌத்த விஹாரங்களில் எத்தனை ஒழுக்கக் குறைவு ஏற்பட்டது என்பதை மகேந்திரப் பல்லவன் எழுதிய ''மத்தவிலாஸப் பிரஹஸனம்'' என்கிற ஹாஸ்ய நாடகத்திலிருந்து தெரிந்து கொள்கிறோம். இதே காலத்தில்தான் புத்த மதம் மங்கிப் போகத் தொடங்கியது. அதாவது சமயப் பிரதிநிதிகளின் தன்மையைப் பொறுத்தே சமய வளர்ச்சியும் நலிவும் ஏற்படுகிறது.

புத்தருக்குப் பிறகு ஆதிசங்கரர் பரம உத்தமமான மனிதராக வந்தார் என்றால் ஜனங்கள் அவரிடம் திரும்புகிறார்கள். அப்புறம் ராமாநுஜர், மத்வர் என்று இப்படித் தங்கள் சொந்த வாழ்க்கையில் உயர்ந்தவர்களாக விளங்கியவர்கள் வந்தபோது அந்தத் தனி மனிதரிடம் ஜனங்களுக்கு உண்டாகிற பிடிப்புக் காரணமாக, அவரவரது சித்தாந்தம் பரவியது. சமீபத்தில் சாந்தத்தோடும் தன்னலமில்லாத தியாகத்தோடும் ஒரு காந்தி வந்தார். உடனே அவர் சொன்னதையே 'காந்தீயம் காந்தீயம்' என்று ஒரு மதமாகக் கோடாநுகோடி ஜனங்கள் ஏற்றுக் கொண்டார்கள். தத்துவச் சிறப்பால்தான் ஒரு சித்தாந்தம் வளருகிறது என்றால் இன்றைக்கும் அந்தக் காந்தீயம் உச்சத்தில் இருக்க வேண்டும். ஆனால் நடைமுறை எப்படி இருக்கிறது என்பது உங்களுக்கே பிரத்தியட்சமாகத் தெரியும்.

பலாத்காரத்தினாலோ, பணத்தைக் காட்டியோ பொதுஜனங்களை இழுக்காத எல்லா மதங்களும், அவற்றின் குருமார்கள், போதகர்கள், பிரசாரகர்கள் ஆகியோரது குணத்தைக் கொண்டுதான் வளர்ந்திருக்கின்றன. ஒரு மதத்தின் பிரதிநிதியிடத்தில் வெளிவேஷம் மட்டும் இருந்தால் போதாது. எந்தத் தத்துவத்தைச் சேர்ந்தவராயினும் அவருக்குத் தன்னல எண்ணமே இருக்கக் கூடாது; துவேஷம் கூடாது; நல்லொழுக்கம் இருக்க வேண்டும்; நல்ல தபஸ் இருக்க வேண்டும்; சாந்தமும் கருணையும் நிரம்பியிருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களுடைய குண விசேஷத்தாலேயே அவர்களைத் தேடி வருகிறவர்களின் தோஷங்களும் போய்விட வேண்டும்.


எத்தகைய வேலைக்கும் உபயோகியுங்கள்
ஏசிசி யின் சில்விக்ரீட் வெள்ளை சிமெண்ட்



அலை ஓசை

அமரர் கல்கி

41. சூரியாவின் இதயம்

சூரியா அடிக்கடி ஆத்ம பரிசோதனை செய்து கொள்வதுண்டு. தன்னுடைய வெளி மனம் என்ன நினைக்கிறது, தன்னுடைய அறிவு என்ன முடிவு சொல்லுகிறது, தன்னுடைய இதய அந்தரங்கத்தில் எத்தகைய ஆசை குடிகொண்டிருக்கிறது என்பதையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்ப்பான். எந்த விஷயத்திலேனும் மனத்தில் குழப்பம் இருந்தால், மனத்துக்கும் அறிவுக்கும் இதயத்துக்கும் வேற்றுமை இருப்பதாகத் தோன்றினால், அந்த விஷயத்தைப் பற்றித் தீர்க்கமாகச் சிந்தனை செய்வான். தன்னுடைய உணர்ச்சிகளில் உள்ள குழப்பத்தைப் போக்கித் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டுச் சில சமயம் அவன் 'டைரி' எழுதுவதும் உண்டு.

பிப்ரவரி மாதம் 10ம் தேதியன்று சூரியா தன்னுடைய 'டைரி'யில் பின்வருமாறு எழுதத் தொடங்கினான்.

இன்று சீதாவின் பத்தாவது நாள் கிரியைகள் முடிவடைந்தன. அவளுடைய கணவன் சௌந்தர ராகவன் பக்தி சிரத்தையுடன் வைதிகக் கிரியைகளைச் செய்தான். இத்தனை நாட்களும் வைதிகத்தில் இல்லாத பற்று நிம

ரென்று ராகவனுக்கு ஏற்பட்டிருப்பதை நினைத்தால் வேடிக்கையாக இருக்கிறது. ராகவனுடைய சிரத்தையைக் காட்டிலும் வேடிக்கை என்னவென்றால், அந்தப் புண்ணியவதி பாமா காட்டிய வைதிக சிரத்தைதான். சீதாவின் சரமக் கிரியைகளையெல்லாம் அவள்தான் நடத்தி வைத்தாள் என்று சொல்ல வேண்டும். ராகவனுக்கு அது விஷயத்தில் கொஞ்சங்கூடக் கஷ்டமோ கவலையோ ஏற்படாமல் பாமா தன்னுடைய வீட்டிலேயே சகல வசதிகளும் செய்து கொடுத்தாள். சீ! இது என்ன வெட்கக் கேடு! இதுவும் ஒரு மானிட ஜன்மமா? பெண்டாட்டியைப் பறி கொடுத்தவன் கொஞ்ச நாளைக்காவது காத்திருக்கக் கூடாதா? அதற்குள்ளே இப்படி நாலு பேர் பார்த்துச் சிரிக்கும்படி நடந்து கொள்ள வேண்டுமா ?

சீதா! இப்பேர்ப்பட்ட இதயமற்ற கிராதகனிடமிருந்து விடுதலையடைந்து நீ போய்ச் சேர்ந்தாயே? யமன் கருணையில்லாதவன் என்று சொல்லுவது எவ்வளவு அறிவீனம்? உன்னை யமன் கொண்டு போனதைப் போல் கருணையுள்ள செயல் வேறு என்ன இருக்க முடியும் ?......

சீதா விஷயத்தில் என்னுடைய கடமையைச் சரிவரச் செய்து விட்டேனா? என் அத்தைக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேனா? இந்த எண்ணம் எனக்கு அடிக்கடி தோன்றிக் கொண்டுதான் இருக்கும். வாழ்நாள் உள்ளவரையில் அந்தக் கேள்விகள் மனத்தில் உதயமாகிக் கொண்டுதான் இருக்கும். ஆயினும் என்றால் இயன்றவரை என் கடமையைச் செய்து தான் இருக்கிறேன். என் உயிரைத் திரணமாக மதித்துச் சீதாவைக் காப்பாற்றி






யிருக்கிறேன். ஆனால் என்ன பிரயோஜனம்! சீதாவுக்காக நான் செய்த ஒவ்வோர் உதவியும் அவளுக்கு அபகாரமாகவே முடிந்திருக்கிறது. உண்மையில் அவளுடைய துயர வாழ்க்கைக்குக் காரணமானவன் நானே. அத்திம்பேரின் தந்தியை மட்டும் அன்று நான் மறைத் திராவிட்டால்.......

சீதாவின் தகப்பனார்,—அத்திம்பேர் துரைசாமி ஐயரின் — வாழ்க்கையும் முடிந்துவிட்டது! பரிதாபம்! பரிதாபம்! சீதா பல தடவை சொன்னாளே? அந்தத் துப்பாக்கியை அவர் தூர எறிந்திருக்கக்கூடாதா?—அந்தத் துப்பாக்கியி னால் அவருக்குச் சாவு என்று ஏற்பட்டிருக்கும்போது எப்படித் தூர எறிந்திருக்க முடியும்!

ஒருவிதத்தில் பார்த்தால் அவருக்கு இது நல்ல முடிவுதான்! அவருடைய இரு புதல்விகளில் ஒருத்தி செத்து விட்டாள். இன்னொரு பெண் சாவைக் காட்டி லும் பயங்கரமான கதியை அடைந்திருக்கிறாள். இக் கைய கொடூரத்தை எந்தத் தகப்பனார்தான் சகிக்க முடியும்? இதற்கெல்லாம் காரணம் தன்னுடைய தீச்செயல்களே என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட் டிருக்கிறது. அதனால் தம்மைத் தாமே சுட்டுக் கொண்டு செத்துப் போனார். பாவம்! நான் பாவிபத்



பட்டணத்துக்குப்போவதற்குள்ளே அனாதைப்பிரேத சம்ஸ்காரத்துக்கு ஏற்பாடு செய்து விட்டார்கள். மனிதருக்கு இறந்த பிறகு நல்ல யோகம். காந்தி மகான் காலமான செய்தியைக் கேட்டுத் துக்கம் தாங்க முடியாமல் சுட்டுக் கொண்டு செத்தார் என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. இதுவும் ஒருவிதமான யோகந்தானே!.....

சீதா இறந்து விட்டாள்; துரைசாமியும் போய்விட்டார். ஆனால் தாரிணி உயிரோடு இருக்கிறாள்

செத்துப் போனவர்களை மறந்துவிட்டு உயிரோடிப்பவர்களைப் பற்றிக் கவனிக்க வேண்டும்.

தாரிணி விஷயத்தில் நான் என்னுடைய கடமையைச் செய்யத் தயாராயிருக்கிறேனா? என்னுடைய இதயத்தின் உணர்ச்சியும் உள்ளத்தின் ஆசையும் என் அறிவு சொல்லும் முடிவும் ஒன்றாயிருக்கின்றனவா? தாரிணியிடம் இன்றைக்கு நான் சொன்ன வார்த்தைகள் எல்லாம் சத்தியமானவைதானா? என் இதயத்திலிருந்து உண்மையாகச் சொன்னவைதானா? அல்லது வீம்புக்காகவோ, ஜம்பத்துக்காகவோ அவசரப்பட்டுச் சொல்லிவிட்டேனா? இன்று நான் சொன்ன வார்த்தைகளுக்காகப் பிறகு எக் காலத்திலேனும் வருத்தப்படுவேனா?...

காந்தி மைதானத்தில் பழைய இடத்தில் இன்று மாலை நாங்கள் சந்தித்தோம். எங்கள் வருங்கால வாழ்வைப் பற்றிப் பேசினோம். அந்தச் சம்பாஷணையை ஒருவாறு இங்கே எழுதப் பார்க்கிறேன். எழுதிய பிறகு படித்துப் பார்த்தால் ஒருவேளை என்னுடைய பிசகை நானே தெரிந்து கொள்ள முடியும் அல்லவா?

முதலில் கொஞ்ச நேரம் சீதா, துரைசாமி ஐயர் — இவர்களுடைய பரிதாப மரணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

தாரிணி விம்மினாள்! அழுதாள். அவளுடைய கண்ணிலிருந்து கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்ற ஆர்வம் என் மனத்தில் எழுந்தது. ஆனால் அதற்குத் துணிவு வரவில்லை. ஏனெனில் அவள் முகத்தை முகமூடியால் மறைத்துக் கொண்டிருந்தாள். எதற்காக என்றுதான் எனக்குத் தெரியுமே! அன்றைக்கு — சீதாவின் உயிர் பிரிந்த அன்றைக்கு, — ஒரு நிமிஷம் பார்த்தேன்! ஐயோ! அதை நினைக்கவே பயங்கரமாயிருக்கிறது.

ஆயினும் அதனாலே தாரிணியின் விஷயத்தில் என்னுடைய மனம் சிறிதாவது சலித்ததா? ஒரு நாளும் இல்லை. அவளுடைய முகத்தை விகாரப்படுத்துவனவென்று மற்றவர்கள் நினைக்கக்கூடிய காயங்கள் அவளுடைய சௌந்தர்யத்தை அதிகமாக்குகின்றன என்றே நான் எண்ணுகிறேன். சீதா உயிர் விடும் தறுவாயில் அவளுடைய கண்களுக்கு அப்படித்தானே தோன்றியது?

என்றாலும், தாரிணியின் முகமூடியை நீக்குவதற்கோ கண்களைத் துடைப்பதற்கோ எனக்குத் தைரியம் வரவில்லை. ஒருவாறு விம்மலும் அழுகையும் நின்ற பிறகு, எத்தனை நேரம் போனதைப் பற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருப்பது? வருங்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டாமா? 'என்ன செய்வதாக உத்தேசம்?' என்று நான் கேட்டேன். பேச்சை அப்படித் திருப்பினால் அவளுடைய அழுகை நிற்கும் என்பதற்காகத்தான் அவ்விதம் கேட்டேன்.

'எனக்கு ஒரு உத்தேசமும் இல்லை. யோசனை செய்யும் சக்தியும் இல்லை. நீங்கள்தான் சொல்ல வேண்டும். உங்களுடைய வருங்காலத் திட்டம் என்ன?' என்று தாரிணி கேட்டாள்.

'என்னுடைய திட்டத்தை இப்போது எப்படிச் சொல்ல முடியும்? உன்னுடைய உத்தேசம் தெரிந்த பிறகுதான் என்னுடைய திட்டம் தயாராகும்' என்றேன்.

'எந்த விஷயத்தில் என்னுடைய உத்தேசம் தெரிய வேண்டும்? என் தந்தையைப் போல் உயிரை விட்டுவிட எனக்கு இன்னும் தைரியம் வரவில்லை!' என்றாள் தாரிணி.

'உயிரை விடுவதற்குத் தைரியம் வேண்டாம்; உயிரோடிருப்பதற்குத்தான் தைரியம் வேண்டும்' என்று நான் சொன்னேன்.

'அந்தத் தைரியம் எனக்கு வேண்டிய அளவு இருக்கிறது. மேலும், வஸந்தி விஷயமான பொறுப்பு ஒன்றும் எனக்கு இருக்கிறதல்லவா?' என்றாள் தாரிணி.

'வஸந்தி விஷயமான பொறுப்பும் இருக்கிறது. சீதாவுக்குக் கொடுத்த வாக்குறுதியும் இருக்கிறது. தாரிணி! அந்த வாக்குறுதியின்படி ராகவனைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினால் அதற்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன்.'

தாரிணி சிரித்தாள். அந்த நேரத்தில் அவள் அவ்விதம் சிரித்தது எனக்குப் பிடிக்கவில்லை.

'என்னத்துக்குச் சிரிப்பு?' என்று கேட்டேன்.

'நான் விரும்பினால் மட்டும் என்ன பிரயோஜனம்? அதற்குச் சௌந்தர ராகவன் அல்லவா இஷ்டப்பட வேண்டும்?' என்றாள்.

'இது என்ன பேச்சு? உன்னை விரும்பி மணந்து கொள்ள இஷ்டப்படாத மூடன் இந்த உலகத்தில் யார் இருக்க முடியும்?' என்றேன்.

'சூரியா! நீங்கள்கூட இப்படிப் பொய் வார்த்தை சொல்லுவது எனக்கு அதிசயமாயிருக்கிறது. இந்த முக மூடியை நீக்கி என் முகத்தின் கோர ஸ்வரூபத்தைப் பார்த்த யார்தான் என்னை மணந்து கொள்ளத் துணிவார்கள்?' என்றாள் தாரிணி.

'மன்னிக்க வேண்டும், தாரிணி! ராகவனுடைய சுபாவம் தெரிந்தும் நான் அவ்விதம் எதிர்பார்த்தது பிசகுதான்!' என்றேன்.

'அவரை மட்டும் சொல்வானேன்! இந்த உலகத்தில் பிறந்த எந்தப் புருஷனும் இப்படிப்பட்ட கோர முகம் உடையவளைக் கல்யாணம் செய்து கொள்ளமாட்டான்' என்றாள்.

'அப்படிச் சொல்ல வேண்டாம். சௌந்தரராகவனோடு எல்லோரையும் சேர்த்துவிட வேண்டாம். ராகவனுக்கு முகத்தின் அழகு ஒன்றுதான் தெரியும்; அகத்தின் அழகைப் பற்றி அவன் அறியமாட்டான். உண்மைக் காதல் என்பது இன்னதென்றும் அவனுக்குத் தெரியவே தெரியாது. ஆக்ரா கோட்டையில் அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனையில் முதன் முதலில் பார்த்ததிலிருந்து நான் உன்னைக் காதலித்து வருகிறேன். உன் முகத்தை நான் காதலிக்கவில்லை; உன்னைக் காதலிக்கிறேன்!' என்று ஆவேசமாகப் பேசினேன்.

தாரிணி சற்று மௌனமாயிருந்தாள். பிறகு, 'சூரியா! உங்களுடைய காதலைப் பற்றி எனக்கு எப்போதும் சந்தேகம் இல்லை. ஆனால் காதல் வேறு; கல்யாணம் வேறு. கல்யாணம் என்றால் புருஷன் மனைவியின் கரம் பிடிக்க வேண்டும் அல்லவா? பிடிப்பதற்குக் கை இல்லாவிட்டால்?......' என்றாள்.

நான் குறுக்கிட்டு, 'ராகவனுக்கு அது ஒரு தடையாயிருக்கலாம். கைகோத்துக் கொண்டு பார்ட்டிகளுக்குப் போக முடியாததை எண்ணி அவன் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லலாம். ஆனால் என் விஷயத்தில் அது ஒரு தடையாகாது. கரம் பிடிப்பது தான் கல்யாணம் என்று நான் கருதவில்லை. மனம் பிடிப்பதுதான் கல்யாணம். நம் இருவருடைய மனமும் ஒத்திருப்பதுபோல் வேறு எந்தத் தம்பதிகளின் மனமும் ஒத்திருக்கப் போவதில்லை. வேறு என்ன தடை? நீ முடிவு சொல்ல வேண்டியதுதான்; உடனே கல்யாணத்துக்குத் தேதி குறிப்பிட்டு விடலாம்!' என்றேன்.

உணர்ச்சி மிகுதியினால் தொண்டை அடைக்க, ஆனந்த மிகுதியினால் நாத் தழுதழுக்க, தாரிணி, 'சூரியா! உங்களைப் போன்ற உத்தமர் ஒருவர் இந்த உலகத்தில் இருக்கிறார் என்பதை நினைக்கும் போது எனக்கும் இந்த உலகத்தில் உயிரோடிருக்கலாம் என்ற ஆசை உண்டாகிறது. உங்களுடைய உயர்ந்த நோக்கத்தை நன்கு அறிந்து கொண்டேன். ஆயினும் யோசனை செய்வதற்கு எனக்குச் சில நாள் அவகாசம் கொடுங்கள்!' என்று சொன்னாள்.

* * *

மேலே நான் எழுதியிருப்பதையெல்லாம் இன்னொரு தடவை படித்துப் பார்த்தேன். தாரிணியிடம் நான் கூறிய வார்த்தையெல்லாம் உண்மைதானா என்று சிந்தித்தேன். என் இதயத்தின் ஆழத்தை எட்டிச் சோதனை செய்து பார்த்தேன். சந்தேகமே இல்லை. தாரிணியிடம் நான் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மைதான். அவளிடம் நான் கொண்ட காதலுக்கு ஆதி அந்தமில்லை; அழிவில்லை; முடிவில்லை. அது உடம்பைப் பற்றிய காதல் அல்ல; முகத்தையோ நிறத்தையோ பற்றிய காதல் அல்ல; மனத்துக்கு மனம் கொள்ளும் காதல் அல்ல. இரண்டு ஆத்மாக்கள் இதயாகாசத்தில் ஒன்று சேரும்போது ஏற்படும் புனிதமான தெய்வீகக் காதல். எங்களுடைய காதலுக்கு ஒப்புமில்லை; உவமையும் இடையாது.

சீதாவின் பேரிலும் முதல் தடவை அவளை நான் பார்த்த நாளிலிருந்து எனக்குப் பாசம் ஏற்பட்டது உண்மைதான். அதற்கும் இதற்கும் எவ்வளவோ வித்தியாசம். சீதாவுக்காக நான் என் உயிரைக் கொடுக்கத் தயாராயிருந்தேன். ஆனால் என் இதயத்தை அவளுக்குக் கொடுக்கத் தயாராயில்லை. சௌந்தர ராகவனிடம் வந்த கோபத்தி

னல் சில சமயம் சீதாவின் விடுதலைக்கு நான் விசித்திரமான சாதனைகளை எண்ணியதுண்டு. 'விவாகப் பிரிவினை செய்வித்துச் சீதாவை நான் கல்யாணம் செய்து கொண்டால் என்ன?' என்ற அசட்டு எண்ணம் ஒரு தடவை உண்டாயிற்று. அதை மனம் விட்டு அத்திம்பேரிடம்கூட ஒரு தடவை சொல்லிவிட்டேன். ஆனால் என் மனத்தில் ஒரு லவலேசமும் சீதா விஷயத்தில் களங்கம் ஏற்படவில்லை. இது சௌந்தரராகவனுக்கும் நன்றாய்த் தெரியும். ஆகையினால்தான் அவனுக்குச் சீதாவும் நானும் நெருங்கிப் பழகுவதில் கோபம் உண்டாகவேயில்லை. தாரிணிக்கும் எனக்கும் சிநேகம் என்பது பற்றித்தான் அவன் குரோதம் கொண்டான். அந்தக் கோபத்தினால் என்னைக் கொன்றுவிடவும், போலீஸாரிடம் என்னைப் பிடித்துக் கொடுத்துவிடவும் ராகவன் யத்தனித்தான்.

அவனுக்கு இப்போது படுதோல்வி தெய்வாதீனமாக நேர்ந்து விட்டது. உடலழகு ஒன்றையே கருதும் அந்தச் சுயநலம் பிடித்த தூர்த்தன் இனி என்னுடன் போட்டியிட முடியாது. அவனுடைய காதல் எல்லாம் வெறும் பொய் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. அவன் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். அந்தப் பாமாவையே அவன் கட்டிக் கொண்டு அழட்டும்!

தாரிணி இனிமேல் என்னுடையவள்; எனக்கே அவள் முழுதும் உரியவள். என்னிடமிருந்து இனி யாரும் அவளை அபகரிக்க முடியாது.

இதை நினைத்தால் எனக்குக் குதூகலமாய்த்தான் இருக்கிறது. சீதா இறந்துவிட்டதையும் அவள் தகப்பனார் சுட்டுக் கொண்டு செத்ததையும் நினைக்கும்போது கஷ்டமாயிருந்தாலும், இனித் தாரிணி எனக்கே உரியவள் என்பதை நினைத்தால் உற்சாகமாயிருக்கிறது.

கல்யாணத்துக்குத் தேதி குறிப்பிட வேண்டும்; காஷ்மீருக்குப் போக ஏற்பாடு செய்ய வேண்டும்.

42. லலிதாவின் மன்னி

தேவப்பட்டணத்துத் தேரோடும் வீதியில் எதிர் எதிராக நின்ற இரு மச்சு வீடுகளின் வாசலிலும் இப்போது போர்டு பலகைகள் தொங்கவில்லை. அட்வகேட் ஆத்மநாதய்யரைப் பின் தொடர்ந்து அவருடைய நண்பர் தாமோதரம் பிள்ளையும் தேவலோக நீதி மன்றத்தில் வழக்காடுவதற்குச் சென்று விட்டார்.

"ஆத்மநாதய்யர், பி.ஏ. பி.எல்." என்ற போர்டு தொங்கிய இடத்தில் சில காலம் "ஏ. பட்டாபிராமன், சேர்மன், முனிசிபல் கௌன்சில்" என்ற போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அதைச் சீக்கிரத்திலேயே எடுத்துவிட வேண்டியதாயிற்று. ஏனெனில், பட்டாபிராமனுக்குப் போட்டியாக நின்ற கள்ளமார்க்கெட் முதலாளி பட்டாபிராமனுடைய தேர்தலில் ஊழல் நடந்ததாகவும் அந்தத் தேர்தல் செல்லுபடியாகாதென்றும் வழக்குத் தொடர்ந்தார். பணத்தின் பலத்தினால் கள்ளமார்க்கெட் ஆசாமியின் பக்கம் தீர்ப்பாயிற்று. பட்டாபிராமனுடைய சேர்மன் பதவி போயிற்று.

அப்பீல் பண்ணும்படி சிலரும் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கும்படி சிலரும் பட்டாபிராமனுக்கு உபதேசித்தார்கள். லலிதா மட்டும், "போதும், போதும். ஒரு தடவை தேர்தலுக்கு நின்று பட்டதெல்லாம் போதும்!" என்று சொன்னாள். அவளுடைய யோசனையை ஏற்றுக் கொண்டு, பட்டாபிராமன் அப்பீல் செய்யவும் மறு தேர்தலுக்கு நிற்கவும் கண்டிப்பாக மறுதளித்துவிட்டான்.

தாமோதரம் பிள்ளையின் மரணத் தறுவாயில் ஊருக்கு வந்து சேர்ந்த அமரநாதன் திரும்பக் கல்கத்தாவுக்குப் போக விரும்பவில்லை.

நண்பர்கள் இருவரும் சுதந்திர இந்தியாவில் பொருள் வளத்தைப் பெருக்குவதற்கு ஏதேனும் தொழில் செய்ய வேண்டும் என்று யோசனை செய்து கொண்டிருந்தபோது காந்தி மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வந்து அவர்களைக் கலக்கத்தில் ஆழ்த்தி விட்டது. நாள்கணக்காக அந்தச் சம்பவத்தைப் பற்றியே அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர, வேறு எதைப் பற்றியும் சிந்தனை செய்ய இடமில்லை.

இந்த நிலைமையிலேதான் சீதாவின் மரணத்தைப் பற்றிய செய்தியும் வந்து அவர்களுடைய கலக்கத்தை அதிகமாக்கியது. கல்கத்தா சாலையில் மூர்ச்சையடைந்து கிடந்த சீதாவை எடுத்துச் சென்று உயிரளித்துக் காப்பாற்றியவனான அமரநாத் அவளுக்கு முடிவில் நேர்ந்த கதியை அறிந்து பெரிதும் பரிதாபப்பட்டான். பட்டாபிராமனோ சீதா தன் வீட்டில் தங்கியிருந்தபோது வாழ்க்கை எவ்வளவு குதூகலமாயிருந்தது என்பதையும்,

உணர்ச்சி வசப்பட்டுத் தான் செய்த சிறு தவறினால் அவளுக்கு நேர்ந்த கஷ்டங்களையும் நினைத்து நினைத்து வருந்தினான். சீதாவிடமிருந்த நல்ல குணங்களையும் துர்க் குணங்களையும் பற்றி அந்த நண்பர்கள் இருவரும் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டு ஒத்துப் பார்த்துக் கொண்டார்கள்.

ஆனால் அவர்களுடைய தர்மபத்தினிகளான லலிதாவும் சித்ராவுமோ சீதாவிடம் எந்தவிதமான துர்க்குணமும் இருந்ததாக ஒப்புக் கொள்ளவில்லை. லலிதா எல்லாத் தவறுகளையும் தன் பேரிலேயே போட்டுக் கொண்டு பச்சாத்தாபப் பட்டாள். சீதாவுக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கெல்லாம் தானே காரணம் என்று சொல்லிச் சொல்லிக் கண்ணீர் விட்டாள். சௌந்தரராகவன் தன்னைப் பார்க்க வந்த இடத்திலேதானே சீதாவைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டான்? தான் பட்டிருக்க வேண்டிய கஷ்டங்களையெல்லாம் அவனைக் கல்யாணம் செய்து கொண்டு சீதா அல்லவா அனுபவித்தாள்? அப்படிப்பட்டவள் தன்னுடைய சொந்த மனக் கஷ்டங்களை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இங்கே இருந்த சமயம் எவ்வளவு சந்தோஷமாக இருந்தாள்? அவள் இருந்தபோது தன் வீடு எவ்வளவு கலகலப்பாக இருந்தது? வாழ்க்கையே ஒரு புது மெருகு பெற்று ஆனந்த கோலாகலமாக மாறியிருந்ததே! அப்படிப்பட்டவளை அநாவசியமாகச் சந்தேகித்து வீண் பழி சொல்லி நடு ராத்திரியில் வீட்டை விட்டு ஓடும்படி செய்தேனே? அந்தப் பாவத்துக்காகக் கடவுள் என்னை என்ன மாதிரி தண்டிப்பாரோ, தெரியவில்லையே? — இப்படியெல்லாம் ஓயாது புலம்பிய லலிதாவுக்கு அவளுடைய தோழி சித்ரா பலவிதமாக ஆறுதல் சொன்னாள்.

''நீயும் நானும் என்னடி செய்யக் கிடக்கிறது? அவரவர்கள் தலைவிதிப்படி அல்லவா எதுவும் நடக்கிறது?'' என்றாள் சித்ரா.

''அழகாயிருக்கிறது நீ சொல்லுகிறது! எல்லாம் தலைவிதி என்றால் பாவ புண்ணியமே இடையாதா? காந்தி மகாத்மா இறந்ததும் தலைவிதிதானா? அவரைச் சுட்டுக் கொன்ற மகாபாவியின் பேரில் குற்றம் ஒன்றும் இல்லை என்றுகூடச் சொல்வாயோ?'' என்றாள் லலிதா.

''எதற்கும் எதற்கும் உவமானம் சொல்கிறாய் லலிதா! காந்தி மகாத்மா இறந்தது அவருடைய தலைவிதி என்றால், அவரைக் கொன்றவனைத் தண்டித்தால் அதுவும் அவன் தலைவிதிதானே? நாம் செய்யும் காரியங்களில் பாவ புண்ணியம் பார்த்துச் சரியான காரியத்தைச் செய்ய வேண்டும். அப்புறம் நடக்கிறது அவரவர்களின் தலைவிதிபோல் நடக்கும்!'' என்றாள் சித்ரா.

''சில பேர் இந்த உலகத்தில் பாவ புண்ணியம் பார்த்து நல்ல காரியங்களையே செய்து வருகிறார்கள். ஆனாலும் அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். வாழ்க்கையெல்லாம் சந்தோஷமேயில்லாமல் கஷ்டப்பட்டுச் சாகிறார்கள். இது அவர்கள் தலைவிதியா? பகவானுடைய செயலா? உன்னுடைய தத்துவம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை!'' என்றாள் லலிதா.

''முதலாவது நீ சொல்கிறதே தப்பு. வாழ்க்கையெல்லாம் சந்தோஷம் இல்லாமல் கஷ்டப்பட்டுச் சாகிறார்கள் என்கிறாய். ஏன் அப்படிச் சாகிறார்கள்? வெளிப் பார்வைக்கு நமக்கு அப்படித் தோன்றலாம். எல்லாருடைய வாழ்க்கையிலும் சந்தோஷமும் துக்கமும் மாறி மாறித்தான் வருகின்றன!''

''இல்லவே இல்லை! சீதாவையே பாரேன்! வாழ்க்கையெல்லாம் அவள் கஷ்டப்பட்டு விட்டுக் கடைசியில் செத்தும் போனாளே?''

''சீதா சந்தோஷம் என்பதையே அறியாமல் செத்துப் போனாள் என்றா சொல்கிறாய்? சுத்தத் தவறு, லலிதா! நானும் சீதாவுடன் கொஞ்சம் பழகியிருக்கிறேன். அவள் சந்தோஷப்பட்டதும் அதிகம்; துக்கப்பட்டதும் அதிகம். இந்த உலகத்தில் சிலருடைய வாழ்க்கை சந்தோஷமும் இல்லாமல் துக்கமும் இல்லாமல் எப்போதும் சப்புச் சவுக்கென்று இருந்து கழிந்துவிடுகிறது. அவர்கள்தான் இந்த உலகத்தில் பாக்கியசாலிகள் என்று என்னால் ஒத்துக் கொள்ள முடியாது. வங்காளத்து மகாகவி ரவீந்திரநாத தாகூர் என்ன சொல்கிறார் தெரியுமா? 'ஆண்டவனே! எனக்கு வேறு ஒரு பாக்கியமும் இந்த உலகத்தில் வேண்டாம்; கண்ணீர் பெருக்கி அழும் பாக்கியத்தைக் கொடு!' என்று கடவுளை வரம் கேட்கிறார். துக்கமும் சந்தோஷமும் கலந்த வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை. காவியங்கள், இதிகாசங்கள், கதைகள்,— எல்லாவற்றையும் பார்! கதாநாயகர்கள் — கதாநாயகிகளில் கஷ்டப்படாதவர்கள் யார்?''

''சீதாவின் வாழ்க்கையும் ஒரு கதையாகத்தான் முடிந்துவிட்டது. சித்ரா! உனக்குத் தெரியுமோ என்னமோ? சீதாவுக்கு அந்த நாளிலிருந்தே கதைத்

என்றால் ரொம்பப் பிரியம். ராஜம்பேட்டைக் குளத்தங்கரையில் மூன்னிலவு வீசும் இரவுகளில் அவளும் நானும் கதை பேசிக் கழித்த நாட்களை நினைத்தால் எனக்குக் கபீர் என்கிறது. எத்தனை எத்தனை கதைகள் சொல்வாள்? லைலா மஜ்னூன் கதை, ரோமியோ ஜூலியட் கதை, அனார்கலியின் கதை, தமயந்தி நளன் கதை, சகுந்தலை துஷ்யந்தன் கதை, — இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டிருப்பாள். கதை சொல்லும்போதெல்லாம் தானே அந்தக் கதாநாயகி என்று நினைத்துக் கொண்டு விடுவாள். பாவம்! அவளுக்கா இப்படிப்பட்ட கதி வர வேண்டும்? அவள் எத்தனை எத்தனை கனவு கண்டாள்! ஒரு கனவும் பலிக்காமல், ஒரு சுகத்தையும் அநுபவிக்காமல் போய் விட்டாளே?'' என்று சொல்லிவிட்டு லலிதா 'ஓ' வென்று அழுதாள்.

சித்ரா அவளைச் சமாதானப்படுத்த முயன்றாள். நல்ல வார்த்தை சொல்லிப் பயன்படாமற் போகவே கோபமாகவும் பேசினாள்.

கடைசியாக, ''சீதாவுக்காக இவ்வளவு வருத்தப்பட்டுக் கண்ணீர் விடுகிறாயே? அவளுடைய தமக்கையைப் பற்றிக் கொஞ்சம் அநுதாபம் காட்டக் கூடாதா? செத்துப் போன சீதாவைக் காட்டிலும் ஒரு கண்ணையும் ஒரு கையையும் இழந்து உயிரோடு இருக்கிறாளே, அவளுடைய கதி இன்னும் பரிதாபம் இல்லையா?'' என்றாள்.

லலிதாவின் அழுகையும் கண்ணீரும் நின்றன.

''அதை நினைத்தால் ரொம்பப் பரிதாபமாய்த்தான் இருக்கிறது. 'என் மூத்த அத்தங்காளை நான் பார்த்ததேயில்லை. முதன் முதலில் பார்க்கும் போது இப்படிப் பார்க்க வேண்டுமா என்று கஷ்டமாயிருக்கிறது!'' என்று சொன்னாள் லலிதா.

'' இதிலேகூட உன்னுடைய மனக் கஷ்டத்தையே பார்க்க வேண்டுமா, லலிதா! அடுத்தாற்போல் உன் தமையன் சூரியாவைப் பார்! தீரன் என்றால் அவன் அல்லவா தீரன்? அப்படி அங்கஹீனமானவளைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்ல யாருக்குத் துணிச்சல் வரும்? உன் அகத்துக்காரரும் சரி, என் அகத்துக்காரரும் சரி, பத்து காத தூரம் ஓடிப் போவார்கள். சீதாவின் கணவன் இருக்கிறானே, அந்த மகராஜன் அவனைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை! கல்கத்தாவிலே அவன் சுரம் வந்து படுத்தபோது எனக்குக் கொஞ்சம் இரக்கமாயிருந்தது. இப்போது என்ன தோன்றுகிறது தெரியுமா? அவன் எதற்காகப் பிழைத்தான், கல்கத்தாவிலேயே செத்துப்போன அத்தனை ஆயிரம் பேரோடு அவனும் தொலைந்து போயிருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது.''

''அதெல்லாம் சரிதான், சித்ரா! அவர்கள் எல்லோரும் பொல்லாதவர்களாகவே இருக்கட்டும். சூரியா இந்த விஷயத்தில் செய்கிற காரியம் சரியா? எனக்கென்னமோ சரியாகத் தோன்றவில்லை. அப்படியாவது என்ன கல்யாணம் வேண்டிக் கிடந்தது! ஒரு கையும் ஒரு கண்ணும் இல்லாதவளைக் கல்யாணம் செய்து கொள்ளவாவது? ஊருக்கெல்லாம் பரிகாசமாய்ப் போய்விடும்!'' என்றாள் லலிதா.

''அது உனக்கு ரொம்ப அவமானமாகத்தான் இருக்கும்! ஒரு கண்ணும் ஒரு கையும் இல்லாதவளை மன்னி என்று அழைக்க உனக்கு வெட்கமாயிராதா? ஆனால் லலிதா! உன்னை அப்படியெல்லாம் சூரியா அவமானப்படுத்த மாட்டான். இங்கே தாரிணியை அழைத்துக் கொண்டு வரவே மாட்டான். அப்படி வருவதாயிருந்தால் நீ ராஜம்பேட்டைக்குப் புறப்பட்டுப் போய்விடு! வந்தவர்களை நான் நன்றாய்த் திட்டித் திருப்பி அனுப்பி விடுகிறேன். அந்த வெட்கம் கெட்ட மூளிகள் இங்கே எதற்காக வரவேண்டும்?'' என்று சித்ரா லலிதாவை ஏசுகிற பாவத்தில் பேசினாள்.

'' அவ்வளவு கொடுமையானவள் அல்ல நான். இருந்தாலும் சூரியாவுக்கு இப்படியா ஒரு கல்யாணம் என்று நினைத்தால் வருத்தமாய்த்தான் இருக்கிறது, அம்மாவுக்கு இது தெரிந்தால் உயிரையே விட்டுவிடுவாள் ''

''உயிரை விட்டால் விடட்டுமே! உலகத்தில் எத்தனையோ பேர் செத்துப் போகிறார்கள்! நிமிஷத்துக்கு லட்சம் பேர் சாகிறார்கள்! காந்தி மகானே போய்விட்டார். உன் அம்மா இருந்து என்ன ஆகவேணும்? சூரியாவைப் போன்ற பிள்ளையைப் பெறுவதற்கு உன் அம்மா தபஸ் செய்திருக்க வேண்டும். அதை அவள் தெரிந்து கொள்ளாவிட்டால் யாருடைய தப்பு? நீயும் அவளோடு சேர்ந்து ஏன் அழவேண்டும்? நானாயிருந்தால் இப்படிப்பட்ட தமையனைப் பெற்றதை எண்ணி இறுமாந்து போவேன். 'என் அண்ணனுக்கு நிகர் இல்லை' என்று ஊரெல்லாம் தம்பட்டம் அடிப்பேன். எங்கே, லலிதா! சூரியாவின் கடிதத்தில் அந்தப் பகுதியை மட்டும் எனக்கு இன்னொரு தடவை வாசித்துக் காட்டடி!''



கீழே கிடந்த கடிதத்தை லலிதா எடுத்து ஒரு தடவை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாள். அவளுடைய கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, கடிதத்தில் பின்வரும் பகுதியைப் படிக்கத் தொடங்கினாள்:

''அருமைத் தங்கையே! உனக்கும் சீதாவுக்கும் ஒரே பந்தலில் இரட்டைக் கல்யாணம் நடந்ததே ஞாபகம் இருக்கிறதா? இது என்ன கேள்வி? உன் கல்யாணம் உனக்குக் கட்டாயம் ஞாபகம் இருக்கும். கல்யாணத்துக்கு இரண்டு நாளைக்கு முன்னால் நமக்குள்ளே ஒரு விவாதம் நடந்தது. சீதாவும் நீயும் நானும் குளத்தங்கரைப் பங்களாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது தான் கல்யாணத்தின்போது, அம்மி மிதிப்பதற்கு முன்னால் அக்கினி வலம் வருகையில் மாப்பிள்ளை மணப் பெண்ணின் கையைப் பிடித்துக் கொள்ள வேண்டுமே, — எந்தக் கையினால் எந்தக் கையைப் பிடித்துக் கொள்வது? என்ற கேள்வி ஏற்பட்டது. மாப்பிள்ளையின் வலது கரத்தினால் மணப் பெண்ணின் இடது கரத்தைப் பிடிப்பதா? அல்லது வலது கரத்தைப் பிடிப்பதா யிருந்தால் இரண்டுபேரும் நடந்து எப்படி பிரதட்சணம் வர முடியும் என்று வெகு நேரம் தர்க்கம் செய்தோம். ஒவ்வொருவர் ஓர் அபிப்பிராயம் சொன்னோம். கல்யாணம் நடந்தபோது அந்த விஷயத்தை நான் கவனிக்க வில்லை; அதைப் பற்றிப் பிறகு பேசவும் இல்லை.

''லலிதா! அத்தங்காள் தாரிணியை, நான் கல்யாணம் செய்து கொள்ளும் போது அந்தக் கஷ்டமான பிரச்னை ஏற்படவே ஏற்படாது. அவளுக்கு இருப்பது ஒரே ஒரு கைதான். அதைத்தான் நான் பிடித்துக் கொண்டாக வேண்டும். இன்னொரு கை இல்லை என்பது பற்றி எனக்கு வருத்தம் கிடையாது. அதை நினைக்கும்போதெல்லாம் நான் பூரித்து மகிழ்வேன். தாரிணி இழந்துவிட்ட அந்த ஒரு கை இருநூறு ஸ்திரீகளைக் காப்பாற்றியது என்பதையும், சீதாவின் குழந்தையைக் காப்பாற்றிய கை அது தான் என்பதையும் நினைத்து நினைத்துக் கர்வம் அடைவேன். நான் மிகவும் அதிர்ஷ்டக்காரன். இத்தனை நாட்கள் கல்யாணம் செய்து கொள்ளாமல் நான் காத்துக் கொண்டிருந்தது வீண் போகவில்லை! இனி என் வாழ்நாளில் என்றென்றைக்கும் ஆனந்தம்தான்! ...

''லலிதா! தாரிணியின் அழகைப் பற்றி முன் இரண்டொரு தடவை உனக்குச் சொல்லி யிருக்கிறேன். ஆனால் முன்னேயெல்லாம் அவளுடைய அழகு மனித உலகத்துக்குரிய அழகா யிருந்தது. இப்போதோ தெய்விக சௌந்தர்யம் பெற்று விளங்குகிறாள் என் கண்களுக்கு. வேறு யார் என்ன நினைத்தால் அதைப் பற்றி எனக்கு என்ன? யார் என்ன வம்பு பேசினால் எனக்கு என்ன?''

கடிதத்தைப் படிக்கும்போது லலிதாவுக்குத் தொண்டையை அடைத்தது. சித்ராவுக்கோ கண்ணில் கண்ணீர் வந்து விட்டது. கொஞ்சம் உணர்ச்சி அடங்கிய பிறகு சித்ரா கூறியதாவது:

''லலிதா! நம்முடைய தேசத்து மகான்கள், 'உலகத்தில் துன்பம் என்பதே இல்லை. துன்பம் என்பது வெறும் மாயைதான்' என்று சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் சில மகான்கள் துன்பத்திலே தான் உண்மையான இன்பம் இருக்கிறது என்றும் சொல்லி யிருக்கிறார்கள். அதன் பொருள் இத்தனை நாளும் எனக்கு விளங்காமல் இருந்தது. இன்றைக்குத்தான் விளங்குகிறது. பிறருடைய துன்பத்தைத் துடைப்பதற்காக நாம் கஷ்டப்பட்டோமானால் அதைப் போன்ற இன்பம் இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை. மறு உலகத்திலும் கிடையாது. உனக்கு மன்னியாக வரப் போகிறவள் அந்த ஆனந்தத்துக்கு உரியவளா யிருக்கிறாள். அதை அறிந்த அதிர்ஷ்டசாலி உன் தமையன் சூரியா! அவர்கள் இரண்டு பேரையும் மணம் புரிந்த தம்பதிகளாகப் பார்க்க வேண்டும் என்று எனக்கு மிக்க ஆவலா யிருக்கிறது!''


பேராசிரியர்
கல்கி
படைத்த
பேரிலக்கியம்


சிவகாமியின்
சபதம்
கல்கி
ஆகஸ்ட் 5௳ இதழில்
ஆரம்பம்

43. பாமா விஜயம்

ராஜம்பேட்டை கிராமச்சாலை முன் போலவே இருபுறமும் மரம் அடர்ந்து நிழல் படர்ந்து விளங்கியது. தபால் சாவடியும் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் அளித்த தோற்றத்துக்கு அதிக மாறுபாடில்லாமல் .காட்சி அளித்தது. ரன்னர் தங்கவேலு முன்னைப் போல் அவ்வளவு அவசரப்படாமல் சாவதானமாக நடந்து தபால் கட்டை எடுத்துக் கொண்டு வந்தான். ஜிங் ஜிங் என்ற சதங்கையின் ஒலி சவுக்க காலத்தில் கேட்டது.

ராஜம்பேட்டை அக்கிரகாரம் அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாமல் இருந்தது. உலகமே தலைகீழாகப் புரண்டாலும் நம்முடைய கிராமங்களில் அவ்வளவாக மாறுதலைக் காண முடியவில்லை. அப்படி மாறுதல் இருந்தால் முன்னே வீடாக இருந்த சில கட்டிடங்கள் இப்போது குட்டிச்சுவர்களாக மாறியிருக்கலாம். வேறு பிரமாத மாறுதலைப் பார்த்துவிட முடியாது.

ராஜம்பேட்டை முன்னைப் போல் அவ்வளவு கலகலப்பாயில்லை என்பது மட்டும் உண்மை. ஏனெனில், இப்போது அங்கே பட்டாமணியம் கிட்டாவய்யர் இல்லை. அவர் பார்த்த பரம்பரைக் கிராம முன்சீப் உத்தியோகத்தைச் 'கண்டு' என்கிற சியாமசுந்தர் பார்த்து வந்தான். ஸினிமா டைரக்டர் ஆகும் ஆசையை சொல்லாம் அவன் விட்டுவிட்டான். ''படம் எடுத்தால் சீதாவைக் கதாநாயகியாக வைத்து எடுக்க வேண்டும்; இல்லாவிடில் என்ன பிரயோஜனம்?'' என்பது அவன் கருத்து. கொஞ்ச நாள் முன்பு வரையில்கூட அந்த ஆசை அவனுக்குச் சிறிது இருந்தது. சீதா இறந்த செய்தி வந்த பின் அடியோடு போய் விட்டது. பின்னர், நிம்மதியாகக் கிராம முன்சீப் வேலையைப் பார்த்து வந்தான்.

ஊரில் கலகலப்புக் குறைந்திருந்ததற்கு இன்னொரு காரணம், 'என்ன ஓய்?' சீமாச்சுவய்யர் ஊரில் இல்லாதது. அவர் இப்போது சிறைச்சாலையில் இரண்டு வருஷங்கள் கடுங்காவல் அனுபவித்துக் கொண்டிருந்தார். கள்ளமார்க்கெட் கேஸில் அசல் முதலாளி தப்பித்துக்கொண்டு சீமாச்சுவய்யரை மாட்டி வைத்து விட்டான். அதைப் பற்றி ஊரில் யாரும் அநுதாபப் படவில்லை. நடுவில் பணம் அதிகமாக வந்தபோது சீமாச்சுவய்யர் யாரையும் இலட்சியம் செய்யாமல் அகம்பாவத்துடன் நடந்து கொண்டார். ஆகவே அவர் சிறைப்பட்டபோது கிராமத்தார், ''என்ன ஓய்? சீமாச்சு, உயிரோடு திரும்பி வருவாரு?'' என்று கேட்டுக் கொள்வதோடு திருப்தியடைந்தார்கள்.

* * *

கிட்டாவய்யர் வீட்டுக் கூடத்தில் லலிதா உட்கார்ந்து குழந்தை பட்டுவின் தலையை வாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். சரஸ்வதி அம்மாள் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்தாள். குழந்தை பாலசுப்பிரமணியன் ஏதோ ஒரு வாரப் பத்திரிகையில் வந்திருந்த காந்திமகான் கதையை எழுத்துக் கூட்டி இரைந்து படித்துக் கொண்டிருந்தான்.

தபால் ரன்னர் வரும் 'ஜிங்ஜிங்' சத்தம் கேட்டதும் லலிதாவுக்குப் பழைய ஞாபகங்கள் உண்டாகிக் கண்கள் ஈரமாயின.

''லலிதா! பட்டுவின் வயதில் நீ தபால் கட்டு வரும் சத்தம் கேட்டதும் எழுந்து தபாலாபீசுக்கு ஓடுவாயே! ஞாபகம் இருக்கிறதா?'' என்று சரஸ்வதி அம்மாள் கேட்டாள்.

''ஞாபகம் இல்லாமல் என்ன? நன்றாய் இருக்கிறது. இப்போது கூடத் தபாலாபீஸுக்குப் போய் ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா என்று பார்த்து விட்டு வரத் தோன்றுகிறது!'' என்றாள் லலிதா.

''நீ அப்படிப் போனாலும் போவாய்! உன் நெஞ்சுத் தைரியம் யாருக்கு வரும்?'' என்றாள் தாயார்.

* * *

அரை மணி நேரத்துக்குப் பிறகு, வாசலில் ''தபால்!'' என்ற சத்தம் கேட்டதும் லலிதா விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள். ஒரு கணம் ஒருவேளை தபால்கார பாலகிருஷ்ணனாயிருக்குமோ என்று எண்ணினாள். பார்த்தால், உண்மையிலேயே அந்தப் பழைய பாலகிருஷ்ணன்தான்!

''நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்களா அம்மா? ரொம்ப சந்தோஷம். எனக்கும் டவுன் வாழ்க்கை பிடிக்கவில்லை. ஒரு வழியாக இங்கேயே வந்துவிட்டேன்'' என்றான் பாலகிருஷ்ணன்.

''கொஞ்ச நாட்களாக உன்னைத் தேவப்பட்டணத்தில் காணுமே என்று பார்த்தேன்! குழந்தைகள் சௌக்கியமா?'' என்றாள் லலிதா.

''கடவுள் புண்ணியத்திலே சௌக்கியந்தான். ஆனால் என்ன சௌக்கியம் வேண்டிக் கிடந்தது? அப்பேர்ப்பட்ட காந்தி மகாத்மாவையே சுட்டுக் கொன்று விட்டார்கள். இனிமேல் யார் சௌக்கியமாயிருந்தால் என்ன? இல்லா

விட்டால் என்ன?'' என்றான் பால கிருஷ்ணன்.

பிறகு, ''இந்தாருங்கள் தபால்!'' என்று ஒரு கடிதத்தை லலிதாவிடம் கொடுத்துவிட்டுப் போனான்.

லலிதா கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். அவளுடைய கணவனிடமிருந்து வந்திருந்தது. அதில் அவர் குழந்தைகளின் க்ஷேம லாபங்களை விசாரித்த பிறகு எழுதியிருந்ததாவது:

''ஓர் அதிசயமான சமாசாரம் சொல்லப்போகிறேன். ஆச்சரியப்பட்டு மூர்ச்சையாகி விழுந்து விடாதே! உன் தமையன் சூரியா வந்திருக்கிறான். அவனுடைய மனைவியையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான். அவனுடைய மனைவியைப் பார்த்ததும் உனக்கு ஒரு வேளை ஏமாற்றம் உண்டாகலாம். விஷயம் என்னவென்று கடிதத்தில் எழுத விரும்பவில்லை. நேரிலேயே பார்த்துத் தெரிந்து கொள். மூன்று பேரும் நாளை ரயிலில் புறப்பட்டு அங்கே வருகிறோம்.''

இதைப் படித்ததும் லலிதா மிக்கக் கலக்கம் அடைந்தாள். அவள் முக்கியமாக ராஜம்பேட்டைக்கு வந்தது தன் தாயாரிடம் சூரியாவின் கல்யாணத்தைப் பற்றிச் சொல்வதற்காகத்தான். ஆனால் இன்றுவரையில் அவளுக்குத் தைரியம் வரவில்லை. இனிமேல் தள்ளிப் போட முடியாது. அவர்கள் நாளைக்கு வந்துவிடுவார்களே?

சரஸ்வதி அம்மாளிடம் லலிதா மாப்பிள்ளையிடமிருந்து கடிதம் வந்ததுபற்றி முதலில் சொன்னாள். சூரியாவையும் அவர் அழைத்து வருவது பற்றிப் பிறகு சொன்னாள். சூரியா கல்யாணம் செய்து கொண்டு மனைவியையும் தன்னுடன் அழைத்து வருவதைப் பற்றிக் கடைசியாகக் கூறினாள்.

சரஸ்வதி அம்மாள் வியப்படைந்தாள்; மகிழ்ச்சி யடைந்தாள்; பிறகு திடுக்கிட்டுப் போனாள்.

''கல்யாணமா? அது என்ன? நம் ஒருவருக்கும் சொல்லாமலா? இப்படியும் உண்டோ? பெண் யாரோ? என்னமோ, தெரியவில்லையே?'' என்று புலம்பி அங்கலாய்த்தாள்.

''அதென்னமோ, போ, அம்மா! நானும் முன்னாலேயே கேள்விப்பட்டேன். உண்மையா யிராது என்று நினைத்தேன். இப்போது வந்திருக்கும் கடிதத்தைப் பார்த்தால் உண்மை என்றே தோன்றுகிறது'' என்றாள்.

''என்னடி உண்மை? நீ என்ன கேள்விப்பட்டாய்?'' என்றாள்.

''சூரியா கல்யாணம் செய்து கொண்டிருக்கும் பெண்ணுக்கு ஏதோ அங்கஹீனம் என்று கேள்வி. சிலர் 'ஒரு கண்ணில்லை' என்கிறார்கள். சிலர் 'ஒரு கை இல்லை' என்கிறார்கள். சூரியாவின் காரியமே இப்படித்தான். என்னமோ போ, அம்மா! ரொம்ப விசாரமாயிருக்கிறது!''

''இதென்னடி அநியாயம்? இப்படியும் ஒரு பிள்ளை செய்வானோ? அது நிஜமாயிருக்குமாடி? நிஜமா யிருந்தால் நாலு பேர் முகத்தில் எப்படி விழிப்பேன்?'' என்று சரஸ்வதி அம்மாள் புலம்பினாள்.

கலப்படத்திலும் கலப்படம்!

குங்குமப் பூவில் கலர் போட்ட தேங்காய்த் துருவலைப் போட்டு வந்தார்கள். தேங்காய்ப் பூவாவது சுத்தமாக இருக்கும். ஆனால் இப்போ தேங்காய் விலையும் ஏறிவிட்டதாலோ என்னவோ ஆரோ ரூட் கிழங்கைப் பக்குவமாகச் சீவிக் கலந்து விடுகிறார்கள்!

காரவன் கருத்து - பாபு

பட்டாபிராமனும், சூரியாவும், சூரியாவின் மனைவியும் 'ஜல்ஜல்' என்று சதங்கை சப்தித்த மாட்டு வண்டியில் வந்து இறங்கினார்கள். லலிதா பரபரப்புடன் ரேழிக்குப் போனாள். தாரிணியைப் பார்ப்பதற்கு அவள் மனம் துடிதுடித்தது. எவ்வளவுதான் மனசைத் திடப்படுத்திக் கொண்டிருந்தாலும் சமயத்தில் கேட்கவில்லை. நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டது. தாரிணியைப் பார்த்ததும் அம்மா என்ன ரகளை செய்யப் போகிறாளோ என்ற பீதி வேறு இருந்தது.

முதலில் பட்டாபியும் சூரியாவும் இறங்கினார்கள். பிறகு ஒரு ஸ்திரீ இறங்கினாள். இது என்ன விந்தை? எதிர்பார்த்தபடி இல்லையே? இரண்டு கைகளிலும் இரண்டு கைப்பெட்டியுடன் இறங்குகிறாளே? கண்களிலும் ஊனம் இல்லையே? நவநாகரிகத்தில் கொஞ்சம் அதிகம் மூழ்கினவளாகக் காணப்பட்டாள். மற்றபடி அங்கஹீனம் ஒன்றும் தெரியவில்லை. பின்னால் ஒருவேளை தாரிணி இறங்குகிறாளோ என்று பார்த்தாள். அப்புறம் யாரும் இறங்கவில்லை. வந்தவர்களை முகமன் கூறி க்ஷேமம் விசாரித்து உள்ளே அழைத்துப் போனாள். ''சூரியா! இந்த லேடி யார்? நீ எழுதியிருந்தாயே?...''என்று ஆரம்பித்தாள்.

''நான் எழுதியிருந்தது வேறு. இந்தப் பெண்ணரசிதான் என்னை மணக்க முன்வந்த என் மனைவி. இவள் ஆதிவராகாச்சாரியார் மகள். இவள் பெயர் பாமா. எங்களுக்குக் கல்யாணம் ஆகி இரண்டு வாரம் ஆகிறது. 'ஹனிமூன்' வந்திருக்கிறோம்'' என்றான் சூரியா.

லலிதாவின் மனம் நிம்மதி அடைந்து லலிதாவின் தாயாரும் தன் மாட்டுப் பெண் பார்ப்பதற்கு ஒரு மாதிரி பரட்

டைத் தலைப் பிசாசு மாதிரி இருந்தாலும் லலிதா சொன்னது போல் அங்கஹீனமா யில்லை என்பது குறித்து மனத்துக்குள்ளே திருப்தி அடைந்தான்.

பிறகு லலிதா சூரியாவைத் தனியாகச் சந்தித்துப் பேசியபோது அவன் கூறியதாவது: ''உனக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகத்தானிருக்கும். எனக்கோ அதைவிட ஏமாற்றமாக இருந்தது. ஆனால் ஏமாற்றியவள் அத்தங்கா தாரிணியல்ல! சௌந்தரராகவன்தான். அவனுடைய சுபாவத்தை அறிந்திருந்த அனைவரையும் ஏமாற்றி விட்டான். தாரிணியைத் தான் கல்யாணம் செய்து கொண்டே தீருவேன் என்றும், அவளுடைய முக லாவண்யத்துக்காக அவளிடம் தான் பிரியம் வைக்கவில்லை என்றும் சத்தியம் செய்தான். மேலும் சீதாவுக்குத் தாரிணி கொடுத்த வாக்குறுதியை மீறக் கூடாதென்றும், தன்னிடமும் அதே விஷயத்தைச் சீதா சொல்லியிருக்கிறாள் என்றும் வற்புறுத்தினான். தாரிணி அநேக ஆட்சேபங்களைச் சொல்லியும் கேட்கவில்லை. 'டில்லியில் உங்களுடைய உத்தியோக வாழ்க்கைக்கு இடைஞ்சலாயிருக்கும்' என்று தாரிணி சொன்னபோது உத்தியோகத்தை விட்டுவிட முன்னமே தீர்மானித்து விட்டதாகப் பதில் சொன்னான். லலிதா! உண்மையில் தாரிணிக்கு ராகவன் பேரில் இருதயபூர்வமான அன்பு என்று தெரிந்து கொண்டேன். ஆகவே நான் விட்டுக் கொடுத்து அவர்களுடைய திருமணத்தையும் கூட இருந்து நடத்தி வைத்தேன். சௌந்தரராகவன் உண்மையாகவே உத்தியோகத்தை விட்டு விட்டான். இருவரும் வஸந்தியை அழைத்துக்கொண்டு ரஜனிப்பூருக்குப் போயிருக்கிறார்கள். ரஜனிப்பூர் ராஜ்யம் இந்தியாவுடன் சேர்ந்து ஐக்கியமாகி விட்டாலும், ரஜனிப்பூர் ராணியம்மாளுக்கு ஏராளமான சொந்த சொத்து இருக்கிறது. தாரிணியின்பேரில் அவளுக்கு மிக்கப் பிரியம். இரண்டுபேரும் ரஜனிப்பூருக்கு வந்து பஞ்சாப் அகதிகளுக்கு உதவி செய்து குடியும் குடித்தனமுமாக முயலவேண்டும் என்றும், அதற்காகத் தன் சொத்துக்களை யெல்லாம் எழுதி வைப்பதாகவும் ரஜனிப்பூர் ராணியம்மாள் சொன்னாள். அதனால் இருவரும் ரஜனிப்பூருக்குப் போயிருக்கிறார்கள். குழந்தை வஸந்தியையாவது நான் என்னுடன் ராஜம்பேட்டைக்கு அழைத்துப் போவதாகச் சொன்னேன். அந்தக் குழந்தையும் கண்டிப்பாக வர மறுத்து விட்டாள்!''

இந்தக் கடைசி வாக்கியங்களை மட்டும் கேட்டுக் கொண்டு வந்த சரஸ்வதி அம்மாள், ''ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. அவளுடைய தாயார் இங்கே படுத்திய பாடெல்லாம் போதாதா? பெண் வேறே வந்து கலகம் பண்ண வேண்டுமா?'' என்றாள். அம்மாவின் சுபாவம் தெரிந்தவர்களானதால் மற்றவர்கள் சும்மா இருந்து விட்டார்கள்.

பிறகு லலிதா, ''இந்தப் பெண்ணை எப்படிப் பிடித்துக் கல்யாணம் செய்து கொண்டாய்?'' என்று கேட்டாள்.

''முதலில் இவள் பேரில் எனக்கு மிக்க வெறுப்பு இருந்தது. இவளுடைய குணாதிசயங்களைப் பற்றி மிகவும் தப்பான அபிப்பிராயம் கொண்டிருந்தேன். தாரிணிதான் இவளைப் பற்றி எனக்குச் சொன்னாள். முதன் முதலில் என்னைப் பார்த்ததிலிருந்து இவளுக்கு என்பேரில் பிரியம் என்றும் சொன்னாள். அதுமட்டுமல்ல; 1942 இயக்கத்தின்போது இவள் சர்க்கார் உத்தியோகக் கோஷ்டியுடனே வெளிப்படையாகப் பழகிக் கொண்டே உள்ளுக்குள் இயக்கத்துக்கு மிக்க உதவி செய்தாளாம். தாரிணியைப் போலீசார் கைது செய்யாமல் இவள்தான் ரொம்ப நாட்கள் பாதுகாத்து வந்தாளாம். என்னைப் போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்புவிப்பதற்கும் இவள்தான் உதவி புரிந்தாளாம். இவ்வளவுக்கும் மேல் இவள் பஞ்சாபுக்கு முன்னதாகவே போய்ச் சீதாவைக் காப்பாற்றிக் கொண்டு வர முயன்றாளாம். இதையெல்லாம் கேட்டதும் என் மனம் அடியோடு மாறிவிட்டது. பேசிப் பார்த்ததில் என்னுடைய லட்சியமும் இவளுடைய லட்சியமும் ஏறக்குறைய ஒன்று தெரிந்தது. இவளுடைய வெளித் தோற்றத்தைப் பார்த்து ஒன்றும் முடிவு செய்யாதே, லலிதா! உன் மன்னியுடன் பழகிப் பார்த்துவிட்டுப் பிறகு சொல்லு!''

* * *

வெளியே சென்றிருந்த சியாமசுந்தர் திரும்பி வந்து அண்ணாவையும் மன்னியையும் பார்த்து மகிழ்ச்சி யடைந்தான். சூரியாவின் கல்யாணம் ஆகிவிட்டதால் தன்னுடைய கல்யாணத்துக்குத் தடை நீங்கிவிட்டதல்லவா?

''அண்ணா! ரிடர்ன் டிக்கட் வாங்கிக் கொண்டு வந்தாயா? அல்லது கொஞ்ச நாள் இங்கே இருப்பதாக உத்தேசமா?'' என்று கேட்டான்.

''நீ எங்களை விரட்டி யடித்தாலொழிய ரொம்ப நாள் இங்கே இருப்பதாக உத்தேசம். தேசம் சுதந்திரம் அடைந்து விட்டது. காந்தி மகாத்மா இறுதியாக ஆத்ம தியாகம் செய்து நாட்டில் அமைதியையும் நிலைநாட்டி விட்டார். இனிமேல் தேசத்தில் செய்ய

வேண்டியதெல்லாம் பொருள் உற்பத்தியும் உணவு உற்பத்தியும்தான். முதலில் நம்முடைய சொந்தக் கிராமத்திலிருந்து ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறேன். உழுது பாடுபடுகிறவர்களுக்கு உற்சாகம் ஊட்ட வேண்டும்...''

''இப்போது இங்கேயெல்லாம் அவ்வளவு கிஸான் தொந்தரவு கிடையாது. கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவன் கிஸான் சங்கத்தின் பணம் ஐயாயிரத்தை சூறையிட்டுக் கொண்டு போய் விட்டான். அதிலிருந்து இயக்கம் படுத்து விட்டது. இனிமேல், நீ ஆரம்பித்தால்தான் உண்டு!''

''கிஸான் இயக்கம் இல்லை என்று திருப்திப்படுவதில் பயனில்லை, கண்டு! உழவர்கள் மனத் திருப்தியும் உற்சாகமும் அடைய வேண்டும். தாங்கள் உற்பத்தி செய்வதில் தங்களுக்கு நியாயமான பங்கு கிடைக்கிறது என்று அவர்கள் உணர வேண்டும். இல்லாவிட்டால் என்றைக்கிருந்தாலும் கலகமும் குழப்பமும்தான். உணவு உற்பத்தியும் தடைப்படும். ஆகையால் முதலில் உழைப்பாளிகளைச் சரிக்கட்டிக்கொள்ளப்போகிறேன். பிறகு விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாண்டு காட்டப்போகிறேன். என்னுடைய மனைவி பாமாவும் எனக்கு உதவி செய்வதாகச் சொல்லுகிறாள். நீ என்ன சொல்லுகிறாய் கண்டு?''

''சொல்லுவதென்ன அண்ணா? நம்முடைய நிலம் முழுவதையும் பிரித்து, உழவர்களுக்குக் கொடுத்து விட்டாலும் எனக்குச் சம்மதந்தான். நீ ஊர் ஊராக அலையாமல் இந்த ஊரிலேயே இருந்தால் போதும்! நான் எங்கேயாவது போய் ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்வேன்!'' என்றான் கண்டு.

''அப்படி நிலத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டிய காலமும் வரும். அதற்கும் நாம் தயாராகத்தான் இருக்க வேண்டும். வேறு வேறு தொழில்கள் செய்து பிழைக்க இப்போதிருந்தே நாம் எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டும்!'' என்றான் சூரியா.



கண்டு 'ஸினிமா டைரக்ஷன் வேலை இருக்கவே இருக்கிறது' என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டான்.

அவர்களுடைய தாயார் சரஸ்வதி அம்மாள் அங்கு வந்து, ''நான் கண் மூடும்வரையில் பொறுத்திருங்கள். அப்புறம் எது வேணுமானாலும் செய்யுங்கள்!'' என்றாள்.

''நாங்கள் காத்திருக்கலாம் அம்மா! ஆனால் பூகம்பமும் புயலும் எரிமலையும் பிரளயமும் காத்திருக்குமா?'' என்றான் சூரியா.

லலிதா, ''பூகம்பம், பிரளயம் என்றெல்லாம் நீ சொல்லும்போது, அத்தையும் சீதாவும் அடிக்கடி 'காதில் அலை ஓசை கேட்கிறது' என்று சொல்லிக் கொண்டிருந்தது ஞாபகம் வருகிறது. அவர்களுக்கு என்ன சித்தப் பிரமையா அல்லது அவர்களுடைய காதில் ஏதாவது கோளாறு?'' என்று கேட்டாள்.

''பிரமையா, காதில் ஏதேனும் கோளாறு என்று எனக்குத் தெரியாது; அல்லது ஏதேனும் ஒரு தெய்வீக சக்தியினால் வரப்போகும் பயங்கர விபத்துக்களின் அறிகுறி அவர்களுடைய மனசில் தோன்றியதா என்றும் தெரியாது. பஞ்சாப்பிலிருந்து தப்பி ஓடி வந்து நதியில் மூழ்கியபோது சீதாவின் காது அடியோடு செவிடாகி ஒன்றுமே கேட்காமல் போய்விட்டது. உரத்த பயங்கரமான அலை ஓசை போன்ற சத்தம் மட்டும் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்ததாம். ஆனால் காந்திஜியின் புனித உடல் தகனமான அன்று சீதாவின் காது கேட்கத் தொடங்கியது. 'ஹரி! மக்களின் துன்பத்தைப் போக்குவாயாக' என்ற மகாத்மாவின் மனத்துக்கு உகந்த கீதந்தான் முதன் முதலில் அவள் காதில் கேட்டதாம். இது ஒரு சுப சூசகம் என்று எனக்குத் தோன்றுகிறது. மகாத்மாவின் மகா தியாகத்துக்குப் பிறகு இந்தப் பெரிய தேசத்துக்குப் பெரும் விபத்து ஒன்றும் கிடையாது! இனிமேல் சுபிட்சமும் முன்னேற்றமும்தான்!'' என்றான் சூரியா.

அந்தத் தேசபக்தித் தியாகியின் விருப்பம் நிறைவேறுவதாக!

மூன்று முடிச்சுக்கள்

கே. பாலசந்தர்



7

"ஏண்டி, கமலம்! சாப்பிடலையா?" என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்து நின்றாள் பைரவி. ஒரு வார காலமாகவே அவளுக்கு உடல் நிலை சரியில்லை. தினமும் டாக்டர் வீட்டுக்குச் செல்வதும் திரும்புவதுமாகக் காணப்பட்டாள். நேற்றைய முன்தினம்கூட டாக்டர் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்திருக்கிறார். நுரையீரல் பகுதி மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகத் தெரிய வந்தது. ஆனாலும் கமலம் அதனைத் தன் அக்காளிடம் தெரிவிக்கவில்லை. பயத்தினால் மேலும் அவள் உடல் பலவீனப்பட்டுவிடக் கூடாதல்லவா ?

அக்காளை அண்ணாந்து கவனித்தாள் கமலம். கண்களில் நீர் சலசலத்தது. தன்னைப் பற்றியும் தன் உடல் நிலையைப் பற்றியும் சிந்தித்துத்தான் கமலம் கண்ணீர் விடுகிறாள் என்று நினைத்தாள் பைரவி. ஒருவிதத்தில் உண்மை அதுவானாலும், வீட்டை அடைந்தது முதல் கமலத்தின் சிந்தனையில் பல்வேறு கேள்விகள் எழுந்து அலைமோதின.

"நான் அங்கேயே சாப்பிட்டு வந்துட்டேன் அக்கா! நீங்க சாப்பிடுங்க!" என்றாள் கமலம்.

"ஆமாம்; ஏன் ஒரு மாதிரியா இருக்கே ?"

"ஒண்ணுமில்லே; அந்த டிரங்க் பெட்டியை இன்னிக்குப் பார்த்தேன்."

"பார்த்தியா ? எப்படியிருக்கு?"

"எப்படியிருக்கு? ஒரே தூசு படிந்து பூட்டியது பூட்டிய மாதிரியே இருக்கு!"

"ஓ..... அவரு இன்னும் திறந்து பார்க்கலே போலிருக்கு! பார்க்கணுங்கிற அவசியம் அவருக்குத் தோன்றியிருக்காது !"

"அதுலே என்னதான் இருக்கு ? நீதான் சொல்லேன் !"

"அவசியமில்லே! ஒரு நாளைக்கு அவரே உங்கிட்டே சொல்லுவாரு!"

பைரவி உண்பதற்காக அடுக்களை நோக்கிச் சென்றுவிட்டாள்.

சற்றே படுத்துறங்கலாம் என்று படுக்கையை விரித்தாள் கமலம். தூக்கம் எங்கே வரப் போகிறது ? ஏதோ, சற்று ஓய்வு.....

மீண்டும் சிந்தனை, சிந்தனை, சிந்தனை..

'எதற்காக 'பேப்பர் வெயிட்'டை எடுத்து ரேடியோ மீது எறிந்து உடைக்க வேண்டும் ? எவனோ கச்சேரி செய்து கொண்டிருந்தான். பாட்டில் 'பைரவி' என்ற சொல்லைக் கேட்டுச் சகித்துக் கொள்ளக் கூடாதா ? அதற்காக ஏறத்தாழ ஐந்நூறு ரூபாய் பெறுமான முன்னை ரேடியோ அப்பளமாகிப் போய் விட வேண்டுமா? அப்படியென்றால் அக்காளின் பேரில் அவருக்கு எவ்வளவு வெறுப்புணர்வு இருக்க வேண்டும் ? பெயரைக் கேட்ட போதே அவர் இத்தனை முரடராக மாறிவிட்டாரே ! நேரே அக்காளைப் பார்த்து விட்டால் அவர் கொலை செய்யத் தயங்காத மிருகமாகவும் மாறலாமோ ? சே ! அந்த

அளவுக்கு மாற முடியாது. அப்போதே மாருத அவர் இப்போதா மாறிவிடப் போகிருர்? ஆனல் பயங்கர வெறுப் புணர்வு ஏற்படத்தானே செய்யும்?'

கண்கள் பனித்தன. ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு அவருக்குத் தெரிந்துவிடத்தான் போகிறது. ''நீ பைரவியின் தங்கையா?'' என்று அவர் வெறுப்புடன் கேட்டு ஒதுக்கித் தள்ளலாம் அல்லவா?

ரேடியோ உடைபட்ட நிகழ்ச்சியை வைத்துப் பார்க்கிறபோது, தன்னையும் உடைக்கெறிய அவருக்கு எத்தனை நேரம் பிடிக்கும்? இதை வைத்துப் பார்க்கிறபோது அக்காள் இறந்து விட்டாலே நல்லது போலத் தெரிகிறதே! டாக்டர் கூடச் சொன்ருர். 'அதிக நாட்கள் இருக்க முடியாது. ஆசைப்பட்டதையெல்லாம் கொடுங்கள்' என்று! 'ஏன் நுரையீரல் ஆப்பரேஷன் செய்யக் கூடாது?' — என்கிற கேள்வியும் மனத்தளவில் எழத்தான் செய்கிறது. அக்காள் சம்மதிக்க மறுக்கிருள். யாருக்காக அவள் வாழ வேண்டும் என்று கேட்கிற கேள்வி நியாயமானதாகவே படுகிறது! அவருக்கும் எனக்கும் திருமணம் நடந்த மறுகணமே இறந்து விட்டால் போதும் என்று வாதாடுகிருள். திருமணம் நடக்குமா?

படபடவென்று வரிசையாகக் கேள்விக் குறிகள் காட்சி தருகின்றன.

சீதாலட்சுமி இன்ஸ்டிடியூட்டில் கமலம் நுழைகிற போது மாலை ஐந்து மணி. சற்றே காலதாமதம்தான். ஆனலும் பரவாயில்லை. அவளை யார் அதட்டிக் கேட்கப் போகிருர்கள்?



மாணவ மாணவிகள் வணக்கம் தெரிவித்தனர். கமலம் அனைவருக்கும் மறுவணக்கம் தெரிவித்த வண்ணம் நேரே சமையற்கட்டை நாடிச் சென்ருள். காப்பி தயாராக இருந்தது.

'' ஐயா, எங்கே?'' என்று கமலம் கேட்டாள்.

''சீதா அம்மாவை அழைச்சுக்கிட்டு வெளியே போயிருக்காக!'' என்ருன் சமையற்காரன். காப்பியை அருந்திவிட்டு நேரே ஹாலுக்கு வந்தாள் கமலம். பாடங்களில் கவனத்தைச் செலுத்திருள். ஆனல் சீதாவை அழைத்துக் கொண்டு எங்கு சென்றிருப்பார் என்கிற கேள்விக்குறி வளர்ந்து கொண்டு வந்தது. நல்ல சீதா! எங்கிருந்து முளைத்தாள் இந்தச் சீதா? சீதா, சீதா, சீதா....

மனம் முதன் முறையாகச் சலித்துக் கொண்டது. இனிமேல் மனத்தில் எதையும் பூட்டி வைப்பதில் பயனில்லை. ஒன்று அவர் முடிவு என்ன? அல்லது நம்முடைய முடிவு இது! — இப்படிப் பேசித் தீர்த்துவிட வேண்டியதுதான் என்கிற தீவிரத்துக்கும் வந்துவிட்டான்.

எட்டு மணியாயிற்று. மாணவ மாணவிகள் விடைபெற்றுச் சென்றனர். அப்போதுதான் மோகனசுந்தரம் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். சீதாவுக்கான துணிமணிப் பொட்டலம் கையில் இருந்தது.

கமலம் புறப்பட ஆயத்தமானான்.

'' கமலி! சீதாவை டாக்டர் வீட்டுக்கு அழைச்சிக்கிட்டுப் போயிருந்தேன். கண்களை டெஸ்ட் பண்ணிப் பார்த்தாரு! பார்வை கிடைக்க வழி இருக்குன்னு சொன்னாரு! அப்படியே அவளுக்கான துணிமணிகளை வாங்கிட்டுப் பீச்சுக்குப் போயிட்டு வர்றோம்!''

கடற்கரைக்குச் சென்று விட்டுத் திரும்புகிறார்கள்! கமலத்தால் ஏன் இதை முன்பு போலச் சகித்துக் கொள்ள முடியவில்லை? எங்கு போயிற்று முன்பிருந்த அந்த மனம்! என்ன இருந்தாலும் மனத்தைப் பொறுத்தமட்டில் பெண்கள் பலவீனர்களே என்பதை அவளாலேயே உணர முடிந்தது.

சீதா உள்ளே சென்று விட்டாள். அவளுக்கு இப்போது இந்த இடம் வெகுவாகப் பழகிவிட்டது. அவள் செல்வதைக் கவனித்த கமலத்தின் முகம் மாற்றம் கண்டிருந்தது. மோகனசுந்தரத்தால் அந்த மாற்றத்தை உணர முடிந்தது.

'' கமல்! உங்கிட்டேயே சில விஷயங்களைப் பற்றி டிஸ்கஸ் பண்ணணும்னு நினைக்கிறேன் '' என்றான் மோகனசுந்தரம்.

'' என்ன விஷயம்?''

''இங்கேயே டிஸ்கஸ் பண்ணணும்னு நினைக்கிறியா! நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை. இன்ஸ்டிடியூட் விடுமுறை தானே! யு பெட்டர் கம் டு மெரீனா அட் அபௌட் சிக்ஸ் அண்ட் வி வில் டிஸ்கஸ்! நாளைக்குச் சாயந்திரம் உனக்கு எதுவும் எங்கேஜ்மெண்ட் இல்லியே?''

'' ஒண்ணுமில்லே! மெரீனாவுக்கு வந்துடறேன்.''

மெரீனாவில் எந்த இடத்தில் சந்திப்பது என்று பேசி முடிவு செய்து கொண்டு கமலம் புறப்பட்டு விட்டான்.

மோகனசுந்தரத்துக்கு ஒன்று புரிந்தது. சீதாவைப் பற்றிக் கமலம் சந்தேகிக்கிறான். அந்தச் சந்தேகத்தை வளர விடக் கூடாது!



சீதாவை அழைத்துக் கொண்டு உண வருந்தச் சென்றான். எப்போதுமே சீதா வைத் தன்னுடன் அமர்த்திக் கொண்டு தான் உண்பான். அதிலே ஓர் ஆனந்த மும் அமைதியும் இருந்தது.

''சீதா! டாக்டர் என்ன சொன்னு ருன்னு கவனிச்சியா ?''

''கவனிச்சேன். எனக்குக் கண்ணு வந்துடும்னு சொன்னாரு !''

''பின்னே ஏன் கவலைப்படணும் ! இந்த உலகம் எவ்வளவு அழகா இருக் குங்கிறதைப் பார்க்கப் போறியே!''

''இந்த உலகத்திலே எத்தனை நல்ல வங்க இருக்காங்கோன்னு பார்க்கத் தான் நான் ஆசைப்படறேன்.''

''அப்படிப் பார்த்தா உன் ஆசை அவ் வளவு சீக்கிரத்திலே நிறைவேறாது!''

''அப்படிச் சொல்லக் கூடாது. முதல் முதல்லே உங்களைப் பார்க்கப் போறேனே ! அது போதாதா என் ஆசை தீர ?''

''நான் நல்லவன்னு நீ தீர்மானம் செய்துக்கிட்டதற்காகச் சந்தோஷப் படறேன். பார்க்கப் போனா மனுஷனே நல்லவன் இல்லே.''

''என் லட்சுமி ரொம்ப நல்லவ ! எனக்குப் பெரிய வருத்தம், கண்ணு வந்ததும் அவள் எப்படியிருந்தாங் கிறதைப் பார்க்க ஒரு போட்டோவா வது பிடிச்சு வைச்சிருக்கலாம். நான் ரொம்பப் பாவி !''

சீதாவின் கண்கள் கலங்கி விட்டன. மோகனசுந்தரம் கலங்கிப் போய்விட் டான். கண்களைத் துடைத்துக் கொண்டே, ''கவலைப்படாதே, சீதா ! லட்சுமியின் போட்டோ இருக்குன்னு நேத்துத்தான் போனிலே வராகசாமி சொன்னான்'' என்றான்.

'' அது யாரு வராகசாமி ?''

''அவன் ஒரு இன்ஸ்பெக்டர். உன்னை ஒரு நாள் ராத்திரி கூட்டிக்கிட்டுப்போய் மாதவன்கிற ஒரு நீஎவானிப் பிடிச் சானே.... அந்த இன்ஸ்பெக்டர்தான்!''

''உங்களுக்கு அந்த விஷயம் முழுதும் தெரியுங்களா ?''

''ஓரளவு தெரியும். உன்னை ஏமாற் றப் பார்த்தான் ஒருத்தன். தெய்வம்

ஒன்றுக்கு இரண்டாக..!

நாடகத்துக்குள் ஒரு நாடகம்

நகைச்சுவை நாடகங்களில் ஒன்றான 'ஓடிப் போன கணவன்' சென்னை கிருஷ்ண கான சபா வில் நடைபெறத் தொடங்கியது.

இந்த நாடகம் 'ஸ்டேஜ் கிரியேஷன்ஸ்' தயா ரிப்பாகும்.

இந்த நாடகத்தில் ஓட்டல் மானேஜராக நடிப் பவர், நாடகம் நடக்கும் இடத்திற்கு இரவு ஏழு மணிக்கு மேல் தான் ஸ்கூட்டரில் வந்து சேரு வார். மானேஜர் வரும் காட்சி ஏழரை மணிக்கு மேல் தான் நாடகத்தில் இடம் பெறுவதாகும்.

அன்று இரவு ஏழு மணியாகி விட்டது. கதா நாயகன் ராஜுவாக நடிக்கும் காத்தாடி ராம மூர்த்தி, மேடையில் தோன்றி நடித்துவிட்டு உள்ளே வந்தார். ''என்னப்பா... நம்ம பாப்பி வந்தாரா, இல்லையா? அடுத்த காட்சியில் அவர் தோன்ற வேண்டுமே! போன் பண்ணி ஏதாவது சொன்னாரா?'' எனக் கவலையுடன் விசாரித்தார்.

''டெலிபோன் ஏதும் வரவில்லையே...'' என்று உதவி நிர்வாகி சொன்னார்.

''சரி... நீ மானேஜர் வேடம் போட்டுக் கொண்டு தயாராய் இரு'' என ஒருவரை உஷார்ப் படுத்தினார் ராமமூர்த்தி. '' அவன் நேரத்துக்கு வந்து சேரா விட்டால் நீ மேடை யில் தோன்றி விடு.'' அன்று திடீர் மானேஜராக ஒருவர் வேடம் புனைந்து கொண்டு, மேடையின் வலது புறம் தயாராக நின்றார்.

ஸ்கூட்டரில் வேகமாக வந்த பாப்பி-மானேஜர் வேடம் போடும், வாலிபர் - உடை மாற்றவோ மேக்-அப் போடவோ நேரமில்லாததால், பாண்ட் ஸ்லாக்குடனேயே மேடையின் இடது புறம் வந்து தயாராக நின்றார்.

விளக்கு அணைந்து எரிந்து, ஓட்டல் காட்சி தொடக்கம். ''மானேஜர்! மானேஜர்!'' என்று அறையில் தங்கிக் கொண்டிருந்த கதாநாயகன் கூப்பிட்டான்.

இடது புறமிருந்தும், வலதுபுறம் இருந்தும் இருவர் மேடைக்குள் வந்து நின்றார்கள். மானேஜர் இருவர் ஏக காலத்தில் வந்து நிற் பதைப் பார்த்த ராஜுவுக்கு இரட்டை அதிர்ச்சி!

இரண்டு மானேஜர்களுக்கும் அதிர்ச்சி கலப்பு!

ராஜு, அதாவது காத்தாடி ராமமூர்த்தி இரட்டை மானேஜர் தோன்றியதையொட்டி திடீர் வசனம் பேசி நிலைமையைச் சமாளித்தார்:

''என்ன சார்? நான் இப்போது மானேஜரைத் தானே கூப்பிட்டேன்.... நீங்க, அசிஸ்டெண்ட் மானேஜர் ஏன் வந்து நிக்கறீங்க? உங்களுக்கு மானேஜராகணும்கிற ஆசையா? அல்லது அதுக் குள்ளே மானேஜராகி விட்டதாகவே நினைப்பா ? நல்ல அசிஸ்டெண்ட் சார் நீங்க!'' புதிதாக மானேஜர் வேடம் போட்டவர் அசடு வழிந்து கொண்டு உள்ளே போனதும்கூட அந்தச் சமயோசித வசனத்துக்குப் பொருத்தமான நடிப்பாகவே அமைந்து விட்டது! ரசிகர்களில் யாருமே சந்தேகிக்கவில்லை.

- [illegible]



உன்னைக் கொண்டே அவனை ஏமாத் திட்டது.''

சீதா அதற்கு மேல் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. ஆனாலும் புகைப் படத்தைப் பற்றிக் கேட்டாள்: ''அந்த இன்ஸ்பெக்டருக்கு லட்சுமி போட்டோ எப்படிக் கிடைச்சுது ?''

''கிடைக்கிறதாவது,' உங்கள் மூலம் அந்த மாதவனைப் பிடிக்கணும்னு நினைச்ச போதே உங்களைப் பற்றிய தகவல், போட்டோ எல்லாத்தையும் முதல்லே சேகரிச்சாகணுமில்லியா! அப்ப எடுத்த போட்டோ அது! உனக் கும்கூடப் போலீஸிலே இருந்து பரிசு வரப் போவதாகச் சொன்னான்.''

'' யாரு, வராகசாமிங்களா ?''

'' ஆமாம் !''

''பரிசை அவரையே வைச்சுக்கச் சொல்லுங்க !''

'' ஏன் ?''

''நல்லவனோ, கெட்டவனோ, ஒருத்த னைக் காட்டிக் கொடுக்கிறதுங்கிறது துரோகம் ! இந்தத் துரோகத்துக்கு ஒரு பரிசு; அதை நான் வாங்கிக்கணும்! இல்லீங்களா ?''

மோகனசுந்தரம் வெகுநேரம் சீதா வைக் கூர்ந்து கவனித்தான். எவ்வளவு பெரிய லட்சியங்களை இந்தக் குருட்டு இதயத்துக்குள் புதைத்து வைத்திருக் கிறாள் இவள்! அபூர்வமான — ஆச்சரிய மான பெண்! இப்படியான பெண்களை மணந்து கொள்கிறவர்கள்தாம் வாழ் வின் நிஜமான சொர்க்கத்தைக் காணு கிறார்கள் ; அனுபவிக்கிறார்கள் !

சுகமான ஒரு சிந்தனையை வெளிப் படுத்துகிற மாதிரி மோகனசுந்தரத்திட மிருந்து ஒரு பெருமூச்சு பிறந்தது !

மறு நாள் —

மாலைக் காற்றில் மெரீனா கடற்கரை மாருதம் பாடிக் கொண்டிருந்தது.

உட்கார்ந்து பேசுவதென குறிப்பிட்ட இடத்தில் முன்னதாகவே வந்து அமர்ந்து கொண்டாள் கமலம். என்ன பேசப் போகிறார் என்கிற எதிர்பார்ப்பு அவ னுடைய முன்கூட்டிய வருகையிலிருந்து புலனானது. இரவு அவள் சரியாகக் கூடத் தூங்கி இருக்கமாட்டாள். ஏதோ முக்கியமான பிரச்னை—வாழ்வுப் பிரச்னை பற்றிப் பேசப் போகிறார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. மனம் என்னவிதமாகவெல்லாமோ குறுகுறுத் தது. '' சீதாவை மணந்து கொள்வ தாக முடிவு செய்துவிட்டேன்'' என்று அவர் சொல்லிவிடக் கூடாதே என்று அவள் மனம் பிரார்த்தனை செய்து



''உங்க பிஸினஸ் எப்படி நடக்கிறது ?''

''ஆனந்தமா நடக்கிறது ! வாடிக்கைக்காரர்கள் வாங்கிப் போனதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள் !''

''இதுதான் நன்றாக நடப்பதற்கு அடையாளமா !''

''ஆமாம் ! நான் ஒரு 'லெண்டிங் லைப்ரரி' நடத்துகிறேன் !''

கொண்டது. அப்படி மட்டும் அவர் சொல்லி விட்டால்......?

வீட்டுக்குப் போவதற்குப் பதிலாக இப்படியே கடலுள் நுழைந்து உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

'' சுண்டல், சூடான சுண்டல்... கைமுறுக்க்......''

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் கமலம். அங்கே —

எங்கோ பார்த்த முகம்....?

எங்கே? எங்கே?....

நெற்றியில் பட்டை பட்டையாக விபூதியும் தோளில் துண்டும், அதன் மேல் தகர டின்னுமாகக் காட்சியளித்த அந்த மனிதன், ''ஏம்மா ! என்னைத் தெரியலையா உங்களுக்கு? நான்தான் திருப்பதி !'' என்றான்.

'திருப்பதியா !' நெற்றியிலிருந்த விபூதியைக் கவனிக்கக் கமலத்துக்குச் சிரிப்பு மேலிட்டது. அடக்கிக் கொண் டாள் அவள்.

''இப்பவாவது புரியுதுங்களா! அட, நான்தான் உங்களைத் தவறாப் புரிஞ்சுக் கிட்டேனா? நீங்க இன்ஸ்பெக்டர் மோகன சுந்தரத்தோட மனைவிதானே ?'' என்று கேட்டுக் கொண்டே தகர டின்னை மண லில் வைத்துவிட்டு உட்கார்ந்தான்.

பனிச்சென்று புரிந்துவிட்டது. அன் றைக்கும் இவன் இப்படித்தானே கேட் டான். இவன் வாய் முகூர்த்தம் அப்ப டியே நடந்துவிட வேண்டுமே! குழம்பிக் கொண்டிருந்த மனத்துக்கு ஒரு சகுன மான அசரீரி போலக் கேட்டுவிட்டதே!



''சார்! இந்த வண்டி மூணுமணிக்கும் போய்ச் சேருமா? இல்லே, நாலு மணிக்கும் போய்ச் சேருமா?''
'' முதலில் போய்ச் சேருமா என்று கேளுங்கள் !''
கே. வி. முரளி.

''என்னம்மா, பேசாம இருக்கீங்க?''

''புரியுது. உங்ககூட அன்னிக்கு வந்தாங்களே, உங்க மனைவி; அவங்க வரலையா ?''

''அவ வந்துட்டா எப்படி ? அவ தானே முறுக்குச் சுட்டுச் சுண்டல் செய்யணும் ?''

''நீங்க ஏதோ சமூக சேவை செய்வதாக.....''

''சமூகமாவது, சேவகமாவது! எல்லாம் நாலு பெரிய மனுஷாளைத் தெரிஞ்சுக்கிற வேஷம் ! பச்சையா சொல்லணும்னு என்னைப் பொறுத்தவரையில் யாரும் நிஜமான 'சமூக சேவை செய்யறதும் கிடையாது; நானும் செய்தது கிடையாது. எப்படியோ சுண்டலாகத் தொடங்கிய வாழ்க்கை, இப்ப சுண்டலா முறுக்கிக்கிட்டு நிற்குது! சரி விடுங்க ! உங்களுக்கு ஏதாகிலும் சுண்டல் முறுக்......''

''ஒண்ணும் வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே பர்ஸைத் திறந்து புது ஒரு ரூபாய் நோட்டுக்கள் ஐந்தை எடுத்துக் கொடுத்தாள்.

''என்னம்மா, இது ?''

'' வாங்கிக்கோ ! என் மனசுக்கு ஏதோ தோணிச்சு. கொடுக்கிறேன்.''

''நீங்க நல்லா இருக்கணும். இந்த டின்னு பூரா வித்தாக்கூட இந்த லாபம் கிடைக்காது. ஐயாவை நான் கேட்டதாகச் சொல்லுங்கம்மா!''

எழுந்து கொண்டான் திருப்பதி.

''சூடான சுண்டல் முறுக்..... கை முறுக்......'' என்று குரல் எழுப்பிக் கொண்டே நடந்தான். ஏதோ சுப சகுனமான வார்த்தை சொன்னதற்கு அவனுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தாள் கமலம். அவரும் இதே மாதிரி பேச்சைத் தொடங்கி விட்டால்......

எவ்வளவு பெரிய மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் அது !

தொலைதூரத்தில் மோகனசுந்தரம் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் கமலத்தின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. எழுந்து நின்று கொண்டாள்.

''உட்கார் கமலம். ரொம்ப நேரமா காத்துக்கிட்டிருக்கியா?'' — கேட்டுக் கொண்டே மணலில் அமர்ந்தான் மோகனசுந்தரம். கமலம் அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

''அரை மணி நேரமாகுது.''

''ஓ..... ஐயாம் சாரி !''

''அதனாலென்ன !''

''ஆல் ரைட் கமலி! ரொம்பநாளா உங்கிட்டே சொல்லத் தயங்கிய ஒரு செய்தியை இப்ப வெளியிட ஆசைப்படறேன். அஃப் கோர்ஸ் ! இது என்னோட ஆசைதான். நீ சம்மதிக்கிறதும் சம்மதிக்காததும் உன் இஷ்டம் !''

''என்னங்க ?''

கமலத்தின் இதயம் இப்போது வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

''கமலி! நீ என்னோட இன்ஸ்டிடியூட்டுக்குத் தாய் மாதிரின்னு பல பேருக்குச் சொல்லியிருப்பதைக் கேள்விப்பட்டிருப்பே !''

'' ஏன்? எங்கிட்டியே சொல்லியிருக்கீங்க !''

''ஐ ஸீ ! லோ, நான் உன்னைத் திருமணம் செஞ்சுக்கிட்டா நீ நிஜமான தாயாகிவிட முடியும் இல்லியா ?''

கமலம் எங்கோ பறந்தாள்.

வானத்தின் முகட்டுக்கே பறந்து மேலே மேலே மேலே சென்றுகொண்டே இருந்தாள். அவள் எதிர்பார்த்தது வீணாகவில்லை.

'' வாட் டு யு ஸே கமல்? நீ என்ன சொல்லறே ?''

கமலம், 'கமலி'யாகி இன்று 'கமல்' ஆகிவிட்டாள் !

அவள் நெஞ்சு ஆனந்தத்தால் விம்மியது.

''நான் ரொம்பவும் அதிர்ஷ்டசாலி!'' இதற்கு மேல் கமலத்தினால் பதில் சொல்ல முடியவில்லை.

மோகனசுந்தரத்தின் முகம் கமலமாக மலர்ந்து மணக்கத் தொடங்கியது. கமலம் இதழ் விரித்துப் புன்னகை பூத்தாள்.

(தொடரும்)

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 பிப்ரவரி, 8உ

புதன்கிழமை: நேற்று இரவு ஆஸ்துமா அதிகத் தொல்லை கொடுத்தது. அதனால் இப்பொழுது அதிக ஆயாஸமாக இருக்கிறது. இன்று நூல் நூற்கவில்லை. சாக்ரட்டீஸ் மொழிபெயர்ப்பு அதிகமாக நடந்தது. ''க்ரேட்டோ'' என்ற பகுதி முழுவதையும் மொழிபெயர்த்தேன். ''பீடோ'' என்னும் பகுதி அதிகக் கஷ்டமாயிருக்கும்போல் தோன்றுகிறது. ஆனால் அதில் கூறியுள்ள தத்துவ சாஸ்திரம் நம்முடைய இந்திய மக்களுக்குச் சர்வ சாதாரணமாகத் தெரிந்த தொன்றாகலால் பெரும் பகுதியை மொழிபெயர்க்காமல் விட்டுவிடலாம் என்று எண்ணுகிறேன். நம்முடைய மக்களை அந்தக் கிரேக்கப் பெரியாரின் மேன்மையை உணரும்படி செய்வதே என்னுடைய நோக்கம். இந்த வேலையை முடிக்கப் போதுமான நேரம் கிடைக்கும் என்று எண்ணுகிறேன். இறுதியில் இயேசு கிறிஸ்துவின் சரிதையையும் சுருக்கமாக எழுத விரும்புகிறேன். இந்த வேலையை மட்டும் செய்து முடித்து விட்டால் நான் சிறையில் இருந்த காலம் வீண் பொழுதாய்க் கழியவில்லை என்று மகிழ்வேன்.*

1922 பிப்ரவரி, 9உ

வியாழக்கிழமை: லேசான ஜுரம் அடிக்கிறது. காரணம் தெரியவில்லை. வயிற்றில் கோளாறு எதுவுமில்லை. அதனால் கொசுக்களால் ஏற்படும் மலேரியா சுரமோ என்று ஐயுறுகிறேன்.

இன்றும் நூல் நூற்கவில்லை. நீண்ட நேரம் ஓய்வு கொண்டேன். ''பீடோ''வில் ஒரு பகுதியை மொழிபெயர்த்தேன்.

1922 பிப்ரவரி, 10உ

வெள்ளிக்கிழமை: நான் காங்கிரஸ் காரியாலயத்துக்கு அனுப்பும்படி கொடுத்த தந்தியை அதிகாரிகள் அனுப்பவில்லை. வீட்டிலிருந்து எனக்கு வந்த கடிதத்தை அவர்கள் என்னிடம் இன்னும் கொடுக்கவுமில்லை. சிறைத் தலைமை அதிகாரி சென்னைக்குச் சென்றிருப்பதால் எல்லா விஷயங்களும் அவர் வரும்வரை அப்படி அப்படியே காத்து நிற்க வேண்டும் போலும். டாக்டர் ராஜனும், கோதண்டராமனும், சாஸ்திரியாரும், ஸ்ரீ சௌரிராய பிள்ளையும் கைதாகி விட்டால் ஆதிநாராயணச் செட்டியார்தான் காங்கிரஸ் வேலையை மேற்கொண்டு நடத்த வேண்டும். ராமநாதனுடைய உதவியைக் கொண்டு தடையின்றி நடக்கும் என்று எண்ணுகிறேன்.



இந்த அறைகளில் இரவில் வந்து சேரும் கொசுக்கள் இந்த இடத்தை நரகலோகமாகவே ஆக்கி விடுகின்றன.

மகமது அலியும், ஷௌகத் அலியும் சிறையில் உண்ணாவிரதம் இருப்பதாகக் கூறினார்கள். அதுதான் இங்குள்ள நண்பர்களுக்கு உண்ணாவிரதம் இருக்க மிக்க உற்சாகம் அளித்ததாகும். ஆனால் இப்பொழுது அவ்விஷயம் வெறும் கட்டுக்கதை என்று தெரிந்து விட்டது.

லாலா லஜபதி ராயைப் பற்றியும் அதுபோன்ற ஒரு கதை உலாவ ஆரம்பித்திருக்கிறது. அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு, ராமசரண், 'நாமும் அதுமாதிரி தொல்லை கொடுக்க வேண்டும்' என்று யோசனை கூறத் தொடங்கியிருக்கிறார். எங்களுக்குத் தினசரிப் பத்திரிகைகள் கொடுக்காதது ஒரு பெரிய குறையாகும். ''யங் இந்தியா''ப் பத்திரிகையையாவது கொடுக்கலாம்.

இன்று சாக்ரட்டீஸ் மொழிபெயர்ப்பு முடிந்து விட்டது.

---

*ஏசுநாதரின் சரிதையை எழுதும் எனது திட்டத்தை இறுதிவரை நிறைவேற்ற முடியாமலேயே போயிற்று.



சவுரி பேசுகிறது!



'ஷைலு'

அக்கௌண்டெண்ட் அனந்தாச்சாரி போட்ட கூச்சல் ஆபீஸையே அலற அடித்து விட்டது. என்னமோ ஏதோ என்று அத்தனை பேரும் அனந்தாச்சாரியின் மேஜையை நோக்கி ஓடினர். ஒரு கையில் டெலிபோன் ரிசீவரைப் பிடித்துக் கொண்டு, மிரள மிரள விழித்தவாறு நடுங்கிக் கொண்டிருந்தார் அனந்தாச்சாரி. அவர் முகமெல்லாம் வியர்வை முத்துக்கள்; கண்கள் செருகி யிருந்தன.

''என்ன சார்...! என்ன ஆச்சு....?'' என்று கோரஸாகக் கேட்டது ஆபீஸ்.

''வந்து.... வந்து.... நம்ம 'ஸேல்ஸ்மேன்' நரசிம்மன்......'' அக்கௌண்டெண்ட் முடிக்கவில்லை.

''ஐயையோ ! அவனுக்கு என்ன ஆச்சு சார்..... ?'' அத்தனை பேரும் திடுக்கிட்டு வினவினர். ஸேல்ஸ்மன் நரசிம்மன் அன்று காலைதான் ஸ்கூட்டரில் செங்கல்பட்டுக்குச் சென்றிருந்தான் – ஆபீஸ் விஷயமாக. அவனுக்கு ஏதாவது ஆக்ஸிடெண்டா.....? அனந்தாச்சாரி சர்வாங்கமும் நடுங்கிக் கொண்டிருந்தார். மானேஜர் மாத்ருபூதம் பொறுமையை இழந்துவிட்டார்.

''ஓய், அனந்தாச்சாரி! போனிலே வந்த நியூஸைச் சொல்லிவிட்டு நீர் நடுங்கிச் சாகும்!'' என்று கர்ஜித்தார் மாத்ருபூதம்.

ஆபீஸ் வேலையாகச் சென்றவனுக்கு விபத்து என்றால் ஆயிரக் கணக்கில் நஷ்டஈடு அழவேண்டுமே என்ற தாபம் அவருக்கு.

அனந்தாச்சாரி நிதானித்தார். ''வந்து... நம்ம நரசிம்மன் வீட்டிலே சவுரி பேசுகிறதாம் சார். அவர் மனைவி ஒரே பதற்றத்தோடே போன் பண்ணினாங்க...''


அவ்வளவுதான்; அத்தனைபேரும் அஸ்தியில் ஜுரம் கண்டவர்கள் போல் நடுங்க ஆரம்பித்து விட்டார்கள். 'ஏதுடா இது... இப்பத்தான் சவுரி கலாட்டா ஓய்ந்த மாதிரி இருந்தது. மறுபடியும் நம்ம நரசிம்மன் வீட்டிலேயே வந்து விட்டதே!' என்று நினைத்து நடுங்கினர்.

மானேஜர் மாத்ருபூதம் கலங்கிவிட்டார். ''சரி... ஆபீஸைச் சீக்கிரமே இன்று மூடிவிட்டு, நரசிம்மன் வீட்டுக்குப் போகலாம்.''

சடசடவென பீரோக்கள் மூடப்பட்டன; ஜன்னல்கள் சாத்தப்பட்டன; அந்தக் காரியாலயத்தின் மொத்தப் பேரும் முகத்தில் சவக் களையுடன் பழைய மாம்பலத்தை நோக்கி மின்சார ரயிலில் விரைந்தனர்.

''ஏன் சார்... நரசிம்மன் செங்கல்பட்டிலிருந்து திரும்பி யிருப்பானா...?'' என்று டெஸ்பாட்ச் சங்கரன் கேட்டான்.

''சார்! அந்தச் சவுரியை வச்சுண்டா அப்படியே சுடுகாடு வரை இழுத்துண்டு போற



தாமே சார்...'' — இது பார்சேல் ஹுசேன் கேள்வி.

''சார்! நாம போறதுக்குள்ளே ஏதாவது விபரீதமா ஆகியிருந்தா...?'' — சந்தேகப் பிராணி பில் செக்ஷன் கந்தவேலு.

''ஐயே... எல்லோரும் சும்மா வாயை மூடிண்டு வாங்க...'' என்று எல்லோரையும் அடக்கினார் மாத்ருபூதம்.

மாம்பலம் ஸ்டேஷனில் இறங்கியதும் அத்தனை பேருக்கும் இலேசாக நடுக்கமும், கலவரமும் ஏற்பட்டு விட்டன. எல்லோரும் மௌனமாக நரசிம்மனின் வீட்டை நோக்கி நடந்தனர்.

எல்லோருடைய மனத்திலும் சவுரி, சுடுகாடு, ரத்தம், எலும்புக் கூடு, மயானப் புகை, மந்திரவாதியின் தாடி - இப்படிப் பல வாறாகப் பயங்கரக் கற்பனைகள்.

நரசிம்மன் வீடு நெருங்கி விட்டது. தெரு வெறிச்சோடி இருந்தது.

''போலீஸ்... கீலீஸ் வந்து எல்லோரையும் அழைத்துக் கொண்டு போயிருக்குமோ...?''

ஒருவராவது மூச்சு விடவில்லை. நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு அவர்கள் வீட்டை அடையவும்—

அத்தனை பேருக்கும் தூக்கி வாரிப் போட்டது. சிரித்தவாறே உள்ளே இருந்து வந்தான் நரசிம்மன்! அவனுடைய ஆபீஸ் ஆசாமிகள் அத்தனை பேரையும் பார்த்தவுடன் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''அடடா... என்ன சார் விஷயம்? அத்தனை பேரும் எங்கே இப்படி...?.... இப்பத்தான் நான் செங்கல்பட்டிலிருந்து திரும்பி வந்தேன்.''

மானேஜர் மாத்ருபூதம் பரபரப்புடன் கேட்டார்: ''ஏம்பா நரசிம்மன், உன் வீட்டுல சவுரி பேசறதுன்னு உன் 'ஒய்ப்' போன் பண்ணினாளாமே...?''

'கடகட'வென்று சிரித்தான் நரசிம்மன். ''கொஞ்சம் இருங்க'' என்றவாறு உள்ளே போனவன் திரும்பி வந்தான்.

''இதுதான் சார் சவுரி. என் மூணு வயசுக் குழந்தை சவுரிராஜன். மூணு வயசாகியும் பேச்சே வரல்லே. நானும் செய்யாத வைத்தியம் இல்லே; பிரார்த்தனை இல்லே; மந்திரம் இல்லே. போன வாரம்தான் எங்கள் குல தெய்வம் சவுரிராஜப் பெருமாளுக்கு அபிஷேகம், தளிகை எல்லாம் போட்டு விட்டு வந்தோம். இன்னிக்குக் கிழே விழுந்த குழந்தை, 'ம்...மா... அப்பா...'ன்னு பேசி விட்டான். அந்த சந்தோஷம் தாளாமே என் மனைவி போன் பண்ணியிருக்காள் ஆபீசுக்கு, நான் அங்கிருப்பதாய் எண்ணி!''

அத்தனை பேருக்கும் மகிழ்ச்சிகரமான ஏமாற்றம்.— அசடு வழிந்தது.

குழந்தை சவுரி 'ம்மா... ப்பா...' என்று கையைக் கொட்டி நகைத்தது.

அட, நிஜமாகவா!


இரவில் சமையலறையில் ஒரு '0' வாட் பல்பை எரியவிட்டு



வைத்திருந்தால் கரப்புகளின் நடமாட்டம் இருக்காது!

[illegible]





இரு

அரசன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தான். அவன் தலையிலே அழகிய பொற்கிரீடம். உடலிலே உயர்ந்த பட்டாடை. பாதங்களிலே சரிகை வேலைப்பாட்டுடன் கூடிய பாதுகை. அரியாசனத்துக்கு அடியில் புலித்தோல் விரிந்திருந்தது. அரசன் தனது ஒரு காலை இறந்த புலியின் தலையின் மீது பதித்திருந்தான்.

படைத் தலைவர்கள், அமைச்சர்கள், சிற்றரசர்கள், செல்வந்தர்கள், அவைப்புலவர் ஆகியவர்கள், அரசனுக்கு எதிரே கைகட்டி, வாய் புதைத்துத் தலைகுனிந்தவாறு மரியாதையே உருவாக நின்றனர். மாட்சிமை பொருந்திய மன்னனை நிமிர்ந்து நோக்கும் துணிச்சல் எவருக்குமே இல்லை. அவனவனும் அரசனது ஆணையை எதிர்நோக்கி நின்று கொண்டிருப்பதாகப்பட்டது.

திடுமென்று அரசன் கை தட்டினான். அவனது இரு கை - பத்து விரல்களிலும் வைர மோதிரங்கள் பளபளத்தன.

"நடக்கட்டும், நடனம் !"

மன்னனது வாயிலிருந்து உத்தரவு பிறந்தது.

ஒன்றன்பின் ஒன்றாக ஏழு பட்டுத் திரைகள் விலகின. கார்முகில்களுக்கிடையே மின்னற் கொடியென நடன நங்கை திரையினூடே தோற்றம் காட்டினாள். பிறகு ஒய்யார நடை நடந்து அரியாசனத்தை அணுகி அரசனுக்கு ஏழு முறைகள் தலை வணங்கி வணக்கம் தெரிவித்தாள். அடுத்த கணமே இசைக் கருவிகள் இயங்கலாயின. கொலு மண்டபத்தின் சலவைக் கல் சுவர்களும் பொற்கூரை வேய்ந்து சித்திர வேலைப்பாடு செய்யப்பட்ட கவின்மிகு கூரைகளும் இசை தேக்கி இன்னொலி பரப்பின. இசையும் நடனமும் இணைந்து எழிற் கலை கூட்டின.

நடன ராணியின் விழிகளுக்குத்தான் என்ன மந்திர சக்தி ! செக்கச் சிவந்த அவளது மேனியிலே இளமையின் பூரிப்பு பாய்ச்சல் காட்டியது. தனுக்கும் மீனுக்கும் துடிக்க அவள் காட்டிய அங்க அசைவுகள் போர்முரசு கொட்டிப் புலனடக்கத்தை வம்புச் சண்டைக்கு இழுக்கிறாற் போன்றிருந்தன. சரீரத்தை விஞ்சி நின்றது சாரீரம்! குரலில்தான் என்ன குழைவு, என்ன குளுமை! அவளது நடனத்தில் ஒரு சமயம் தோகை மயில் நடனம் பயின்றது; இன்னொரு சமயம் கருநாகம் களி மிகுந்து படம் எடுத்து ஆடியது. ஒரு சமயம் கட்டும் விழிச் சுடர் தீச்சுடராகச் சுட்டது. இன்னொரு சமயம் தண்மலர் விரித்துக் குளுமை கூட்டியது. வேறு ஒரு சமயம் அச்சமும் நாணமும் அலைபாய்ந்தன. பிறிதொரு சமயம் தசை, நசை விருந்து வைத்து, 'வா, வா' என்று அழைத்தது. ஆனால் நிறைந்த தர்பாரிலே தலைதூக்கி நடன நங்கையை ஏறெடுத்துப் பார்க்கும் துணிவு மட்டும் யாருக்குமே உண்டாகவில்லை. அரசன் மட்டும் அரியாசனத்தில் அமர்ந்தவண்ணம் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டான், வயிற்றை வருடிவிட்டுக் கொண்டான். நடன மாதின் கலைத் திறனைக் கண்டு களித்து இடையிடையே 'சபாஷ்' கூடப் போட்டுக் கொண்டிருந்தான்.

தபேலாவின் கடைசி முத்தாய்ப்பும் கொஞ்சும் கால் சிலம்புகளின் தேயும் ஒலியும் நடனம் நிறைவுற்றதைக் காட்டி அடங்கின.

அரசன் அகமகிழ்ந்து தன் கழுத்திலிருந்து ஏழு சர முத்து மாலையைக் கழற்றி நடன ராணியின் பக்கம் வீசினான். அவள் அடக்கத்தோடு அதைக் கரங்களில் ஏந்திப் பல்முறை



நிழல்கள்

கே. ஏ. அப்பாஸ்

பணிந்து பணிந்து வணங்கினான். பிறகு மன்னனை நெருங்கி அவன் கால்களைக் கண்களில் ஒற்றிக் கொண்டு கூறினான்:

"அரசர்க்கரசே! அடியான் தனக்குக் கிட்டியுள்ள இந்தப் பெருமைக்காகப் பெருமிதம் கொள்ளுகிறேன். பேராளன் பேரருளால் மன்னர் மன்னரும், மன்னர் குடையிருக்கும் மாநிலமும் உலகம் உள்ள அளவும் நீடூழி வாழ வேண்டும். மாட்சிமை தங்கிய மன்னரின் புகழ் வானளாவ ஓங்க வேண்டும்."

கனத்த குரல் ஒன்று — அரசனது குரலைக் காட்டிலும் எடுப்பாக ஒலித்தது:

"கட்!"

உடனே விளக்குகள் அணையலாயின. நொடிப் பொழுதில் கொலு மண்டபக் காட்சி அனைத்தும் கலைந்தது. அவையினர் அவ்வளவு பேரும் தங்கள் பட்டு, பீதாம்பரங்களைக் கள ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு, தங்களது பொய் மீசைகளையும் தாடிகளையும் களைந்தவாறே எக்ஸ்டிராஸ் ஒப்பனை அறையை நோக்கி விரைந்தனர். அரசன் தனது தலையிலிருந்து கிரீடத்தை எடுத்தான். அதோடு அரச வேஷத்துக்கென்று பிரத்தியேகமாகச் செய்யப்பட்ட தலை அலங்கார 'விக்'கும் வந்துவிட்டது. அதைக் கண்டு ஒப்பனைக்காரர் சீறினார்:

"டேய்! என்ன காரியமடா செய்கிறாய்? 'விக்'கை ஜாக்கிரதையாகக் கழற்றடா! அது இருநூற்றைம்பது ரூபாயை விழுங்கியிருக்கிறதடா!"

அரசன் பதறிப் போய் 'விக்'கை மறுபடியும் தன் வழுக்கைத் தலையிலேயே படிய வைத்துக் கொள்ள முயன்றான். கிரீடம் கைதவறிக் கீழே பொட்டென்று விழுந்துவிட்டது, தகர ஒலியுடன். எத்தனையோ கண்ணாடித் துண்டுகள் தரையில் சிதறின.

ஒப்பனை அறைக்குச் சென்று அரசன் தனது வெல்வெட்டு ஆடைகளை அவிழ்த்தான். பட்டுச் சொக்காயைக் கழற்றினான். சாட்டினில் தைத்த சல்வாரைக் களைந்தான். சரிகை வேலைப்பாடு செய்த பாதரட்சையை அகற்றினான். பஞ்சு அடைத்த பொய் வயிற்றையும் களைந்தான். ஒப்பனைக்காரர் அவன் முகத்தில் ஒட்டியிருந்த தாடி மீசையை வெடுக்கெனப் பிடுங்கினார். மன்னர் மன்னவன் இப்பொழுது முழங்கால் வரை தொங்கும் அரை நிஜாருடன் நின்றான். அந்த அரை நிஜாரும் என்ன, இரண்டு மூன்று இடங்களில் ஒட்டுப் போடப்பட்டிருந்தது. அடுத்த சில நிமிஷங்களுக்குப் பின் அவன் இழைத் தையலில் ஒட்டுப் போட்டிருந்த ஒரு பழைய பாண்டும், கல அழுக்கு ஏறிக் கையும் காதும் கிழிந்து தொங்கிய புஷ் ஷர்ட்டும் அணிந்து கொண்டு, தனது அன்றையக் கூலியைப் பெறுவதற்காக எக்ஸ்ட்ரா சப்ளையரிடம் போய் நின்றான். ஈர்க் குச்சியாக உலர்ந்த உடலும், ஒட்டிய கன்னமும், குழிவிழுந்த கண்களும் கொண்ட அந்த எக்ஸ்ட்ரா சப்ளையர் 'உடலும் உள்ளமும் ஒரே விலை' என்பதுபோல் காட்சி அளித்தான். நடிகனைக் கண்டதும் அவன், அவனுக்குக் கிடைத்த ஏழரை ரூபாயில் இரண்டரை ரூபாயைத் தன் கமிஷனாகக் கழித்துக் கொண்டு ஐந்து ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினான். பணிவோடு பெற்றுக் கொண்டவன், உதவி டைரக்டரைப் பார்த்து வணங்கி,

''சார் ! நாளைக்கும் எனக்கு 'மேக்கப்' உண்டா ?'' என்று கேட்டான்.

''கிடையாது. நாளைக்கு நாங்கள் கொள்ளைக்காரர்கள் சண்டையைப் படம் பிடிப்பதாயிருக்கிறோம் !'' என்று பதில் வந்தது.

அரசன் கெஞ்சினான்: ''அப்படியானால் என்னையும் கொள்ளைக்காரனுக்கிவிடுங்கள், சார் ! உங்களுக்குப் புண்ணியம் உண்டு. உண்மையைக் கேட்டால், சென்ற இரண்டு மாதங்களில் ஐந்தே ஐந்து நாட்கள்தான் சார், நான் 'மேக்கப்' போட்டிருக்கிறேன்!''

உதவி டைரக்டர் அவனைக் கடிந்தார்:

'' உனக்கு என்ன பைத்தியமா ? அரசனை எப்படிக் கொள்ளைக்காரனுக ஆக்குவது ? உனக்காகப் படத்தின் 'கண்டின்யூடி'யைக் கெடுக்க முடியுமா ?''

அரசனின் விழிகளில் நீர் பொங்கியது.

'' இன்னும் மூன்று நாட்களுக்காவது வேலை கிடைத்தால்தான் நான் குடியிருப்புக்கு வாடகை கொடுக்க முடியும். நான் குழந்தை குட்டிக்காரன், சார் ! நல்ல மழையில் வீட்டுக்குச் சொந்தக்காரன் வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டால் நான் குழந்தை குட்டிகளை எங்கே சார், ஒண்ட வைப்பேன்? மேக்கப் தர இயலாவிட்டால் கொஞ்சம் முன் பணமாவது தரச் சொல்லுங்கள். எனக்கு இந்தப் படத்தில் இன்னும் வேலை இருக்கும் அல்லவா ? அப்பொழுது கழித்துக் கொள்ளலாம் !'' என்றான்.

''இராது, அப்பனே!'' உதவி டைரக்டரின் குரலில் அநுதாபம் இழையோடினாலும், பேச்சில் ஓர் உறுதியும் எக்காளமும் தொனித்தன. 'நாங்கள் கதையையே மாற்றிவிட்டோம். அதனால் இன்றோடு அரசனுக்கு வேலை தீர்ந்துவிட்டது !'' என்றார்.

தலைக்கு மேல் இரண்டு கரங்கள். ஒரு கையில் சுத்தியல்; இன்னொரு கையில் அரிவாள். இவற்றை ஏந்தியிருந்த வீரர்களின் விழிகளில் புரட்சி பளிச்சிட்டது : குரல்களில் கோடிக்கணக்கான குடியானவர்கள்—தொழிலாளிகளின் பிரதிநிதியான புரட்சி கோஷம் வானளாவியது.

அவன் தொழிலாளர்களின் தலைவன். அவனுமே ஒரு தொழிலாளி. அவன் கையில் சுத்தியலும் அரிவாளும் இல்லையென்றாலும் அவன் பாட்டாளி மக்களின் பெருங்கூமாத்துக்கு வழி காட்டி என்பதை அறிந்து கொள்வதில் யாதொருவித சிரமமும் ஏற்படாது. ஏனெனில் அவனுடைய நீலச் சராயிலும் சொக்காயிலும் தொழிற்சாலை இயந்திரங்களின் எண்ணெய்க் கறை படிந்திருந்தது. அவனுடைய வறண்டு கருண்ட கேசங்களில் உழைப்பின் புழுதி பதிந்திருந்தது. அவனது சொக்காயின் கைகள் முழங் கைக்கு மேல் மடித்து விடப்பட்டிருந்தன. அவனுடைய வலு மிகுந்த கரங்களில் கருகருவென்று உரோமங்கள் வளர்ந்து அவனது ஆண்மைக்கு எடுத்துக்காட்டாக நின்றன. சகதி படிந்த கால்களில் காதறுந்த கோல்ஹாப்பூர் செருப்புகள் காட்சி அளித்தன. சுருக்கம் விழுந்த கால்சராய் முழங் கால் வரை மடித்து விடப்பட்டிருந்தது. காதிலே பாதி எரிந்த பீடித் துண்டு ஒன்று செருகப்பட்டிருந்தது. அவனுடைய சட்டைப் பையிலே கால் மார்க்ஸின் 'கம்யூனிஸ்ட் மானிபெஸ்டோ' எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

''தோழர்களே !'' பாட்டாளி மக்களின் கூட்டத்தை விளித்து அவன் பேசலானான் : ''நடைபாதையில் வசிப்பதனால் நாம் சோமாரிகள் எனக் கருதப்படுகிறோம்.



தண்ணீரில் மூழ்கி இருந்த ஒரு பணக்காரரை ஒருவன் கரையேற்றினான்.


பணக்காரர் தம் நன்றியைத் தெரிவிக்க இருபது பைசாவை அவனிடம் கொடுத்தார்.

பக்கத்தில் நின்ற ஒருவர், ''அவர் நன்றியின் மதிப்பு 10 பைசா. அவர் உயிரின் மதிப்பு 10 பைசா என்று கணக்குப் போட்டுக் கொடுத்திருக்கிறாரோ ?'' என்று கேட்டார்.



ஒருவர் : என்ன பண்டாரம் ! நேற்று ஒரு கப்பரை வைச்சிருந்தே ; இன்று இரண்டு கப்பரை ?

பண்டாரம் : பார்த்தேன் ; இந்த பிசினஸ் நல்லா நடக்கும்போலே இருந்தது ; இன்னொரு பிராஞ்சு ஓபன் பண்ணிவிட்டேன் !



உங்களுக்கு வைட்டமின்களும் தாதுப் பொருள்களும் வேண்டிய அளவு கிடைப்பதில்லையா?

நாளொன்றுக்கு ஒரே ஒரு 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே உங்கள் அன்றாட முக்கியத் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

வைட்டமின் பற்றுக்குறையா? ஆம். நீங்கள் உட்கொள்ளும் மிகச் சிறந்த உணவில் கூட வைட்டமின்களும் தாதுப்பொருள்களும் குறைவாக இருக்கலாம். கடும் உழைப்பாளியான உங்களைப் போன்றவருக்கு ஆரோக்கியமும், சக்தியும் மிக முக்கியமாகும்.

நாளொன்றுக்கு ஒரே ஒரு 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே உங்களுக்கு 11 வைட்டமின்கள் மற்றும் 5 தாதுப்பொருள்களின் மூலம் முழுமையான ஆரோக்யமும் சக்தியும் அளிக்கிறது. உங்கள் அன்றாட முக்கியமான தேவைகள் நாளொன்றுக்கு 15 பைசாவுக்கு மட்டுமே கிடைக்கிறது.



இன்றே உங்கள் அருகாமையிலுள்ள கெமிஸ்ட்டிடம் சென்று 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே வாங்குங்கள்.

சரியான முறையில் நாளைத் துவக்குங்கள். அதாவது, 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே மூலம் துவக்குங்கள்.

'விடாமினெட்ஸ்' ஃபோர்டே

ட்ரேட் மார்க் **'ரோஷ்'**

ஒரு 'ரோஷ்' தயாரிப்பு

ஊட்டச்சத்து நிறைந்த பளபளக்கும் சிவந்த டாப்லெட்



ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டு ஒருவர் "பில் கொடுப்பதற்குப் பணம் இல்லை. கீழே விழுந்து விட்டது" என்றார்.

"சரி! இப்ப உங்க பாக்கெட்டில் என்ன இருக்கிறது?" என்றார் ஹோட்டல்காரர்.

பதில் கிடைத்தது, "பாக்கெட்டில் இருப்பது ஒரு பெரிய ஓட்டைதான்!" என்று.



ஜட்ஜ்: இன்னும் பல வருஷங்களுக்கு ரோட்டில் நீர் கார் ஓட்டக்கூடாது!

கார்ரோட்டி: ஐயோ! நான் பிழைக்கவேண்டாமா?

ஜட்ஜ்: ரோட்டில் போகிறவர்கள் பிழைக்க வேண்டாமா?

உண்மையான மனத்தோடு வேலை தேடி அலைந்தாலும் நமக்கு வேலை கிடைப்பதில்லை. ஒரு வேளைச் சோற்றுக்கு அல்லல்படுகிறோம். நமக்கு இரங்குவார் யாரும் இல்லை. பாட்டாளி மக்களாகிய நாம் இன்று ஒன்று கூடி உரிமைக் குரல் கொடுப்போம். இந்த மாட மாளிகை, கூட கோபுர வாழ்க்கை நிலைக்காது என்று பிரகடனப்படுத்துவோம். நாம் ஒரு புது உலகம் சமைப்போம். அதில் பணக்காரன் — ஏழை என்ற பாகுபாடு இராது. அத்தகைய உலகம் தனக்குத் தானாகவே தோன்றிவிட முடியாது. அதற்காக நாம் போராட வேண்டியிருக்கும்; தியாகங்கள் பல புரிய வேண்டியிருக்கும். 'மயிலே, மயிலே! இறகு போடு' என்றால் போடுமா? எனவே வாரீர்! புரட்சிக் குரல் கொடுப்போம்!"

ஓராயிரம் பாட்டாளிகள் ஒன்று சேரக் குரல் கொடுத்தார்கள்: "புரட்சி! ஓங்குக!" வானம் அதிர்ந்தது.

ஓராயிரம் பாட்டாளிகளின் ஒருமித்த குரலையும் அமுக்கி ஒரு குரல் வானத்தின் வானத்தையுமே அதிர வைத்தது:

"ஓ கே! ரெடி ஃபார் டேக்!"

ஒப்பனைக்காரர் புரட்சிக்கார இளைஞனை நோக்கி ஓடினார். அவரோடு ஒப்பனைப் பெட்டகத்தைத் தூக்கிக் கொண்டு ஒரு பையனும் ஓடினான். ஆனால் புரட்சிக்கார இளைஞன் இருவரையும் ஓர் அதட்டல் போட்டு அப்படியே நிறுத்திவிட்டான். "முதலில் நான் தயாரிப்பாளருடன் பேசியாக வேண்டும்" என்றான்.

செட்டின் ஒரு மூலையில் இளைஞனுக்கும் தயாரிப்பாளருக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்தது. புரட்சிக்கார இளைஞன் குரலில் உறுதி தொனிக்கக் கூறினான்: "ஷூட்டிங்குக்கு முன்னால் என் தவணைப் பணம் கிடைத்தாக வேண்டும்!"

"கொண்டு வந்திருக்கிறேன்!" என்று பயமாகக் கூறியவாறே தயாரிப்பாளர் நடுநடுங்கும் கைகளைத் தம் கோட்டுப் பையில் விட்டு நோட்டுக் கத்தைகளை எடுத்தார். "எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். வள்ளிசாகப் பத்தாயிரம் இருக்கிறது!" என்றார்.

புரட்சிக்கார இளைஞன் நோட்டுக் கட்டை அலட்சியமாக வாங்கிக் கொண்டான். தயாரிப்பாளர் பயந்தவாறே, "ரசீது...?" என்று இழுத்தார்.

"நான் என் செக்ரட்டரியிடம் சொல்லுகிறேன். ஆயிரத்துக்கு ரசீது அனுப்பி வைப்பான்!" என்றான் புரட்சிக்கார இளைஞன்.

"தாங்க்யூ!" என்றார் தயாரிப்பாளர்.

புரட்சிக்கார இளைஞன் புன்முறுவல் பூத்தவாறு டைரக்டரிடம் சென்றான். "ஓ.கே. ரெடி ஃபார் டேக்!" என்றான்.

ஸ்டூடியோ முழுவதும் ஒளி பாய்ந்தது. டைரக்டர் உத்தரவிட்டார்: "ஸௌண்ட் ஸ்டார்ட்!"

"ஸௌண்ட் ரன்னிங்!" குரல் வந்தது.

கிளாப்பர் பாய் 'கிளாப்' அடித்துவிட்டு வேகமாக அப்பால் நகர்ந்து கொண்டான். இரண்டு கைகள் வானுயர எழும்பின. புரட்சிக்கார இளைஞனின் கம்பீரக் குரல் ஒலித்தது:

"தோழர்களே!"

அதற்குள் டைரக்டர் கூவினார்: "கட், கட்!"

புரட்சிக்கார இளைஞன் கடுகடுத்தான்: "ஏன்? எதற்காக?"

டைரக்டர் தலைக்கு மேல் உயர்ந்து நின்ற அவனது கைகளைச் சுட்டிக் காட்டினார்.

அவனது இடது கையில் அரிவாள் இருந்தது. வலது கையில் பத்தாயிரம் ரூபாய் நோட்டுக் கத்தை இருந்தது!

தமிழாக்கம்: ரா. வீ

12. பேட்டிக்குப் போனார்கள்



ஒரு குடம் குளிர்ந்த நீரைத் தலையில் கொட்டினாற் போல் அப்படியே சில்லிட்டு விரைத்து உட்கார்ந் திருந்தான் நரசு. சற்று முன்னால் அவனுள் கிளர்ந்தெழுந்த தன்மான உணர்ச்சிக் கனல் இப்போது புகைந்து இடம் தெரியாமல் பூத்துப்போயிற்று.

'என்ன இது, இப்படி அவசரப்பட்டு அவளிடம் குக்கலாகப் பேசப் போய்ச் சரியான பதிலடி வாங்கிக் கட்டிக் கொண்டு விட்டேனே!' என்று எண்ணித் தன்னையே நொந்து கொண்டான். 'அவள் சொன்னதும் நியாயம்தானே? ஊர் அடங்கின இரவு வேளையில் திடுதிப்பென்று வந்து சேர்ந்த என்னை, முன்பின் பார்த்திராத ஓர் இளம் பெண் — துணைக்கு யாரும் இல்லாமல் தனியே இருக்கும்போது — ரொம்பத் தாராளமாக வரவேற்று வீட்டுக்குள் உட்கார வைத்து உபசரித்திருந்தால் நானேகூட அப்போது அவளைப் பற்றியும், அவளது குடும்பத்தைப் பற்றியும் என்ன நினைத்திருப்பேன்? நிச்சயமாக எனது அந்த நினைப்பு — அபிப்பிராயம் — நல்லவிதமாய்த் தோன்றியிராதே!...'

டெலிபோன் மணியோசை கேட்டு அவள் உள்ளே போய்த் திரும்பி வராததால், மருத்துவ மனையிலிருந்து அவளுடைய தாயின் உடல் நிலை பற்றி ஏதேனும் அவசரச் சேதி வந்திருக்குமோ என்று எண்ணிப் பரபரப்பு அடைந்தவனாய் எழுந்து அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

கூடத்து அறையைத் தவிர மற்ற எல்லா அறைகளின் விளக்குகளும் அணைக்கப்பட்டு விட்டிருந்தன. உள்ளறை யொன்றில் மட்டும் சன்னமான நீல ஒளி பரவியிருப்பது தெரிந்தது. 'சரிதான்; டெலிபோனில் ஆறுதலான சேதியே வந்திருக்கும். அதனால் அவள் நிம்மதியாய்ப் படுத்து விட்டாள் போலும்.'

அவன் மனத்தில் இப்போது வேறு இரண்டு கேள்விகள் விடைத்தெழுந்தன.

'ஆமாம்; இந்தப் பெண்ணின் தாயார், எவரிடமிருந்தோ வந்த ஒரு கடிதத்தைப் படித்ததால் நெஞ்சு அடைப்பு ஏற்பட்டு உயிராபத்தான நிலைக்கு ஆளானாளாமே! அந்த அளவுக்கு அதிர்ச்சி தரக்கூடிய விஷயம் அக்கடிதத்தில் என்ன இருந்திருக்கும்? அதை எழுதியவர் யாராயிருப்பார்?... சரி; இது ஒருபுறமிருக்க, இன்று மாலை வேதமூர்த்தி சம்பந்தப்பட்ட ஏதோ ஒரு விஷயமாய் இந்த வீட்டண்டை பயங்கரக் கலவரம் ஒன்று நடந்ததாமே? போலீஸார் வந்து நிலைமையைக் கட்டுப்படுத்த வேண்டிய அளவு விபரீதமாகிப் போன அந்தச் சம்பவம் என்னவா யிருக்கும்?'

நரசுவுக்குத் தன்னை அறியாமலே ஒருவிதப் பீதி உணர்ச்சி தோன்றவே, சுற்றுமுற்றும் பார்த்தவாறு மெல்ல எழுந்து நின்று கொண்டான். தனக்குச் சம்பந்தமோ, தான் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமோ இல்லாது போனாலும், இப்படி ஏதோ சில மர்மங்கள் நிலவும் இவ்வீட்டில் தானும் ஒருவனாய் வந்து சேர்ந்திருக்கிறோமே என்று எண்ணித் திகிலடைந்து போன அவன் தன் கைக் கடிகாரத்தில் மணியைப் பார்த்தான். இரண்டு முப்பத்தைந்து.

இதற்குமேல் வேதமூர்த்தி வீட்டுக்கு வர மாட்டார் என்பது அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்தது. எனவே, இனியும் கண் விழித்துக் காத்திருந்து பயனில்லை என்ற முடிவுடன், பிரம்பு நாற்காலியைக் கூடத்து அறையில் கொண்டு போய்ப் போட்டுவிட்டுக் கதவை உட்பக்கம் தாழிட்டான். விளக்கை அணைக்கலாமா, வேண்டாமா என்ற தயக்கம். பிறகு அதை



அணைக்காமலே தன் அறைக்குப் போய்க் கட்டிலில் சாய்ந்தான்.

என்ன ஆச்சரியம்! ஓர் ஐந்து நிமிடங்களே கண்ணை மூடி விழித்தாற் போன்ற உணர்ச்சியுடன் புரண்டு படுத்த அவனது பார்வையில் காலை இளஞ் சூரியனின் ஒளிக் கதிர்கள் பளிச்சென்று தைக்கவே திடுக்குற்று எழுந்து உட்கார்ந்தான். மணி ஏழரை!

'இவ்வளவு நேரம் தூங்கிவிட்டோமே' என்று பதற்றத்துடன் முணுமுணுத்தவாறு போய்ச் சன்னல் வழியே வராந்தாவை எட்டிப் பார்த்தான். அங்கே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வர அவனுக்குத் தயக்கமாயிருந்தது. காரணம், விடிய விடியத் தூங்கி எழுந்து வரும் தன்னை வேதமூர்த்தியோ, அவரது மகளோ பார்த்துவிட்டு ஏதேனும் குறும்பாகக் கேட்டுவிடுவார்களோ என்ற அச்சம் தான்! அப்படி அவர்கள் ஏதும் கேட்காவிட்டாலும், வேலை தேடி வெளியூரிலிருந்து வந்திருக்கும் ஒரு வாலிபன் — அவ்வுத்தியோகப் பேட்டிக்காக இன்று போக வேண்டியவன் — அந்நியர் ஒருவரின் வீட்டிலே விருந்தினனாகத் தங்கியிருப்பவன் — அவ்வீட்டாரில் ஒருவர் உடல் நலமின்றி மருத்துவ மனையிலே கிடப்பதை அறிந்திருப்பவன் — இவற்றிலெல்லாம் கொஞ்சமும் கவலையோ பொறுப்போ இல்லாமல் இவ்வளவு நேரம் கும்பகர்ணன் மாதிரி தூங்கிச் சாவதானமாக எழுந்து வந்திருக்கிறானே என்று தம் மனத்துக்குள்ளாகவேனும் எண்ணிக் கசப்படைவார்கள் அல்லவா?....

உள்ளேயே சற்று நேரம் உலவிக் கொண்டிருந்த அவன் மெல்லப் போய்த் தன் அறைக் கதவைத் திறந்துவிட்டு உடனே திரும்பி வந்து குளியல் அறைக்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

முக க்ஷவரம், குளியல் முதலானவற்றை விரைவாகவே முடித்துக் கொண்டு அறைக்கு வந்த அவனுக்கு அங்கே சிலஆச்சரியங்கள் காத்திருந்தன!

ஆம்; அந்த அறை சுத்தமாகப் பெருக்கப்பட்டு, கலைந்து கிடந்த பொருட்களெல்லாம் அதனதன் இடத்

தில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்க, அன்றைய ஆங்கில — தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் இரண்டு, டீப்பாயின்மீது காணப்பட்ட, மேசையின் மேல் காலை டிபனுக்கென்று மூன்று வகைப் பலகாரங்கள் தயாராயிருந்தன. கூடத்து அறையிலோ, வேறு எங்குமோ எவருடைய நடமாட்டமும் தென்படவில்லை. பேச்சுக் குரல்கூடக் கேட்கவில்லை. ஆழ்ந்த நிசப்தமே அவ்விடெங்கும் நிலவியிருந்தது.

'இந்த வீட்டில் யக்ஷிணி கிக்ஷிணி ஏதேனும் இருக்குமோ?' என்று சிரித்தவனாய்ப் போய்த் தலை வாரி, வேறு உடை தரித்துக் கொண்டு வந்து மேசைக்கு எதிரில் உட்கார்ந்தான். காலை ஆகாரத்தை உண்டு முடித்துவிட்டு ஒரு தினப் பத்திரிகையுடன் கூடத்து அறையை நோக்கித் தயங்கித் தயங்கிச் சென்றான்.

''டிபன் பண்ணிட்டீங்களா?'' என்று இனிய குரலில் கேட்டுக்கொண்டே உள்ளறைக் கதவின் திரைச் சீலையை விலக்கிவிட்டு ஒரு தேவதையைப் போல் அத்தனை அழகும் நளினமுமாகப் புன்முறுவல் பூத்த முகத்துடன் வெளியே வந்தாள் மனோகரி. அவள் கையிலிருந்த காப்பிக் கோப்பையை அவனிடம் நீட்டினாள்.

ஏற்கனவே வியப்பாலும் திகைப்பாலும் விறுவிறுத்துப் போயிருந்த நரசு அவளை அதிசயத்தோடு ஏறிட்டுப் பார்த்தான். பிறகு சட்டென்று ஓர் அசட்டுச் சிரிப்புடன் தலைகுனிந்து, ''எல்லாம் ஆச்சு!'' என்று கூறி, காப்பிக் கோப்பையை வாங்கிக்கொண்டு சோபாவில் அமர்ந்தான்.

''ரங்குபாட்டி!'' என்று பின்னால் திரும்பிக் குரல் கொடுத்தாள் மனோகரி. சற்றைக்கெல்லாம் வயதான கிழவியம்மாள் ஒருத்தி நரசுவின் அறைக்குச் சென்று அவன் சாப்பிட்ட டிபன் தட்டுக்களை உட்பக்க வாசல் வழியே எடுத்துச் செல்வது தெரிந்தது.

மடியின்மீது பத்திரிகையைப்பிரித்துப் போட்டுச்செய்தித் தலைப்புக்களைப் பார்த்தவாறு காப்பியைப் பருகி முடித்த நரசு, கோப்பையைப் பக்கத்திலிருந்த டீப்பாயின் மேல் வைத்துவிட்டு நிமிர்ந்தான். ஆனால் மனோகரி இருந்த பக்கம் அவன் திரும்பவில்லை. கைத்துண்டால் வாயைத் துடைத்துக்கொண்டு மீண்டும் செய்தித்தாளில் தன் கவனத்தைச் செலுத்தினான். உண்மையில் அவனுடைய கவனம் முழுக்க வராந்தா வாசல் பக்கமும் உள்ளறை வாசல் பக்கமுமே லயித்திருந்தது. இப்போதோ இன்னும் சில விநாடிகளிலோ வேதமூர்த்தி தன்னைப் பார்த்துப் பேச வருவார் என்று எதிர் நோக்கியே அவ் வாறு கவனித்



துக்கொண்டிருந்தான். ஐந்தாறு நிமிடங்களுக்கு மேல் ஆகியும் அவர் வரக் காணோம்.

'நேற்றிரவு விடிய விடியக் கண் விழித்துவிட்டு வந்து படுத்தவர் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறாரோ ? அல்லது என்னைப் போல் அவரும் தாமதமாய் எழுந்து இப்போதுதான் டிபன் – காப்பி சாப்பிட்டுக் கொண்டிருப்பாரோ ?'

உயரமான முக்காலி ஒன்றின்மேல் இருந்த பூத்தொட்டியைச் சரி செய்யும் சாக்கில் இந்நேரம் அவனைக் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்த மனோகரி அங்கிருந்து உள்ளே செல்லத் திரும்பினாள்.

தன் கைக் கடிகாரத்தையும் சுவர்க் கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்து விட்டுச் சட்டென்று பத்திரிகையை மடித்துக் கொண்டே நிமிர்ந்தான் நரசு. ''இப்ப உங்க அம்மா உடல் நிலை எப்படி இருக்குது ?'' என்று தயக்கக் குரலில் கேட்டான்.

நிதானமாக நின்று அவனை இள நகையுடன் நோக்கிய மனோகரி, ''நானும் அதைச் சொல்லத்தான் வந்தேன். நீங்க பேப்பர் படிச்சுக்கிட்டு இருந்ததாலே அப்புறம் சொல்லிக் கொள்ளலாம்னு......'' என்றவள் சில விநாடிகள் மௌனத்துக்குப் பின், ''நேத்திக்கு ராத்திரியே என் அம்மாவோட ரத்த அழுத்தம் சம நிலைக்கு வந்துட்டதுன்னு டாக்டர் சொன்னார். இப்ப நல்லா எழுந்து உட்கார்ந்து பேசறாங்களாம். இன்னிக்குச் சாயந்திரமோ, நாளைக் காலம்பறவோ வீட்டுக்கு வந்துடுவாங்க'' என்று மகிழ்ச்சி கலந்த குரலில் சொன்னாள்.

'' ரொம்பச் சந்தோஷமான விஷயம் !'' என்றான் நரசு. ''மணி எட்டே முக்கால் ஆயிட்டது. வெளியே புறப்படலாம்னு நினைக்கிறேன். உங்க அப்பா என்ன செய்யறார் ?''

''அப்பாவா?.....''

''ஆமாம், அவர்கிட்டே சொல்லிக்கிட்டுக் கிளம்பறதுக்காகக் கேட்கிறேன்.....! சாப்பிடறாரா? இல்லே, எதனுச்சும் காரியமா யிருக்கிறாரா?.... அவசரம் ஒண்ணுமில்லே. இன்னுங் கொஞ்ச நேரம் கழிச்சுக்கூட நான் புறப்படலாம். பத்தரை மணிக்குத்தான் இண்டர்வியூ.''

''அப்பா வீட்டில் இல்லையே!''

சற்றே துணுக்குற்றவன் போல் அவளைப் பார்த்த நரசு, ''நேத்திக்கு ராத்திரி நர்சிங்ஹோமுக்குப் போனவர்

டீன்ஏஜ்

❋ இந்தத் தலைப்பில் சிறுகதைகளை வரவேற்கிறோம். ஆகஸ்டு முதல் வாரம் தொடங்கிப் பன்னிரண்டு டீன்ஏஜ் கதைகள் கல்கியில் பிரசுரமாகும்.

❋ வழக்கமான சன்மானம் தவிர இவற்றில் சிறந்ததென நாங்கள் கருதும் சிறுகதைக்கு விசேஷப் பரிசும் அறிமுக எழுத்தாளருக்கு மற்றொரு சிறப்புப் பரிசும் உண்டு.

❋ டீன்ஏஜ் கதைகள் இன்றைய இளம் தலைமுறையினரின் பிரச்னைகளையும் சுக துக்கங்களையும் அலசும் யதார்த்தக் கதைகளாகவோ, மர்மக் கதைகளாகவோ, நகைச்சுவைக் கதைகளாகவோ, லட்சியக் கதைகளாகவோ அல்லது வேறுவிதமாகவோ அமைந்திருக்கலாம்.

❋ அறிமுக எழுத்தாளராயின் மறவாமல் அதைக் குறிப்பிடவும். பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலைகளை வைத்து அனுப்ப வேண்டும்.

ஆசிரியர், கல்கி, சென்னை – 600031



தலைவலியா?

சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின் விரைவில் குணமளிக்கிறது



" தலைவலியைப் போக்க நான் எப்பொழுதும் அனாஸின் சாப்பிடுகிறேன் " என்கிறார், பம்பாயிலுள்ள ஒரு கப்பல் கம்பெனி அதிகாரி திரு. பரமசிவம்.

சக்தி வாய்ந்தது— ஏனெனில், உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது— திரு. பரமசிவம் போன்று லட்சக்கணக்கானவர்கள் அனாஸினை நம்புகிறார்கள். டாக்டரின் நம்பகமான மருந்தைப்போல பல மருந்துகளின் கலவையே அனாஸின்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளுவினால் ஏற்படும் வலிகள் மற்றும் நோவுகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி



Regd. User of TM : Geoffrey Manners & Co. Ltd.

ஸ்ரீ ஸீதாராம ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம்

மேற்கு மாம்பலம் ஸ்ரீராம் ஸமாஜத்தின் ஆதரவில் அயோத்யா அசுவமேத மஹாமண்டபத்தில் 14-6-73 முதல் பிரம்மஸ்ரீ மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள் ஸ்ரீமத் ராமாயண பிரவசனம் செய்து வருகிறார்கள். 8-7-73 பகல் 11-30க்கு "உமாஸம்ஹிதை"யில் சொன்னபடி ஸ்ரீ ராமசந்திரமூர்த்திக்கு "ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம்" செய்யப்பட இருக்கிறது. 30-6-73 முதல் நவாஹ விதிப்படி மூல பாராயணமும் அதற்கு அங்கமாகக் கலச பிரதிஷ்டையும், ஹோமம், ஜபம், வேத பாராயணமும் நடைபெறும். 29-6-73 வெள்ளி முதல் 8-7-73 ஞாயிறு முடிய முறையே கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், புருஷஸூக்த ஹோமம் மஹாம்ருத்யுஞ்சய ஹோமம், சண்டி ஹோமம், லக்ஷ்மீந்ருஸிம்ஹஹோமம், சுதர்சன ஹோமம், ஸ்ரீ ராம ஸாம்ராஜ்ய ஹோமம் ஆகியன நடைபெறும்.

ஆஸ்திகப் பெருமக்கள் இந்த வைபவங்களில் கலந்து கொண்டு தங்களால் இயன்ற பொருள் உதவி செய்து ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனின் அருளுக்குப் பாத்திரர்களாக வேணும்.

ஒரு புறம் ஸ்ரீ பட்டாபிராமனும் மறுபுறம் ஸ்ரீராம யந்திரமும் பொறிக்கப்பட்ட வெள்ளிக் காசுகள் பூஜையில் வைக்கப்பட்டுள்ளன. இதனைப் பெற விரும்புவோர், காரியதரிசி, ஸ்ரீராம் ஸமாஜ், 64, ருக்மணி தெரு, சென்னை - 600033 என்ற முகவரிக்கு ரூ. 10/-(வெளியூர் அன்பர்கள் ரூ. 11-50) மணியார்டர் செய்து முன்னதாகவே பதிவுசெய்து கொள்ளவும். 8-7-73 அன்று இக் காசுகள் விநியோகிக்கப்படும்.

இன்னமும் திரும்பி வரலியா ?'' என்று அவசரமாகக் கேட்டான்.

''விடியற்காலே நாலரை மணிக்கு வந்தார். ஆறு மணிக்கெல்லாம் எழுந்து குளிச்சுட்டுக் காப்பி மட்டும் சாப்பிட்டு விட்டுப் போயிட்டார்.''

''நர்சிங்ஹோமுக்கா ?''

''இல்லேன்னு நினைக்கிறேன். என் னிடம் போற இடத்தைப் பற்றி ஒன் னும் சொல்லலே.''

இதற்கு மேல் விவரம் கேட்பது நாகரிகமல்ல என்று எண்ணி, ''ஓகோ!'' என்றவாறு சிறுபொழுது மௌனமா யிருந்த நரசுவின் பார்வை வெளியே கார் ஷெட்டை நோக்கிச் சென்றது. அந்த ஷெட்டின் பெரிய கதவுகள் பரக்கத் திறந்து கிடக்க, உள்ளே கார் எதுவும் இல்லே.

மனோகரி சொல்வது உண்மையே என்பதை ஊர்ஜிதப்படுத்திக்கொண்ட அவன், ''அப்ப, சரி! நான் புறப்பட றேன்'' என்று புன்முறுவலுடன் எழுந் தான். அவளும் மென்னகையோடு தலே யசைத்தாள்.

நரசு தன் அறைக்குப் போய் அழகிய பிளாஸ்டிக் அட்டையுடன் கூடிய ஒரு ஃபைலே எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

''மத்தியானம் சாப்பாட்டுக்கு வரு வீங்க, இல்லேயா ?'' என்று கேட்டாள் மனோகரி.

தயங்கி நின்று அவளேத் திரும்பிப் பார்த்த நரசு, ''வருவது சந்தேகம். மத்தியானச் சாப்பாட்டை ஹோட்ட லில் பார்த்துக் கொள்கிறேன். அது தான் சௌகரியமாயிருக்கும்னு நினேக் கிறேன்'' என்றான். பிறகு சற்றே நிதா னித்துவிட்டு, ''உங்க அப்பா வந்தால் விவரம் சொல்லிடுங்க !'' என்றவாறு புறப்பட்டான்.

அந்த வீட்டின் காம்பவுண்ட் வாயி லேக் கடந்து தெருவில் இறங்கியபோது இதுகாறும் ஏதோ கூண்டில் அடைபட் டிருந்து தப்பி வந்தாற் போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அந்த வீட்டுக்கு வந்து ஒரு பத்து மணி நேரம் தங்கியதிலேயே இத்தனே இறுக் கப் புழுக்கமான உணர்ச்சி தோன்றி விட்டதென்றால் இன்னும் இங்கே தன் னால் எத்தனே நாட்களுக்குத் தங்க முடியும்? இவ்வாறு தனக்குள் எண்ணிக் குழம்பியவாறு வேகமாய் நடந்த அவன் சற்றுத் தூரம் சென்றபின் இனம் புரியாததோர் அச்சக் குறுகுறுப் புடன் பின்னல் திரும்பிப் பார்த்தான்.

அநாகரிகக் கேள்வியும் நாசூக்கான பதிலும்!

ஒருவர் ஒரு நம்பருக்கு டெலிபோன் செய்தார். அந்த முனையில் டெலிபோன் எடுத்த ஒரு பெண்



இவர் பேச ஆரம்பிக்கு முன்பே— ''யார் பேசுவது?'' என்றாள்.

''நீங்கள்தான் பேசுகிறீர்கள். நான் இன்னும் பேச ஆரம்பிக்கவில்லையே!'' என்றார் இவர்.

டெய்லி டெலிகிராஃப் - பாபு

அவன் சாத்த மறந்து போய் விட்ட 'கேட்'டைச் சாத்துவதற்காக வந்த மனோகரி அவனேயே பார்த்துக் கொண்டு நிற்பது தெரிந்தது.

* * *

ஏழு அடி உயரமும் ஒன்றரை அடி பருமனுமாகச் சுமார் பத்து கிரௌண்ட்டை அடைத்துப் போட்டுக் கொண்டு அமைந்த மதில் சுவர். அதன் கூம்பலான மேல் பரப்பின் நெடுகக் கூரிய கண்ணாடிச் சில்லுகள் பதிக்கப்பட் டிருந்தன. கோட்டைச் சுவர் போன்ற பிரும்மாண்டமான மதிலில் இடையே பன்னிரண்டு அடி அகலமுள்ள பெரிய வாயில். அதிலே சுவரின் உயரத்தை விட ஓர் அடி குறைந்த உயரத்துடன் கூடிய — துத்தநாகத் தகட்டாலான— பச்சை வர்ணம் பூசப்பட்ட இரட்டைக் கதவுகள். இவ்வாயில் கதவு ஒன்றின் நடுவே மற்றொரு சிறிய கதவும் பொருத் தப்பெற்றிருந்தது. ஓர் ஆள் மட்டுமே நுழைந்து செல்லும் அளவுடையது அது.

அந்தக் கதவின் மேல்புறம் ஒரு சது ரக் கோட்டினுள் 'பெல்' என்று ஆங் கிலத்தில் எழுதப்பட்டிருக்க, கம்பிக் கைப்பிடி யொன்று கொஞ்சமாக வெளி யில் நீட்டிக் கொண்டிருந்தது. மொத் தத்தில் எல்லாக் கதவுகளுமே உட்பக் கம் சாத்தப்பட்டிருந்தன.

இவ்வாயிலே விட்டுச் சற்றுத் தள்ளிச் சாலே ஓரமாகத் தம் காரைக் கொண்டு வந்து நிறுத்திக் கீழே இறங்கினர் வேத மூர்த்தி. இப்போது அவர் கோட்டும்

பேண்டும் அணிந்து கம்பீரமாகக் காட்சி யளித்தார்.

கீர்ச் சாவியை ஜேபியில் போட்டுக் கொண்டு தம் கைக் கடிகாரத்தில் மணியைப் பார்த்தார். சரியாக ஒன்பது. நிதானமாக நடந்து வந்த அவர் அந்த வாயில் கதவின் மேல் தொங்கிய கம்பி வளையத்தைப் பற்றி இழுத்தார். எங்கோ தொலை தூரத்தில் 'டிங் டிங்' என்று மணி அடிக்கும் ஒலி கேட்டது.

சில நிமிடங்களுக்குப் பின் தோட்டக் காரக் கிழவன் ஒருவன் வந்து அப் பெரிய வாயில் கதவில் இணைந்த சிறிய கதவைத் திறந்து விட்டான்.

''உள்ளே வரலாமா?''

''வாங்க! இது பார்வையாளருங்க வருகிற நேரம்தான்.''

தோட்டக்காரக் கிழவன் தான் திறந்த கதவை மறுபடியும் சாத்தாமல் திறந்தே விட்டு விட்டுத் தன் காரியங் களைக் கவனிக்கப் போனான். அந்தச் சிறிய வாயிலில் குனிந்து உள்ளே நுழைந் தார் வேதமூர்த்தி.

அது ஒரு கிறிஸ்துவக் கன்னிகாமடம். எதிரே பழைய காலத்துப் பெரிய கட்டிடம் ஒன்றும் அதன் இடது பக்க வாட்டில் புதிதாக எழுப்பப் பெற்ற மாடிக் கட்டிடங்கள் இரண்டும் இருந் தன. அந்தப் புதிய கட்டிடப் பகுதியைத் தனியே பிரித்து நடுவில் குட்டையான மதில் சுவரும் அமைந்திருந்தது. அவை பள்ளிக்கூடங்கள் போலும். அவற்றுக்கு வெளியேயிருந்து வரத் தனி வாயில் இருந்தது. பழைய பிரதான கட்டிடத்துக்கு வலப்புறம் ஒரு சிறிய கோயி லும் அதன் பக்கத்தில் அர்ச். லூர்து மாதா கற்குகை ஒன்றும் காணப் பட்டன.

விசாலமான ஒரு செம்மண் பாதையைக் கடந்து அழகிய பூந்தோட்டத்தை யொட்டி மேலண்டைப் பக்கம் வளைந்து சென்ற மற்றொரு சிறிய நடைபாதையில் திரும்பி நடந்து அப்பழைய கட்டிடத்தின் அகலமும் உயரமுமான வாயிற் படிக்கட்டை அடைந்த வேத மூர்த்தி சற்றே தயங்கி நின்றார். எழிலும் அமைதியும் தூய்மையுமாக விளங் கிய அந்த மடத்தின் சுற்றுப்புறச் சூழ் நிலையைக் கண்டு ஒரு கணம் மெய்ம் மறந்து நின்ற அவர் மெல்லப் படிகளில் ஏறினார்.

பத்துப் படிகளுக்கு மேல் ஏறி வாயிலை அடைந்தார். அவ்வாயிற் கதவும் உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. அங்கேயும் ஒரு 'காலிங் பெல்' இருந் தது. அதன் பொத்தானை அழுத்தினார்.

'கிணிங் கிணிங்'.

சில விநாடிகளுக்குப் பின், சிவப்பு பார்டருடன் கூடிய கறுப்புப் புடவை அணிந்த ஒரு பெண்மணி வந்து கத வைத் திறந்தாள்.

''யாரைப் பார்க்கணும்?''

''ரெவரண்ட் மதர் சுப்பீரியரைப் பார்க்க வந்திருக்கிறேன்.''

''உங்கள் பெயர்?''

வேதமூர்த்தி தம் 'பெயரும், வீட்டு விலாசமும் அச்சிட்டிருந்த 'விசிட்டிங் கார்டு' ஒன்றை அந்தப் பெண்மணி யிடம் நீட்டினார்.

அதை வாங்கிப் பார்த்த அவள் மரி யாதையுடன், ''உட்காருங்கள்'' என்று கூறிப் பக்கவாட்டிலிருந்த ஒரு விசால மான வரவேற்பு அறையைச் சுட்டிக் காட்டிவிட்டு உள்ளே சென்றாள்.

(தொடரும்)

ஆடவா? தேடவா?





உத்தரசுவாமி மலை

ஜூன் 7ந் தேதி புதுதில்லியில் நடைபெற்ற உத்தரசுவாமி மலை கும்பாபிஷேகத்தில் முருகப் பெருமானுக்குப் புதியதொரு மகாக்ஷேத்திரம் உதித்துள்ளது. 1. பூஜ்ய ஸ்ரீ புதுப் பெரியவர்களின் திருமுன்னர் குடமுழுக்கு. 2. ஸ்வாமிகளின் அணுக்கத் தொண்டரும் திருப்பணியின் ஜீவ நாடியான ஸ்ரீ ஆர். வெங்கடராமன். 3. யாகசாலையிலிருந்து கும்பங்கள் வருகின்றன. 4. ஸ்வாமிகளுக்குப் பின் ஆலயப் பகுதி தோற்றத்தைக் காணலாம்.







அடுத்த ரயில் வரும்

விருச்சிகன்

"அம்மா உடனே வரவும். என் பேரில் கேஸ் நடக்கிறது."

இருளை வெற்றி கண்ட அதிகாலைப் போது. வந்த தந்தியைப் பெற்றுக்கொண்டு அலமேலு உள்ளே போய் நிம்மதியாகத் தூங்கும் மகளை எழுப்பினாள். "கனகா! எழுந்திருடி. ஏதோ தந்தியாம் பம்பாயிலிருந்து வந்திருக்கிறது."

"என்னம்மா, தந்தியா?" என்று வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த கனகா, அதை வாங்கிப் படித்தாள்.

"கல்பனாதான் கொடுத்திருக்கிறாள். அவள் பேரில் கேஸ் போட்டிருக்கிறார்களாம். உன்னை உடனே வரச் சொல்லியிருக்கிறாள்."

"கேஸா? அப்படி அவள் என்ன குற்றம் செய்திருப்பாள்? விவரமாய்ப் படித்துச் சொல்லேண்டி."

"தந்தியிலே அதுக்கு மேலே எப்படி அம்மா விவரமா எழுத முடியும்? போனால் தெரியறது!" என்றாள்.





"பம்பாய்க்கு நான் போறதா? முப்பது வருஷமா பட்டணத்திலே இருந்தும் இதோ இருக்கிற புரசைவாக்கத்துக்கே தனியாப் போகத் தெரியாது எனக்கு. பம்பாய்க்கு எப்படி நான் போவேன்? அப்பவே சொன்னேன், பம்பாயிலே போய் நானூறு சம்பாதிக்கிறதை விட, இங்கேயே ஐம்பது ரூபாய் சம்பாதிச்சால் போதும்னு. கேட்டாளா, பாவிப் பெண். இப்போ கேஸ், கில்லான்னு நான் என்ன செய்வேன்? யாரைப் போய் உதவி கேட்பேன்!" அலமேலுவின் உடல் பதறியது. பேச்சுக் குழறியது. இரண்டு பெண்களையும் கட்டிய மனைவியையும் நிராதரவாய்க் கணவன் விட்டுச் சென்றபோதுகூடக் கலங்காத அவள் மனம் இப்பொழுது குழம்பியது. அலமேலு அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

"அம்மா! மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. தைரியமா இரு. ஒண்ணும் குடிமுழுகிப் போயிடுறாப்பலே நடந்திருக்காது. கடவுள் இருக்கார். நீ இன்றே கிளம்பி விடுகிறதா, அவளுக்குத் தந்தி கொடுத்திடறேன். உன்னை அவள் ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப் போவாள். நம்ப மனுஷான்னு பக்கத்திலே இல்லையேன்கிற பயத்துலே தந்தி கொடுத்திருப்பா. நீ பம்பாய் போகவேண்டிய ஏற்பாடுகளை நான் செய்யறேன். டிக்கெட்டும் வாங்கி வருகிறேன். இரவு பம்பாய் மெயில் இருக்கு. அதிலே போனால், நாளை மறுநாள் போய்ச் சேர்ந்துவிடலாம். நல்ல வேளையா, நேற்று வாங்கின என் சம்பளமும் அப்படியே இருக்கு. ஒருத்தரையும் கடன் கேட்க வேண்டாம். திரும்பி வந்து பார்த்துக்கலாம்." தாயின் பக்கத்தில் உட்கார்ந்து அவள் தவிப்பைக் கொஞ்சம் குறைத்தாள் கனகா.

"என்னவோ செய். எல்லாக் கண்றாவியையும் அநுபவிக்கணும்னு என் தலைவிதி." — அலமேலு அப்படியே படுத்துக் கொண்டாள். 'எப்படிச் சமாளிக்கப்போகிறோம்?' என்று பிரமிக்கும்படி அவளுக்கு எத்தனையோ துயரச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன வாழ்க்கையில். தனியாளாக இருந்தே எதிர்நீச்சல் போட்டுக் கரையேறியிருக்கிறாள். இரண்டு வயதுப் பெண்ணையும் வயிற்றில் இருந்த ஆறு மாதக் கருவையும் வளர்த்துப் படிக்க வைப்பதற்கு அவள் எத்தனை சிரமப் பட்டிருப்பாள்? "பெண்களுக்கே தெரியாமல் கல்யாணத்துக்கென்று சேமித்து வைத்

இருந்த ஐயாயிரம் ரூபாயையும் எடுத்துப் போய், எப்படியாவது பெண்ணை நிரபராதி யாக்கி அழைத்து வந்துவிட வேண்டும்' என்று தீர்மானித்தாள். இந்தத் தீர்மானம் உருவானதும், பதறித் துடித்த பழைய அலமேலு அல்ல அவள்; உள்ளம் திட்டங்களைப் போட, அதை நிறைவேற்றும் திடத்துடனே அவள் உடலும் செயல் புரிந்தது. அலமேலு எழுந்திருந்து பம்பாய் போவதற்கு வேண்டிய சாமான்களைச் சேகரிக்கத் தொடங்கினாள். கனகா வருவதற்குள், பாங்குக்குப் போய், கணக்கில் இருந்த ஐயாயிரம் ரூபாயையும் வாங்கி வந்தாள்; துணிமணிகளை எடுத்து வைத்துக் கொண்டாள்.

''அம்மா! இதோ டிக்கெட்டும் 'வாங்கி வந்துவிட்டேன்....ரிசர்வேஷன்தான் கிடைக்கலே. அங்கே எல்லாம் குளிரா இருக்கும்னு புதுசா போர்வைகூட வாங்கியிருக்கேன்'' என்ற மகளைப் பார்த்துச் சிரித்த அலமேலு ''குளிர்விட்டு எத்தனை வருஷமாச்சு அம்மா எனக்கு? ஹூம். உன்னை வைச்சுட்டுச் சாப்பிடு. எத்தனை மணிக்கு ரயில்?'' என்றாள்.

''சாப்பிடறதா ? சமைக்கக்கூட உன்னால் முடிந்ததா, அம்மா!'' கனகாவின் வியப்பு தாய்க்குப் புரியவில்லை.

''கஷ்டங்களைக் கண்டு அப்படியே உட்கார்ந்துட்டேன்னு நீங்கள் எல்லாம் வளர்ந்திருக்க முடியுமா கனகா? இம்..... எல்லாத்தையும் ஜீரணிச்சுண்டு, எழுந்து ஓடியாடி வேலை செஞ்சதனாலேதான் மானத்தோடு வாழ முடியறது நம்மாலே.''

''இரவு 9-50க்கு ரயில் அம்மா உனக்கு. நான் உன்னை ரயில் ஏற்றிவிட ஸ்டேஷனுக்கு வருகிறேன்.''

''அதெல்லாம் வேண்டாம். ராத்திரி பத்து மணிக்கு நீ தனியாகத் திரும்பி வரக் கூடாது. பேசாமல் வீட்டிலே இரு. நான் எட்டுருக்குப் போவேன். மனசிலே தெம்பிருந்தால் என்னதான் செய்ய முடியாது, கனகா ? நான் திரும்பி வருகிற வரைக்கும் நீ சமர்த்தா இருந்தால் அதுவே எனக்கு யானை பலம்...'' என்றபடி, பெண்ணுக்குத் தட்டத்தை எடுத்து வைத்துச் சாதம் போட்டாள் அலமேலு. கலங்காத ஒரு தாய் உள்ளத்தைக் கண்டு மற்றொரு பெண் உள்ளம் கலங்கியது.

அலமேலு ரயிலுக்குக் கிளம்பினாள் : கையில் ஒரு பையுடன். எத்தனை கெஞ்சிக் கேட்டும் கனகாவை ஸ்டேஷனுக்கு வரக் கூடாது என்று கூறி, வீட்டுக் கதவைத் தாழ்ப்பாள் போட்ட சத்தம் கேட்ட பிறகே, அலமேலு படியை விட்டுச் சாலையில் இறங்கினாள்.

ஸ்டேஷனில் தாங்க முடியாத கூட்டம். ரயில்



பிளாட்பாரத்தில் வந்து நின்றதும் குபுகுபு வென்று கூட்டம் உள்ளே பூந்திடுது. நீண்ட தூர பயிர் பிரயாணம். அவளுக்கு இது இரண்டாம் கடவை. முதல் கடவை... சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முந்தியது..... அது ஏன் இப்போது அவளுக்கு ஞாபகம் வரவேண்டும்?

அம்பாசமுத்திரத்திலிருந்து சென்னை வந்த போது அலமேலுவுக்கு இருபது வயதிருக்கும். நட்ட நடு நிசியில் ரயில் ஆட்டமும் வேகமும் தாலாட்டாக எல்லோரும் தூங்க, எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்த அலமேலுவும் ராஜதுரையும் கண்ணால் பேசிக் கொண்டார்கள்; காலை நீட்டி நீட்டி ராஜதுரை அலமேலுவைச் சீண்டினான். இன்பப் புல்லரிப்பு முகத்தைச் சிவப்பாக்க அரைக் கண்ணால் ராஜதுரையைப் பார்த்து அரைச் சிரிப்புச் சிரித்தாள் அலமேலு. அந்த சிரிப் போதில் ராஜதுரைக்குத்தான் எவ்வளவு தாகம்? தண்ணீர் என்று சைகை காட்டியதும் அலமேலு கூடையில் இருக்கும் கூஜாவை எடுத்துக் கால் டம்ளர் தண்ணீர் கொடுப்பாள். கொடுக்கும் போது டம்ளருடன் அலமேலுவின் பூவிரல்களும் ராஜதுரையின் பிடியில் மலரும்.

புதுக் கருக்கு எத்தனை நாளைக்கு? இன்பக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்த ராஜதுரையின் புதுவித ஆராய்ச்சிகளுக்கு அலமேலுவால் ஈடு கொடுக்க முடியவில்லை. 'மோகம் முப்பது நாள்' என்றாலும் அறுபது நாளுக்குக் கூட அலமேலு தயாராகத்தான் இருந்தாள். ஆனால் வேலைவெட்டி இல்லாமல்; சம்பாத்தியம் இல்லாமல். இரவு இந்த வேலைதான் போலிருக்கிறது என்பதை அறிந்ததும் அலமேலு கொஞ்சம் வெடுவெடுக்க ஆரம்பித்தாள். ராஜதுரையின் புன்சிரிப்பும் கண் சிமிட்டலும் அலமேலுவுக்கு இன்பப் புல்லரிப்பைக் கொடுப்பது போய், எரிச்சலையும் வெறுப்பையுமே கொடுக்கும் நிலை வந்த பிறகு, ராஜதுரை வீட்டுக்கு வருவதையே குறைத்துக் கொண்டான். கொஞ்ச நஞ்சம் இருந்த பூர்வீகச் சொத்தை விற்று வாங்கிப் போட்ட நகைகள் ஒவ்வொன்றும் விற்பனைக்குப் போக ஆரம்பித்தன.

நகைகள் எத்தனை நாளைக்குத்தான் சோறு போடும்? மாதத்துக்கு ஓரிரு நாட்களே வரும் ராஜதுரையின் வருமானத்தை எதிர்பார்க்காத அலமேலு, அவனைக் கேட்காமலே குறைந்த வாடகைக்கு ஒரு குடிசைப் பகுதிக்குப் போனாள். எப்போதாவது இரவு வந்தால், ''இந்தக் குடிசைக்கு வந்துட்டியே, உன் பரம்பரைப் புத்தி உன்னை விடுமா? என் தொழில் என்ன, அந்தஸ்து என்ன?'' என்று உளறிக் கொட்டிவிட்டு, சாம, பேத, தான, தண்ட வகைகளை உபயோகித்து அலமேலுவின் பெண்மையை உறிஞ்சிவிட்டுக் காலையில் போய் விடுவான். எப்போதாவது அலமேலு அழுது அழிச்சாட்டியம் செய்தால் கொஞ்சம் பணத்தையும் அவள் கண்ணில் காட்டுவான். அவன் மடியில் கொஞ்சம் அதிகமாகப் பணம் இருந்துவிட்டால் அவன் பேச்சே அலாதிதான். ''என்னடி, சும்மா ஏமாத்தறே? என்னைச் சுற்றி எத்தனை பெண்கள் தெரியுமா? நான் எக்ஸ்ட்ரா ஸப்ளை செய்யறவன்டி. அந்தப் பெண்களுக்காக என்னைச் சுற்றுகிற ஆண்கள் எத்தனை தெரியுமா? ஏதோ கட்டிய தோஷத்துக்காக உன்னையும் தவிக்க விடப்படாதேன்னு நாலுலே ரெண்டுலே வந்தா ஒரேயடியா முரண்டு பிடிக்கறயே?'' என்பான்.

ஆண்டுகள் உருள உருள ராஜதுரையைப் பார்க்கக் கூசினாள் அலமேலு; குடித்துவிட்டு உளறிக் கொட்டும் அவன் பேச்சு நாராசமாக இருந்தது அவளுக்கு. இத்தனையையும் மீறிக் கனகா பிறந்துவிட்டாள் எப்படியோ. அது போதாக் குறைக்கு இன்னொன்று வயிற்றில்... அலமேலு புழுப் போலத் துடித்தாள். அவள் பட்ட வேதனைக்கே அது உருவாகாமல் போயிருக்கலாம். ஆனால் அது கல்போல் வளர்ந்தது!

அதுவும் பெண்ணாய்ப் பிறந்ததும் அலமேலுவுக்கு வாழ்க்கையே அஸ்தமித்துவிட்டது போல் இருந்தது. அப்போதே, அந்தக் கணத்திலேயே அலமேலு, தன் கைகளை நம்பியே வாழ வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

ஒரு நாள் இரவு ஒரு மணி இருக்கும். ராஜதுரை வந்து கதவைத் தட்டினான். வெகு நேரம் கதவைத் திறக்காமல் இருந்த அலமேலு, அண்டைக் குடித்தனக்காரர்களுக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பாமல் அலுத்துக் கொண்டே வந்து கதவைத் திறந்தாள். தள்ளாடியபடி நின்ற ராஜதுரையின் கரத்துடன் தன் கரத்தைக் கோத்துக் கொண்டு இன்னொரு பெண்ணும் கண்கள் சிவக்க ஆடியபடி நிற்பதைப் பார்த்த அலமேலுவுக்குப் பொறுக்கவில்லை.

''என்னடி, அப்படிப் பார்க்கிறே? நகர்ந்து தொலை. நீதான் முரண்டறே..... அதனும் இந்தக் கிளி......'' என்று கூறியபடி அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தவனை, தெட்டித் தள்ளினாள் அலமேலு. குடிபோதையில் சுருண்டுவிழுந்தவர் இருவரும். கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே போய் விட்டாள் அலமேலு. கணவனுக்கு அன்றே வீட்டுக் கதவுடன் மனக் கதவையும் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்.

ஆண்டு ஓடிக் கொண்டேயிருந்தது; அலமேலுவின் உழைப்பை உறிஞ்சிக்கொண்டு வேண்டாமல் பிறந்தாலும் கல்பனாவையும் அலமேலு அன்புடனே வளர்த்தாள். கனகாவையும், கல்பனாவையும் படிக்க வைக்க, சோறு போட, துணிமணி வாங்கிக் கொடுக்க அவள் பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. தனி ஒருத்தியாக யாரிடமும் உதவி கேட்டுக் கெஞ்சாமல், தன் உழைப்பைக் காசாக்கியே வளர்த்தாள். கனகா கொஞ்சம் பயந்த சுபாவம்; கல்பனா அவளுக்கு நேர் எதிரிடை. அம்மா படும் அவஸ்தைகள் கனகாவிடம் அடக்கத்தை உண்டாக்கின; கடைசிப் பெண் என்ற செல்லம் கல்பனாவைக் கொஞ்சம் அடங்காப் பிடாரியாக உருவாக்கியது. படிப்பிலும் கனகாவைவிடக் கெட்டிக்காரி கல்பனா.

கனகா படித்துப் பாஸ் செய்து ஆசிரியர் வேலை பார்க்க ஆரம்பித்த அன்றே, அம்மாவின் கூலி உழைப்புக்கு விடுதலை கொடுத்து விட்டாள். "மாதம் முழுதும் ஓடாய் உழைத்தாலும் உனக்கு ஐம்பது ரூபாய்க்கு மேல் வரவில்லை. எனக்குச் சம்பளம் எண்பது ரூபாய் வருகிறது. டியூஷன் வைத்துக் கொண்டால் இன்னும் கிடைக்கும். மேலும் அரசாங்கப் பள்ளியில் வேலை கிடைத்தால் மாதம் இருநூறு ரூபாய்க்கு மேல் கணிசமாகக் கிடைக்கும். இப்போதைக்கு இந்தச் சம்பளம் போதும். நீ நிம்மதியாக இரு" என்று கனகா கூறியதும் அலமேலு வீட்டோடு இருந்துவிட்டாள்.

'நான் நிறையச் சம்பாதிக்க வேண்டும், நாகரிகமாக உடுத்துக் கவர்ச்சியாக வாழ வேண்டும்' என்ற ஆசை கல்பனாவுக்கு. படித்துப் பாஸ் செய்து, தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் கற்றுக் கொண்டாள். அதிலும் தேர்ச்சிபெற்ற நிலையில் அவள் கண்ணில் பட்டது ஒரு விளம்பரம். 'சூடிகையான பெண் அந்தரங்க உதவியாளர் தேவை. தகுதிக்கேற்றாற்போல் நானூறுக்கு மேல் சம்பளம் கிடைக்கும்' என்ற விளம்பர வாசகம் கல்பனாவைக் கவர்ந்தது. வீட்டில் யாரையும் கலக்காமல், அந்த வேலைக்கு அன்றே மனு எழுதிப் போட்டாள்; தன் புகைப்படத்தையும் அனுப்பினாள்.

அவள் நல்ல காலம், அந்த வேலைக்கு நேர்முகத் தேர்வுக்கு வரும்படியும், ரயில் செலவு மட்டும் கொடுக்கப்படும் என்றும் கடிதம் வந்தது. கல்பனாவைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை. ஒரே மகிழ்ச்சி. அந்தக் கடிதத்தைத் தாயிடம் காட்டி விஷயத்தைக் கூறியதும், "உன் அப்பா போய் உன் வயசுக்கு மேல் ஆகிறது. இருபத்துமூன்று ஆண்டுகள் ஆகின்றன. மானத்தோட வாழ்ந்துவிட்டேன். வயசுப் பெண்ணைத் தனியா அனுப்பலாமோ?" என்ற அலமேலுவின் கேள்விக்கு, "இந்த நாளில் எத்தனை பெண்கள் தனியாக லண்டன், அமெரிக்கா, ருஷ்யா என்று போகிறார்கள்? நீ கட்டுப்பெட்டி அம்மா. எனக்குப் பறக்க அனுமதி கொடு. கீழே விழாமல் பறப்பேன்" என்பதே கல்பனாவின் பதில்.

கடைசியில் கல்பனாதான் ஜயித்தாள். போக வர ரயில் சார்ஜுடன் கல்பனா புறப்பட்டாள் பம்பாய்க்கு. அவள் சென்ற நான்காம் நாள், "எனக்கு வேலை கிடைத்துவிட்டது. மாதம் நானூற்றைம்பது ரூபாய் சம்பளம். உனக்கு மாதம் இருநூறு என்னால் அனுப்ப முடியும். இன்னும் பெரிய வீடாகப் பார்த்துக் கொண்டு போய்விடு. ஒண்டுக் குடித்தனமே வேண்டாம். கொலாபாவில் என் காரியாலயம் இருக்கிறது. பக்கத்திலேயே வேலை செய்யும் பெண்கள் தங்கும் ஹாஸ்டலும் இருக்கிறது. முப்பது பைசா கொடுத்தால் பஸ். என்னுடன் வேலை பார்க்கும் கவிதாவும் அந்த ஹாஸ்டலில்தான் இருக்கிறாள். அவளுடன் தங்கிக் கொள்கிறேன். என் ஆபீஸில் நாங்கள் இருவர் பெண்கள், வெளி வேலைகளைக் கவனிக்கும் இரண்டு ஆண்கள், மானேஜர் ஒருவர். கோவிந்த தாஸ் என்ற என் முதலாளி மிகவும் நல்லவர். வயதானவர். அவருக்குத்தான் நான் காரியதரிசி. கவிதா மானேஜருக்கு. நீ பயப்படாமல் இரு. என் வேலை பர்மனென்ட் ஆனதும் நீயும் அக்காவுமே இங்கே வந்துவிடலாம். என் வேலையைப் பார்த்துக் கொண்டு, இன்னும் மூன்று மாதங்களில் அதிகமாக நூறு ரூபாய் போட்டுத் தருவதாக முதலாளி சொல்லியிருக்கிறார். உன்னிடத்தில் கூறிய சபதத்தையும் தவறாமல் காப்பாற்றுவேன்" என்று ஒரு கடிதம் வந்தது. விஷயத்தை அறிந்த அலமேலுவுக்கு மகிழ்ச்சியாகவும் இல்லை; வருத்தமாகவும் இல்லை. இனம் தெரியாத சங்கடத்தையே அவள் உணர்ந்தாள்.

ஒரு மாதம் பூர்த்தியானதும் கல்பனாவிடமிருந்து இருநூறு ரூபாய் மணியார்டர் வந்தது. வாங்கிக் கொண்ட அலமேலு உடனேயே, "மணியார்டரில் கையெழுத்திட்டுப் பணம் வாங்கவே என் கை கூசுகிறது. கல்பனா. வேலை வேண்டாம்; பணம் வேண்டாம். நீ உடனே வந்துவிடு" என்று எழுதினாள். "இந்தக் காலத்தில் பணம்தான் வேண்டும் அம்மா. நான் இன்னும் இரண்டு வருஷங்கள் வேலை பார்த்தால் அக்கா கல்யாணத்துக்கு வேண்டிய பணத்தைச் சேமித்துவிடலாம். எனக்குக் கல்யாணமே வேண்டாம். நீயும் நானும் பம்பாயில் சுகமாக வாழலாம். நீ கவலைப்படாமல் இரு." — இதுவே தாயின் கடிதத்துக்குக் கல்பனாவின் பதில்.

ஒவ்வொரு நாள் பொழுதையும் வயிற்றில் நெருப்புடன் தள்ளிக் கொண்டிருந்த அலமேலு. கல்பனா போய் மூன்று மாதங்கள் ஆவதற்குள், இப்படித் தந்தி வந்தால், பதறாமல் என்ன செய்வாள்?

பம்பாய் விக்டோரியா டெர்மினஸில் ஏகக் கூட்டம். வரும் உறவினர்களையும் நண்பர்

பேசினர், பேசினர்,



நாற்பது நிமிடம் பேசினர்!

ஓர் அமைச்சர் தாம் எழுதிக் கொண்டு வந்த பேச்சை நாற்பது நிமிடம் படித்தார். அவருக்குத் தம் காரியதரிசிமீது கோபம் வந்தது. அலுவலகம் திரும்பியதும் "உன்னைப் பத்து நிமிடப் பேச்சுத்தானே தயாரித்துக் கொடுக்கச் சொன்னேன்?" என்று கத்தினார்.

காரியதரிசி சொன்னது: "பத்து நிமிடப் பேச்சுத்தான் தயாரித்துக் கொடுத்தேன். ஆனால் நாலு பிரதிகள் டைப் அடித்துக் கொடுத்தேன்!"

டைம்ஸ் ஆஃப் இந்தியா - பாபு

களையும் அழைத்துச் செல்ல அவ்வளவு கூட்டமும் காத்திருந்தது. கூட்டம் முண்டியடித்துக் கொண்டு பிளாட்பாரத்தின் ஓரத்துக்கு விரைந்தது. அந்தக் கூட்டத்தில் கல்பனாவும் ஒருத்தி. அவளைத் தொடர்ந்தாற்போல் கட்டுமஸ்தான இன்னொரு பெண். கல்பனா போகுமிடமெல்லாம் அந்தப் பெண்ணும் தொடர்ந்து சென்றாள்.

ரெயில் வந்து நின்றதும் அந்தக் கூட்டத்தில் மோதிக் கொண்டு ஓடினாள் கல்பனா, தன் தாயாரைப் பார்த்துக் கொண்டு. பிளாட்பாரத்தில் இறங்கிய தாயாரை அப்படியே கட்டிக் கொண்டாள். அலமேலுவின் கண்களும் குளமாயின. இருவராலும் பேச முடியவில்லை.

''சரி, கல்பனா! இது ஸ்டேஷன். புறப்படு, உன் அம்மாவுடன்'' என்ற குரல் கேட்டுக் கல்பனா தாயாரை விட்டு விலகினாள்.

''யார் இந்தப் பெண்?'' என்ற தாயின் கேள்விக்கு, ''அவள் எனக்குக் காவல்!'' என்றாள் கல்பனா தொண்டை அடைக்க.

''காவலா?'' என்ற அலமேலுவின் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. அவள் அந்தப் பெண்ணைப் பார்த்தவிதமே அப்படி இருந்தது.

தன் அறைக்குள் நுழைந்ததுதான் தாமதம் இத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது கல்பனாவுக்கு.

''அம்மா, அம்மா! உலகமே பொல்லாதது. நீ சொன்னதைக் கேட்காததுக்கு எனக்கு நல்ல தண்டனை கிடைத்துவிட்டது, அம்மா. ஆண்களில் யாருமே நல்லவன் இல்லை. எவரை, நான் வயதானவர், நல்லவர் என்று உனக்குப் புகழ்ந்து எழுதினேனோ, அந்தக் கிழவனே பெருத்த அயோக்கியனாக மாறிட்டான் அம்மா. என் வேலைக்கு அவன் சம்பளம் கொடுக்கலையாம்; நான் வேலை செய்ய வேண்டாமாம். அவன் விருப்பத்துக்கு நான் இணங்கினால் போதுமாம். அதற்குத்தான் சம்பளமாம். நான் அப்படி நடந்து கொள்கிற முறையில் அவன் திருப்திப்பட்டால், மேலே நூறு என்ன, ஐந்நூறுகூடக் கொடுப்பானாம், அந்தக் கிழப் பயல். அந்தச் சுனிதாவைச் சுவைத்துத் திகட்டிப் போய் விட்டதாம். அந்த எச்சில் மானேஜருக்கு அமிர்தமாகிவிட்டது. 'நான் புதுச் சரக்காம். முதலாளித் தெய்வத்துக்குத்தான் முதலில் நிவேதனம் ஆக வேண்டுமாம்' என்று கூறாமல் கூறுகிறது அந்தக் கிழம். 'நான் சுனிதா இல்லை. வேங்கை. வாலாட்டினால் பாய்ந்து குதறிவிடுவேன்' என்று உணர்த்துவதைப் போல, அவருடன் பேச நேரும்போதெல்லாம் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டேன். இரண்டு மாதங்கள் ஆயிற்று. அந்தக் கிழத்துக்குப் பொறுக்கவில்லை. ஒரு நாள் தன் அறையில் என் கையைப் பிடித்து, 'உனக்குச் சம்பளம் எதற்கு? இந்த நிறுவனமே உன்னுடையதுதான். நீதான் முதலாளி' என்று கூறிவிட்டுச் சிரித்தது. அவ்வளவுதான். கையை உதறி எடுத்துக் கொண்டேன். அதன் மேஜையிலிருந்த ரூல் தடி, கண்ணாடி பேப்பர் வெயிட், அலங்கார மைக் கூண்டு என்று எது எது கையில் கிடைத்ததோ அதனால் எல்லாம் விளாசினேன். மண்டையில் நல்ல அடி. ஐயோ என்று கத்திக் கொண்டு கிழம் விழுந்துவிட்டது.. இந்தக் கலாட்டா வெளியில் கேட்டு, எல்லோரும் உள்ளே ஓடி வந்தார்கள். 'என் ஆசைக்கு அந்தக் கிழம், முதலாளி இணங்காததினால் வெறி கொண்டு, பணத்தாசை கொண்டு அடித்துவிட்டதாக' போலீசில் புகார் செய்தார்கள். கேஸ் நடக்கிறது. என் கதியை அறிந்த சுனிதா, எனக்காக உண்மைச் சாட்சி சொல்ல முன்வந்திருக்கிறாள். அவள் உதவியுடன்தான் பெயிலில் இங்கேயே தங்கியிருக்கிறேன். நாளைக்கும் விசாரணை இருக்கிறது. சுனிதா எனக்காகவும், மானேஜர் கிழவன் முதலாளிக் கிழத்துக்காகவும் சாட்சி சொல்லப் போகிறார்கள். இந்த நிலையில் தனியாக இருக்கப் பயமாக இருந்ததினால்தான் உன்னை வரவழைத்தேன். உன் பேச்சைக் கேட்காமல் வந்த என்னை மன்னித்து விடு, அம்மா!''

முழு விவரத்தையும் கேட்ட அலமேலுவுக்குப் பெண்ணின் மேல் கோபத்தைவிட, அநுதாபமே பிறந்தது. சிறந்த கற்புக்கரசிகள் வீரப் போர் செய்ததைப் போலவே தன் மகளையும் எண்ணினாள். ''கவலைப்படாதே, கல்பனா! கையில் ஐயாயிரம் ரூபாய் பணத்தோடு வந்திருக்கிறேன். எப்படி எப்படி, என்ன என்ன செய்யலாம் என்று நாளைக்குப் பார்க்கலாம்!'' என்று கலங்கி நிற்கும் பெண்ணுக்கு ஆறுதல் சொன்னாள் அலமேலு.

பொழுது விடிந்தது. தொழில் நகரச் சந்தடி உச்ச கட்டத்தை அடைந்தது. சாரி சாரியாக மனித யந்திரங்கள் நடந்தன; பஸ்ஸில் சென்றன. சைக்கிள், ஸ்கூட்டர், கார் மயம் சாலையில். ஜீப்பில் கல்பனா, அலமேலு, சுனிதா ஆகியவர்களுடன் இவர்களை இட்டுச் செல்லும் பெண்ணும் உடன் சென்றாள்.

எட்டாவது மாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நல்ல கூட்டம். சத்தியம் பேசுவதாகப் பிரமாணம் எடுத்துக் கொண்டு சத்தியக் கலப்பே இல்லாத சாட்சியம் சொல்லக் கூண்டேறி நின்றார் மானேஜர். கோர்ட்டின் வாயிலில் நுழைந்தனர், தாயும் மகளும் மற்ற இருவர்களுடன். கோர்ட் என்றால் என்ன என்றே தெரியாத அலமேலு தன் விழியோட்டத்தைச் சுழற்றினாள். கணப் பொழுதில் அந்தக் கோர்ட்டே அமளிதுமளிப்பட்டது. குறுக்கும் நெடுக்கும் ஓடினர். கையில் சோடாவுடன் விரைந்தனர் சிலர். ஆம்புலன்ஸுக்குப் போன் பறக்கிறது. யாரோ மயக்கமடைந்து விழுந்துவிட்டதாகச் செய்தி அடிபட்டது. 'யார், எது, என்ன?' என்றே புரியவில்லை. அன்றைய கேஸ் எல்லாம் தள்ளிப் போடப்பட்டதாக அறிவிப்பு முழங்கியது. கூட்டத்தில் இடிபடாமல் வெளியே வந்தால் போதுமென்று தாயும் மகளும் வெளியேறினர்.

ஹாஸ்டலில் வந்திறங்கியதும், அலமேலு பெண்ணுடன் எதுவும் பேசாமல் தனித்து உட்கார்ந்து கொண்டு ஏதோ யோசித்த வண்ணமாயிருந்தாள்.

பொழுது விடிந்தது. மணி மூன்றுக்கு மேல் ஆகிவிட்டது. தாயும் மகளும் விட்டேற்றி

யாகப் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அப்போது கோர்ட்டுச் சேவகன் ஒருவன் வந்து, ஒரு சம்மனைக் கொடுத்துக் கல்பனாவிடம் கையெழுத்து வாங்கிச் சென்றான். ''எரங்கித் தேதி சம்மனு இருக்கும்'' என்றபடி கல்பனா பிரித்துப் படிக்கலானாள். படிக்கப் படிக்க அவளுடைய கண்கள் வியப்பால் விரிந்தன.

''என்னடி அது. சொல்லித் தொலையேன்'' என்றாள் அலமேலு அலுத்துக் கொண்டு.

''எந்தக் கடவுளோ, என்னவோ அற்புதம் செய்திருக்கிறது. 'தனக்கும் கம்பெனிக்கும் இழுக்கு' என்று இப்போதுதான் அந்தக் கிழத்துக்குத் தோன்றி வழக்கை வாபஸ் வாங்கிக்கிட்டதாம். அதனால் நாம் இன்னைக்கே கிளம்பிவிடலாம். நீ வந்த அதிருஷ்டம் அம்மா!'' என்றாள் கல்பனா, மகிழ்ச்சித் துள்ளலுடன்.

''இம்..... யார் அதிர்ஷ்டமோ? அதுக்கு எதுக்காக இப்படிக் குதிக்கிறே?''

''குதிக்காம.... இன்னைக்கே, இப்பவே புறப்பட்டாகணும்.''

'' எங்கேடி புறப்பட்டாகணும் ?''

''எங்கேயா? சென்னைக்குத்தான்....!''

''போக வேண்டியதுதான்!''

''என்ன இழுக்கறே! இம். இம்... எழுந்திரு. இந்தத் துணியை எல்லாம் எடுத்து மூட்டை கட்டு. இன்னிக்கு டிக்கட் கிடைக்கல்லேன்னு நாளைக்குப் பகல் வண்டி.....''

''சரி, சரி, நீ போய் டிக்கெட் கிடைக்கிறதான்னு பார்த்துண்டு வா.''

''உன்னை இங்கே தனியா விட்டுட்டா ? முடியாது. நீயும் கிளம்பு.''

அலமேலு பெண்ணுடன் புறப்பட்டாள். பஸ்ஸில் சென்றபோது அலமேலுவின் கண்கள் வெளியே துழாவின. ''என்னம்மா, வெளியில் பார்வை? எப்போதும்?'' என்று கடிந்து கொண்டாள். ''என் மனசு உனக்குத் தெரியாது. நீ பேசாம வா'' என்றாள் அலமேலு. ''தெரிஞ்சுதான் சொல்றேன், யாரையும் தேடாதே '' என்றாள் கல்பனா பட்டென்று.

அலமேலு பெண்ணை முறைத்துப் பார்த்தாள். ஏதும் பேசாமலே மறுநாள் மெயிலுக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு திரும்பினர். இரவு அலமேலு சாப்பிடவே இல்லை.

காலையில் பொழுது விடிந்ததும், கல்பனா ஊருக்குக் கிளம்பத் தயாராகிவிட்டாள். ஹாஸ்டலில் மற்ற அறைகளிலிருந்த தோழிகளிடம் சொல்லிக் கொண்டு வரப்போனவள் திரும்பி வந்ததும் அறையில் தாயாரைக் காணாமல் கட்டுக்கடங்காத கோபத்துடன் வெளியில் வந்து பார்த்தாள். வாசலிலிருந்து அலமேலு திரும்பி வருவதைக் கண்ட கல்பனா, ''திருப்தியாச்சா உன் மடமனைக்கு?'' என்று எரிந்து விழுந்தாள்.

''கல்யாணமானத்தாண்டி, உனக்குப் புரியும். சரி, சரி, கிளம்பு.''

''எனக்குப் புரியவே வேண்டாம்.''

'' இரண்டு ' டிக்கெட்தானே வாங்கியிருக்கே?'' என்று சம்பந்தமில்லாமல் கேட்டாள் அலமேலு.

''ஏன், மூணு டிக்கெட் தேவையோ?''

''இல்லே, கேட்டேன்.''



''என் கணவருக்கும் எனக்கும் மனஸ்தாபமே ஏற்பட்டது இல்லை! ஏதேனும் சண்டை வந்தால் ஞாயம் என்பக்கம்தான் என்று ஒத்துக் கொண்டு விடுவார்.''

''ஒரு சமயம் ஞாயம் அவர் பக்கத்திலிருந்தால் ?''

''அதுமாதிரி சமயம் வந்ததே இல்லே!''

கல்பனா முறைத்துப் பார்த்தாள் தாயாரை. அலமேலு அதை லட்சியம் செய்யவே இல்லை.

சென்னைக்குப் புறப்படும் ரயிலில், கல்பனாவும் அலமேலுவும் ஓர் ஓரத்தில் இருந்தனர். அலமேலுவை விடாமல் கண்காணித்து வந்தாள் கல்பனா. அலமேலுவின் உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. கைகால், கண் எல்லாம் பரபரத்தன. ரயில் நகரத் தொடங்கியது.

அலமேலு ஜன்னலுக்கு அப்பால் விழிகளை ஓடவிட்டாள். அவள் பார்வை பிளாட்பாரத்தில் சற்றுத் தள்ளி நின்றவரின் பார்வையைச் சந்தித்தது. குனிந்த தலையை நிமிர்த்தி அவரும் பார்த்தார் ; கண்கள் கலங்கின. ரயில் வேகமாகச் செல்ல ஆரம்பித்தது.

''அடுத்த ரயிலில் நிச்சயமா வாங்கோ!''

அலமேலுவின் குரல் சத்தமாக அந்தப் பிளாட்பாரத்தில் ஒலித்தது.

''கோர்ட்டில் உன்னைப் பார்த்து அவன் மயக்கம் அடைந்ததுமே எனக்கு விளங்கிப்போச்சு, கருவிலே வளர்ந்துவரும் பெண்ணைக் காணாமல்ஓடிய கிராதகன்னு. உன்னோட என்னைப் பார்த்த அந்தப் பாவிதான், உன்மையை உணர்ந்து கேஸை வாபஸ் வாங்கச் செஞ்சிருக்கான். அவன் கண்ணிலே படாம உன்னைக் காக்கப் பார்த்தேன் ; கடைசியிலே அவனோட பேசிட்டியே பாவி!'' கல்பனா பதறிப் பதறித் துடித்தாள்.

மாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு, ''அடுத்த ரயில் வரும்; அவரும் வருவார்!'' என்றாள் அலமேலு.

''அதற்கடுத்த ரயில் கிளம்பும்; நானும் புறப்படுவேன்'' என்றாள் கல்பனா.



அநாமிகா

ஊர் - பெயர் தெரியாத பெண் அநாமிகா, ஓடும் காரிலிருந்து விழுந்து மூர்ச்சையாகிறாள். தேவேந்திரன் என்னும் புகழ் பெற்ற எழுத்தாளனின் காரில், அவன் வீட்டுக்கே எடுத்து வரப்பட்டு மூர்ச்சை தெளிவிக்கப்படுகிறாள்.

மறுநாள் காலை தேவேந்திரனையே தன் கணவன் என்று கூறி உறவு கொண்டாடத் தொடங்கிவிடுகிறாள்! தேவேந்திரனோ காதலில் தோல்வியைத் தழுவிச் சூடு கண்ட பூனை. எனவே பெண் என்றாலே வெறுப்பை உமிழ்பவன்.

வெறுப்பை விருப்பாக மாற்றும் முயற்சியில் அநாமிகா வெற்றி காண்கிறாள். அநாமிகா பாத்திரம் ஏற்றிருப்பவர் ஜயாபாதுரி. அவருக்கே இயல்பான முத்திரைச் சிரிப்பும் ஒத்துழைத்து வெற்றி தேடித் தருகிறது!

எழுத்தாளன் பாத்திரம் ஏற்றிருக்கும் சஞ்சீவ் குமாரும் வெறுப்பைக் [illegible] விருப்பைக் காட்டும் [illegible] அவருக்கு இணையாக நடித்திருக்கிறார்!

எழுத்தாளனைச் செல்வந்தனாக்கி அவனுக்கு ஒரு செயலாளரையும் படைத்திருக்கிறார்கள் இந்தப் படக் கதையிலே. எத்தனையோ நடக்கக் கூடாத கதைச் சம்பவங்களில் இதுவும் ஒன்று. செயலாளர் பாத்திரம் ஏற்றிருப்பவர் அஸ்ராணி. கற்பனைக் காதல்கள் பல புரிந்து இன்பச் சுவையோடு நகைச் சுவையையும் வழங்குகிறார்!

பெரும்பாலான ஹிந்திப் படங்களில் போலீஸ் அதிகாரியாகவே வந்து மிடுக்காக நடித்து நடித்துப் பழகிய இஃப்தெகார் இப்படத்தில் டாக்டராக வருகிறார். ஒரு மாறுதலுக்காக. இருந்தாலும் அவரிடம் ஒரு போலீஸ் மிடுக்கையே காண்கிறோம்.

சிம்லா நடிக்கிறது! சஞ்சீவ் குமாருக்கு முன்பொரு படத்திலேயே பழகிப்போன சிம்லா 'ஸ்கேட்டிங்' விட்ட குறை தொட்ட குறையாகப் பற்றிக் கொள்ளுகிறது! ஆக, ரசிகர்களுக்கு இரட்டை இடைவேளை!

அநாமிகாவின் வாழ்க்கையிலே சிம்லாக் காட்சி ஒரு சிக்கலை ஏற்படுத்தவே, எழுத்தாளன் மனம் குமுறி ஊர் திரும்புகிறான்.

பல பெயர்களில் உலாவிய அநாமிகாவின் வாழ்க்கையை 'ஃப்ளாஷ் பாக்' உத்தி சித்திரிக்கிறது. கல்யாணமாகியும் அவள் கன்னி, முகராத முல்லை என்பதை நிரூபித்து எழுத்தாளனின் மனத்தை மாற்ற முயல்கிறது.

யுத்த காண்டம் இல்லாமல் நமது திரைப் படம் எதுவும் முடியாதே! அடி — உதை — குத்து, சண்டை ஆகியவற்றை வழங்கிக் கதை முடிகிறது! ஜயாபாதுரியும் இதில் கலந்து கொண்டு தம் பணியைப் புரிகிறார்! என்ன பண்ணுவது? வேதாளத்துக்கு வாழ்க்கைப்பட்டால் முருங்கை மரத்தில் ஏறித்தானே ஆக வேண்டும்?

— ரா. வீ.





ஆனந்தன் சற்று நேரம் கண்களை மூடிக் கொண்டு அந்தப் பழைய நினைவுகளை, அந்த ஞாயிற்றுக் கிழமையை நினைத்துப் பார்த்தான்; பிலைப்படலம் போல. புவனா தன் எதிரே வந்ததும், பின்னர் தன் காலில் விழுந்து நமஸ்கரித்ததும் நெஞ்சத்தில் நிழலாடியது. அந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியையே மனத்தில் திருப்பித் திருப்பி நினைத்துப் பார்த்துக்கொண்டிருக்கும்போது தலைக்கு மேலே மின்விசிறி ஓடும் சத்தம் மெல்ல அவனை ஆபீஸினுடைய சூழ்நிலைக்குக் கொண்டு வந்தது.

எதிரே, மேஜையில் பியூன் சற்று முன் கொண்டு வைத்துவிட்டுப்போன காப்பி ஆறிக் கொண்டிருந்தது. காப்பியை எடுத்துப் பருகிக் கொண்டே, தலைமயிரைக் கோதி விட்டுக் கொண்டான். நாற்காலியில் பின்வாக்காகச் சாய்ந்து கொண்டு பின் சுவரில் தலையைச் சாய்த்துக் கொண்டு அவன் — புவனாவின் விழிகளை மறுபடியும் மனத்தில் தேக்கி நிறுத்திப் பார்த்தான்.

பூஜைக்கு வந்த மலர்



போன ஞாயிற்றுக் கிழமைதான் அவன் தன்னுடைய ஓரே உறவினரான மாமாவுடன் புவனாவைப் பெண் பார்க்கப் போனான். இதற்கு முன் அவன் புவனாவைப் பற்றி அறிந்ததுமில்லை; பார்த்ததுமில்லை. மாமாவினுடைய கட்டாயத்துக்காக, அவர் மேல் வைத்திருக்கும் மரியாதைக்காகத்தான் அவருடன் அவர் சொன்ன பெண்ணைப் போய்ப் பார்த்தான். அந்த நிகழ்ச்சி ஒரு பசுமையான மரம் போல் நெஞ்சம் முழுதும் இன்னும் வியாபித்திருக்கிறது.

முன் பின் போயிராத அவர்களுடைய வீட்டில் அவன் நாற்காலியில் வழக்கத்துக்கு மாறாக எட்டு முழ வேஷ்டியுடன் பட்டும் படாமல் அமர்ந்திருந்தது. அவன் பெரியவர்களுக்குப் பின்னால் பட்டுப் புடவை சரசரக்க வந்தது. அவன் காலில் விழுந்தது. பின்னர் அவன் எதிரே பாயில் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டு அமர்ந்திருந்தது. எல்லாமே இப்போது இனிமையாகத்தான் இருக்கின்றன — நினைத்துப் பார்ப்பதற்கு.

அப்படி அவன் அமர்ந்திருந்தபோது அவன் நெற்றி முழுக்க முத்து முத்தாக வியர்த்திருந்ததை இப்போது நினைத்தாலும் அவனுக்குச் சிரிப்பு வருகிறது.

அவனைப் பொறுத்தவரையில் பெண்ணைப் பிடித்து விட்டது. ஆனால் அவனே அவன் வாயால் முடிவைச் சொல்ல முடியுமா? மாமா மூலமாகத்தான் சொல்ல வேண்டும். ஏதோ பிஸினஸ் விஷயமாக மாமா மறுநாளே எங்கோ கிளம்பி விட்டார். அவர் வந்தவுடன்தான் சொல்லி அனுப்பவேண்டும். இந்த நான்கு நாட்களுக்குள் ஆனந்தன் மனத்தில் இலேசாகச் சபலம் உண்டாகிவிட்டது. சிற்சில சமயங்களில் அவனுடைய இயல்பான பாதையை விட்டு விலகி, தானே அவளுக்குச் சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதிவிட்டால் என்ன என்று கூடத் தோன்றியது அவனுக்கு.

காலியான காப்பி டம்ளரை எடுத்துச் செல்லுமாறு பியூனைக் கூப்பிடுவதற்காக அவன் யத்தனித்தபோது அவனே உள்ளே வந்தான், டம்ளரை எடுத்துக் கொண்டு, அவன் கையில் ஓர் இன்லாண்ட் லெட்டரைக் கொடுத்துவிட்டுப் போனான். கடிதத்தை வாங்கிப் பார்த்தான். யார் எழுதியிருப்பார்கள் என்று அவனால் அநுமானிக்க முடியவில்லை. ஏனென்றால் விலாசம் எழுதியிருந்த கையெழுத்து அவனுக்குப் புதிதாக இருந்தது.

கடிதத்தை உடைத்துப் பிரித்துப் பார்த்தான். கடிதத்தில் ஆறே வரிகள்.

மதிப்புக்குரியவர்க்கு,

பெண் பார்த்துவிட்டுப் போன நீங்கள் இன்னும் முடிவை ஒன்றும்தெரிவிக்கவில்லை. இந்த வெள்ளிக் கிழமை மாலை 6-30 மணிக்கு மெரீனாவில் காந்தி சிலைக்கு நேரே கடலருகில் வர இயலுமா? நான் தங்களுக்காகக் காத்திருப்பேன். அன்புள்ள,

புவனா

கடிதத்தின் கடைசியில் அவள் யார் என்பதை அவனுக்கு நன்றாக நினைவுறுத்தும் வண்

ணம் அவர்கள் வீட்டு விலாசத்தையும் தெளிவாக எழுதி யிருந்தாள்.

இந்தக் கடிதத்தைப் படித்ததும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் எந்த நோக்கத்தோடு இந்தக் கடிதத்தை எழுதி யிருப்பாள் என்றும் ஒரு முடிவுக்கு வர முடிய வில்லை. கடிதத்தைத் திருப்பிப் பார்த்தான். மிஸ்டர் ஆனந்தன் என்று முத்து முத்தான எழுத்தில் அவள் எழுதி யிருந்த விலாசத்தைப் படித்தபோது மனம் சிலிர்த்தது. தன் கைப்படவே அவள் தன்னுடைய பெயரை எழுதி யதை நினைத்தபோது இலேசாகப் பெருமையாகக் கூட இருந்தது.

கடிதத்தை மறுபடியும் படித்துக்கொண்டு இருக்கும் போது பியூன் வந்து மேஜையில் ஒரு லெட்ஜரை வைத்தான். அவன் கடிதத்தை மடித்துப் பாக்கெட்டில் பத்திரமாக வைத்துக்கொண்டு லெட்ஜரில் ஆழ்ந்தான்.



எண்கள் எல்லாம் பட்டாம்பூச்சியாய்க் கண்முன்னே பறந்தன.

வெள்ளிக்கிழமை.

கடற்கரை மணலில் கால்கள் புதையப்புதைய நடந்து கொண்டிருந்தான் ஆனந்தன். எதிரே பற்பல வண்ணங்களில் ஒளிர்ந்த யாருமே அவன் கண்களில் படவில்லை. அந்தக் குறிப்பிட்ட இலக்கை நோக்கியே அவன் கால்கள் சென்று கொண்டிருந்தன. கால்களைவிட மனம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. தூரத்திலிருந்தே அவளை இனம் கண்டு கொண்டு விட்டான் ஆனந்தன். அவள் இந்தப் பக்கம் திரும்பாமல் கடல் அலைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நிதானமாக அவள் அருகே போய் நின்றான் ஆனந்தன். ''மிஸ்!'' என்றான். குரல் சரியாக எழும்பவில்லை. அவளுக்கும் இந்த இரைச்சலில் கேட்டிருக்காது. அவள் எதிரே போய்த் தயங்கி நின்றான்.

எதிரே ஏதோ நிழலாடியதும் தலையைத் தூக்கிப் பார்த்தாள். இவனைக் கண்டதும் சட்டெனத் தவறு செய்துவிட்ட உணர்ச்சியுடன் எழுந்து நின்று விட்டாள். அவன் அவளைப் பார்த்தது, மரியாதையுடன் எழுந்து நின்றது எல்லாமே சில விநாடிகளுக்குள் நிகழ்ந்து விட்ட போதிலும் அந்த விநாடிகள் அவனைச் சுண்டி இழுத்தன.

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு அவள் தான் ஆரம்பித்தாள். ''நீங்கள் இன்னும் உங்கள் முடிவைத் தெரிவிக்கவில்லையே.''

''இப்படி உட்காரலாமா?'' என்று கூறிவிட்டு உட்காருவதற்காகப் பாக்கெட்டிலிருந்து கர்சீப்பை எடுத்து உதறினான்.

இருவரும் அமர்ந்ததும், கைகளால் மணலைப் பிடிப் பிடியாக அள்ளிக் கொண்டே சொன்னான் : '' நான் முடிவைச் சொல்லித் தான் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமா?''

'நீங்கள் எனக்கோர் உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டாள் அவள்.

''எஸ்....வித் ப்ளெஷர்!'' என்று கூறிவிட்டு என்ன என்பது போல அவளைப் பார்த்தான்.

''என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிடுங்களேன்'' என்றாள் அவள் திடீரென்று.

ஆனந்தன் ஒரு கணம் இடிந்து விட்டான். அவள் கவனத்துடன்தான் இதைச் சொல்கிறாளா என்றுகூடச் சந்தேகப்பட்டான்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''தயவு செய்து என்னைப் பிடிக்கவில்லை என்று கூறிவிடுங்கள்.''

''என்னைப் பொய் சொல்லச் சொல்கிறீர்களா?''

இந்தப் பதிலை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாளோ? இந்தப் பதிலைக் கேட்டதும் அவள் ஒரு கணம் தயங்கினாள். அவளுடைய கண்ணிமைகள் படபடத்தன. பின்னர் ''ப்ளீஸ்!'' என்று கூறிவிட்டு அவன் சற்றும் எதிர்பாராதபோது கைகள் இரண்டையும் கூப்பிவிட்டாள்.

அவன் பதறிவிட்டான்.

''நோ நோ... என்ன இது. குழந்தைத்தனமாய்.... ப்ளீஸ் டோண்ட்... உங்களுக்கு என்ன வேண்டும்? உங்களைப் பிடிக்கவில்லை என்று கூறவேண்டும். அவ்வளவுதானே? ஓ.கே. ஆனால் உங்களுடைய இந்த முடிவுக்கு என்ன காரணம்?''

அவள் பதில் பேசவில்லை.

''அதாவது உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை. அப்படித்தானே?'' என்றான் ஒரு வெறுமையான புன்னகையுடன்.

''நோ, நோ'' என்றாள் அவள் பதற்றத்துடன். ''அப்படிச் சொல்லக் கூடிய அளவுக்கு நான் கேவலமானவள் இல்லை. இது வேறு காரணம்.''

''என்ன?''

''நான் ஒருவரை விரும்புகிறேன்.''

''ஐ ஸீ. குட்! அப்படியானாலும் நான் பின்வாங்கிக் கொள்கிறேன். யார் அந்த அதிர்ஷ்டசாலி?''

''என்னுடைய ஆபீஸில் அக்கௌண்டன்ட். ஆனால் அவருக்கும் எனக்கும் இடையே இன்னும் பரிபூரண உறவு ஒன்றும் மலரவில்லை. மலரலாம் என்று எனக்கொரு நம்பிக்கை.''

''மை பெஸ்ட் விஷஸ்!''

''நான் அந்த உறவை எதிர்பார்க்கிறேன். அதற்கு இந்தத் திருமணப் பேச்சு ஒரு தடையாக இருக்குமோ என்று எனக்கு ஒருவித பயம். எனவேதான்....''

''எனக்கு உங்களுடைய மனநிலை புரிகிறது. நான் என்னுடைய பரிபூரண ஒத்துழைப்பைத் தருகிறேன். உங்களுக்காக எந்தவிதமான முடிவைத் தெரிவிக்கச் சொன்னாலும் தெரிவிக்கிறேன்.''

''தாங்க்யூ சார்! ஆனால் நான் உங்களை மிகவும் புண்படுத்தி விட்டேனா?''

''நோ. நாட் லைக் தட். ஆனால் ஒரு சிறு விண்ணப்பம்.''

''என்ன?'' என்றாள் அவள்.

''உங்களுடைய திருமணத்துக்கு எனக்கு அழைப்பாவது அனுப்புவீர்கள் இல்லையா?''

இந்தக் கேள்வி அவள் மனத்தில் சம்மட்டி போல் இறங்கியிருக்க வேண்டும். அவள் தலைகுனிந்து கொண்டு விட்டாள். சிறு விசும்பல்கள் கேட்ட பின்னர்தான் புரிந்தது, அவள் சின்னஞ்சிறு குழந்தைபோல் அழுது கொண்டிருக்கிறாள் என்று.

இப்போது என்ன செய்வதென்று அறியாமல் அவள் அழட்டும் என்று விட்டுவிட்டான் ஆனந்தன். திடீரென்று அவள் எழுந்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள். பிறகு வேகமாகச் சொன்னாள்: ''உங்களிடமே இப்படியெல்லாம் பேசுகிற நான் ஒரு பாவி சார். உங்களைப் போன்ற பண்புள்ளவர்களிடம் பேசுவதற்குக்கூட எனக்கு அருகதை இல்லை சார். நான் ஒரு கேவலமான பூச்சியைப் போன்றவள். தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய ஆசைகளை நான் அழித்து விட்டேன். இந்த நிகழ்ச்சியைத் தயவுசெய்து மறந்துவிடுங்கள்'' என்று கூறிவிட்டு விடுவிடுவென்று நடந்துவிட்டாள்.

பாக்கெட்டில் கையை விட்டுக் கொண்டு சிறிது நேரம் அவள் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றான் ஆனந்தன். யோசித்தான்; இலேசாகச் சிரித்தான்.

இந்த நிகழ்ச்சி நடந்து இரண்டு மாதங்கள் கழிந்த பிறகு ஒரு நாள். அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அவள்தான் எழுதியிருந்தாள்.

மதிப்புக்குரியவர்க்கு,

உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதவே எனக்குக் கூசுகிறது. அந்த அளவுக்கு உங்களுக்குக் கடிதம் எழுத அருகதையற்றவளாக ஆகிவிட்டேன். அன்று கடற்கரையில் உங்களிடம் பேசிவிட்டுப் போன பிறகு நான் அன்று முழுவதும் அழுதேன். என்னை அழவைத்தது உங்களுடைய அந்தக் கண்ணியம்தான். உங்களுடைய அந்த அடக்கத்துக்கும், பொறுமைக்கும், மென்மைக்கும் முன்னால் என்னால் தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை.

நீங்களே உங்கள் மனத்தில் இது குறித்து ஓர் ஆய்வுக்கு இடம் கொடுத்தால் புரியும். பெண் பார்த்துவிட்டுப் போன பிறகு,

அந்தப் பெண்ணே அவருக்குக் கடிதம் எழுதுவது நமது சமூகத்தில் எந்த அளவுக்கு அத்துமீறிய செயல் என்பது உங்களுக்குப் புரியும். நான் அப்படி எழுதினேன். எழுதியது மட்டுமல்லாமல் உங்களைச் சந்தித்து என்னைப் பிடிக்கவில்லை என்று கூறும்படியும் கேட்டுக் கொண்டேன். வேறு யாராவதாக இருந்தால் என்னைக் கடற்கரையிலேயே மிகவும் கேவலமாகத் திட்டியிருப்பார்கள். நீங்களும் திட்டியிருக்க வேண்டும். ஆனால் நீங்களோ சிரித்தீர்கள். அந்தச் சிரிப்புத்தான் என்னைக் கொல்கிறது. நீங்கள் அப்படி விட்டுக் கொடுத்தது தான் என்னை வேதனையுறச் செய்கிறது. உங்கள் முன்னால் நான் தூசி மாதிரி ஆகிப் போனேன். நீங்கள் என்னைத் திட்டியிருந்தால் நான் மிகவும் சந்தோஷப் பட்டிருப்பேன். என் பண்பு மீறிய செயலைக் கண்டால் வெறுப்பு ஏற்படும் என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனால் நீங்கள் என்னை வென்று விட்டீர்கள்.

நான் மற்றொருவரை விரும்புவதையறிந்தும் அதற்கு மனமுவந்து ஆசி கூறிய உங்களுடைய செயல்தான் என்னைக் குத்துகிறது. 'எனக்குத் திருமண அழைப்பாவது அனுப்புவீர்களா?' என்ற ஒரே கேள்வியில் உங்களுடைய மனசை நீங்களே அறியாமல் காட்டி விட்டீர்கள். உங்களுடைய அந்த மென்மையான மனத்தை நோகச் செய்து விட்டோமே என்றுதான் அன்று நான் குலுங்கிக் குலுங்கி அழுதேன்.

இந்தக் கடிதத்தை இப்போது நான் எழுதும் நோக்கமே இதுதான்: நீங்கள் என்னிடமிருந்து 'திருமண அழைப்பாவது' எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். தயவு செய்து அதை இனிமேல் என்னிடமிருந்து எதிர்பார்க்காதீர்கள். இனிமேல் அதற்கு வாய்ப்புக்களே இல்லை. ஆமாம். நான் எதிர்பார்த்தது நடக்கவில்லை. நான் விரும்புவதாகக் கூறியவர் என்னை விரும்பவில்லை எனப் பின்னர் தான் தெரிந்தது. நான் அதற்காகக் கவலைப்படவில்லை. ஏனென்றால் இது போன்ற சமயங்களில் எப்படி நடக்க வேண்டுமென்று நீங்கள் ஒரு முறை எனக்குக் காட்டி விட்டீர்கள். நான் உங்கள் அளவுக்கு உயர முடியா விட்டாலும் ஓரளவுக்குப் பண்பட்டு விட்டேன்.

நான் அன்று கடற்கரையில் உங்களிடம் நடந்து கொண்ட விதத்துக்கு என்னை மன்னிக்கவும். என்னிடமிருந்து திருமண அழைப்பை எதிர்பார்க்காதீர்கள்.

நான் உங்களிடமிருந்து கண்டிப்பாகத் திருமண அழைப்பை எதிர்பார்க்கிறேன்,

அன்புள்ள, புவனா

கடிதத்தைப் படித்தவுடன் என்ன செய்வது என்று ஆனந்தன் யோசித்தான். இரு புருவங்களுக்கும் இடையே சுட்டை விரலை வைத்துக் கொண்டு மனத்துக்குள் கணக்கிலடங்கா எண்ணங்களை அலைமோத விட்டான்.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் இதே நிலையில் இருந்த பின்னர் ஆனந்தன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.



மனைவி : "ஏன் கதவைச் சாத்துகிறீர்கள் ?"

கணவன் : "நீ கடுமையாக உழைப்பதைப் பார்த்துக் கொண்டு என்னால் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை, அதான் கதவைச் சாத்திண்டிட்டேன் !"

மறுநாள். ஆனந்தன் புவனாவின் வீட்டு வாசலுக்கு இரண்டாவது தடவை போனான். அப்போது புவனா ரேடியோவின் அருகே அமர்ந்து கொண்டு இலங்கை நிகழ்ச்சிகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் திரும்பினாள். திரும்பியவள் இவனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு உடனே ரேடியோவை நிறுத்தி விட்டு வாசலுக்கு வந்தாள்.

"உள்ளே வாருங்கள்" என்றாள்.

உள்ளே நுழைந்தவன் எடுத்த உடனே பேச்சை ஆரம்பித்தான். "நேற்று உங்களுடைய கடிதம் கிடைத்தது. படித்தேன்." அவள் குற்ற உணர்ச்சியுடன் ரேடியோக் குமிழைத் தடவி விட்டுக் கொண்டு நின்றாள்.

அவன் மறுபடியும் பேசினான். "நான் இந்தக் கடிதத்தை இப்போது உங்களுக்கே திருப்பிக் கொடுக்கிறேன்" என்று நீட்டினான். அவள் ஒரு கணம் தயங்கி விட்டுப் பின்னர் நிதானமாக அதைப் பெற்றுக் கொண்டாள்.

மின்விசிறியின் காற்றில் கடிதம் படபடத்தது.

"இந்தக் கடிதம் மட்டும் அல்ல. என்னையே வேண்டுமானாலும் திருப்பிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்" என்றான் ஆனந்தன் தெளிவாக.

"மன்னிக்க வேண்டும்" என்று கூறிவிட்டுத் தனது கடிதத்தை மறுபடியும் அவனிடமே கொடுத்தாள் அவள்.

''நான் கடிதத்தைத் திருப்பிக் கொடுக்கிறேன். ஆனால் என்னைக் கொடுக்கத் தயாராய் இல்லை.''

அவள் விழிகள் சட்டென்று உயர்ந்து, அவனை நிலைகுத்திப் பார்த்தன.

அவள் பேசினாள்:

''இந்தத் தடவையும் நான் உங்களை மறுக்கிறேன். முதல் முறை மறுத்தபோது காரணம் வேறு. அப்போது நான் கவர்ச்சியிலும் வீண் பிரமையிலும் சிக்கி என்னை நானே ஏமாற்றிக் கொண்டிருந்தேன். அதனால் மறுத்தேன். இப்போதும் நான் உங்களை மறுக்கிறேன்: இதற்குக் காரணம் வேறு: நான் இப்போது உங்களை நெருங்க முடியாதவள். அன்று கடற் கரையிலேயே உங்கள் நடத்தையினால் நீங்கள் விசுவரூபம் எடுத்து விட்டீர்கள். என்னைப் பொறுத்தவரை நான் உங்களை ஏமாற்றிய ஒரு கறை படிந்த மலர். கறை படிந்த மலர்கள் தேவனின் பூஜைக்குப் போகக் கூடாது. உங்கள் பாதங்களை ஸ்பரிசிக்க எனக்குத் தூய்மையும் அருகதையும் இல்லை. என்னை மன்னித்துவிட வேண்டும்.''

ஆனந்தன் மறுபடியும் சிரித்துக்கொண்டே எழுந்து வெளியே நடந்தான்.

வட்ட மேஜை

தமிழக அரசு போக்குவரத்து விரைவு வண்டியில் கூட்டம் அதிகமாக இருந்தால் ஏஜெண்டுகள் முன்னதாகவே கண்டக்டரிடம் டிக்கெட்டுகளை வாங்கி வைத்துக் கொள்ளுகின்றனர். வரிசையில் கால் கடுக்க நிற்கும் பிரயாணிகள் பலர் டிக்கெட் கிடைக்காது திண்டாடுகின்றனர்.

திருநெல்வேலியி லிருந்து தென்காசிக்கு விரைவு வண்டிக்கு டிக்கெட் ஒன்றுக்கு ரூ. 1—90. கள்ளமார்க்கெட்டில் டிக்கெட் ஒன்றுக்கு ரூ. 2—50 கொடுத்தால் டிக்கெட் தருவதாகக் கூறுகிறார்கள். திருமணம், மற்றும் முக்கிய அலுவல்களுக்குச் செல்பவர்கள் வேறு வழியின்றி அவசியமாக- தண்டமாக அதிகப் பணம் கொடுத்து வாங்க வேண்டியதாகிறது. டிரைவர், கண்டக்டர், ஏஜெண்டு மூவரும் இலாபத் தொகையைப் பகிர்ந்து கொள்கின்றனர். பாண்டியன் போக்கு — வரத்துக் கழகமே இதுதானு உன் யோக்யதை? போக்குவரத்துத் துறை 'மாண்புமிகு' மாறு வேடத்தில் வந்து நெல்லையில் சோதித்துப் பார்க்கட்டுமே!

வடகரை
13—6—73 ''பிரயாணி''

கடந்த 20—5—73 அன்று எனது நண்பர் ஒருவரைக் குடந்தை அரசினர் மருத்துவமனையில் சேர்த்திருந்தேன். அவரைப் பார்க்க அடிக்கடி போய் வந்து கொண்டிருப்பேன். ஒரு நாள் நான் போகும்போது வாசலில் நின்றுகொண்டிருந்த காவல்காரன் வார்டில் டாக்டர் 'ரவுண்ட்ஸ்' வந்து கொண்டிருக்கிறார் என்று கூறித் தடுத்து விட்டான். வெளியே நின்றுகொண்டு உள்ளே நடப்பவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான்கு விரல்களையும் இழந்த ஒருவன் சிகிச்சைக்கு வந்திருந்தான். டாக்டர் அவனது கட்டைப் பிரித்துப் பார்த்து விட்டு கம்பவுண்டரை விட்டுக் கட்டுக் கட்டச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். கம்பவுண்டர் அவனது கட்டைக் கட்டு முன் ஐந்து ரூபாய் இருக்கிறதா என்று கேட்டார். அதற்கு இல்லை என்று அவன் கூறியவுடன் கம்பவுண்டர் அவனது கட்டைக் கட்டாமலேயே சென்றுவிட்டார். அதைப் பார்த்த நான் மனம் வெதும்பி நின்றேன். மாலைவரை அவனது கட்டு கட்டப்படவில்லை. பின்னும் அவனை விசாரித்ததில் இரவு ஏழு மணிக்குத்தான் கட்டினர் என்று தெரிய வந்தது. 'எங்கள் ஆட்சியிலா லஞ்ச ஊழல்' என்று கேட்கும் அரசியல்வாதிகளுக்கு இதுவும் ஒரு சான்றாகும். ஒரு சின்னக் கட்டுக் கட்டுவதற்குக்கூட லஞ்சம் என்றால் இன்னும் போகப் போக... நினைக்கவே பயமாக இருக்கிறது.

அரயபுரம்
14—6—73 பா. விசுவநாதன்

இறந்த சடலத்தை எடுத்துச் செல்ல எந்த ஊரிலாவது சங்கம் இருக்கிறதா?

இருக்கிறது எங்கள் ஒலவக்கோடு ரயில்வே காலனியில்! இங்கு இறந்தவர்களைத் தூக்க ஆட்களை வெகுதூரத்திலிருந்து அழைத்துவர வேண்டும். இது பல சந்தர்ப்பங்களில் சிரமசாத்தியமாகி விடுவதால் இந்தச் சங்கத்தைத் தொடங்கினோம். சடலத்தை எரிக்கக் காலனிக்காக ஒதுக்கப்பட்ட இடம் ஒரு குன்றின் சிகரம். அங்கு சடலத்தைத் தூக்கிச் செல்ல நான்கு பேர் போதாது. எட்டுப் பேர் கண்டிப்பாக வேண்டும்.

இந்தக் கைங்கரியத்தில் முக்கியமாகப் பங்கு ஏற்று வரும் திரு வேங்கடராம ஐயரும், திரு ரங்கநரசிம்மராவும், ரயில்வேயில் பணி புரிபவர்கள். யாராவது இறந்துவிட்டால் இவர்கள் உடன் காலனியிலுள்ள அனைவருக்கும் செய்தி அனுப்புவார்கள்.

நாங்கள் அனைவரும் இறந்த வீட்டில் ஆஜராவோம். யாரெல்லாம் லீவு போட வேண்டும் என்று தலைவர்கள் கூறுவார்கள். மீதி உள்ளவர்கள் அலுவலகம் செல்வார்கள்.

மனம் உவந்து, கூட்டாக, தக்க மரியாதையுடன் இறந்தவரின் சடலத்தை எட்டுப்பேர்களும் மலை உச்சிக்கு எடுத்துச் செல்வோம்.

மறு நாள்தான் அதிக நபர்கள் தேவைப்படுவார்கள். காரணம் சாம்பல் கரைக்க மலைக் குன்றுக்குக் கீழே உள்ள குளத்திலிருந்து தண்ணீர் வரவேண்டும். பத்துப் பதினைந்து பேர்கள் வரிசையாக நின்று கொண்டு தண்ணீர்க் குடத்தைக் கைமாற்றுவார்கள்.

இந்தச் சங்கத்தின் சேவையால் இறந்தவர்களின் ஆன்மா சாந்தி அடையும்; இருப்பவர்களின் மனம் அமைதி அடையும்.

ஒலவக்கோடு
2—6—73 கி. சா. ஜம்புநாதன்

ரேஸர் வெட்டும் ரோமக் கட்டையும்
ஏற்படும்போது வெட்கப்படுங்கள்
அல்லது . . .



ஆன் பிரெஞ்ச் ஹேர் ரிமூவர் தரும் பட்டு மேனியால் பெருமைப்படுங்கள்



ஷேவிங் வேண்டாம். அது ஆண்களுக்கு மட்டுமே! தவிர, உங்கள் சருமத்தை வெட்டி வதைக்கும்...ரோமம் கட்டையாக வளரும். இதோ ஒரு விடிவு-பெண்மைக்கே உரிய நளினமான வழியில் வேண்டாத ரோமத்தை விரட்டியடிக்கலாம். மென்மையான ஆன் பிரெஞ்ச் ஹேர் ரிமூவர்- இந்த க்ரீமை வேண்டாத ரோமத்தின் மீது தடவுங்கள். சிறிது நேரம் கழித்துத் துடைத்து எடுங்கள். ஆஹா! உங்கள் பொன்பட்டு மேனி கண்டால் கண்பட்டு விடாதோ! இந்த க்ரீம் சருமத்தின் உட்சென்று வேலை செய்து வேண்டாத ரோமத்தை வழியனுப்புகிறது... வாரக்கணக்கில் பட்டுப்போல் மென்மை-தொட்டுப் பார்த்தால் மழமழப்பு... பெண்மையின் நளினத்தைப் பேசுகிறது உங்கள் மேனி-இல்லையா? எனவே இக்கணமே ரோமருக்கு வழியனுப்பு; ஆன் பிரெஞ்ச் ஹேர் ரிமூவருக்கு வரவேற்பு!



ஆன் பிரெஞ்ச்
ஹேர் ரிமூவர்

அருவருப்பூட்டும் ரோமத்தை அகற்றும்
அருமையான க்ரீம்

2 சைஸ்களில் கிடைக்கிறது : 40 கிம் மற்றும் 75 கிம்.

Licensed User of TM : Geoffrey Manners & Co. Ltd.

III HR 202 Tam



அவள்
எழிலின் ரகசியம்

ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்

முப்பது வருடங்களாக
பிரசித்திபெற்ற
நம்பகமான
தயாரிப்புகள்



Aravind Laboratories
MADRAS-33

AL-3

"அப்பா அம்மாவிடம் பேசி நம் கல்யாணத் தேதியை நிச்சயப்படுத்தி விடுகிறேன், விஜு! உடனே திரும்பி வந்து உன்னை உலகம் அறிய மணந்து கொள் கிறேன்'' என்று கூறிவிட்டு ரயிலில் ஏறியவன்தான். இப்போது ரயில் போய்க் கொண்டிருந்ததும் அவன் பெற்றோர் இருந்த ஊருக்குத்தான்.

ஆனால் அவர்களிடம் பேசும் உத்தேசம் அவனுக்கு இல்லை. ஊருக்குச் சென்றதும் விஜுவுக்கு ஒரு கடிதம், "என்னை மறந்துவிடு!'' என்று. பிறகு மாற்றல் கோரி ஒரு விண்ணப்பம் அலுவலகத்துக்கு.

இப்போதிருக்கும் ஒரு மாத லீவு முடியுமுன் மாற்ற லாகி விடும். அதோடு, அவன் வாழ்விலிருந்து விஜு போய்விடுவாள். அதாவது அவன் வாழ்விலிருந்து அவன் நழுவிக் கொள்வான். சங்கடத்திலிருந்து நழுவும் கோழை போல்....

"நான் செய்வது கோழைத்தனம்தான். ஆனால், அதுதான் வாழ்க்கையில் முன்னேறும் வழி. பழி பாவத் துக்கு அஞ்சினால் ஏழைப் பெண்ணை மணந்து கொண்டு வாழ்நாளெல்லாம் பணக்காரர்களைக் கண்டு பொருமிச் செதிந்து கொண்டிருக்க வேண்டியதுதான்!'' என்று அவன் தனக்குத் தானே சமாதானம்கூறிக் கொண்டான்.

இருந்தும் விஜு கூறியிருந்த வார்த்தைகளை அவனால் மறக்க முடியவில்லை. "நான் இன்னும் ஏழு மாதங் களில் தாயாராகப் போகிறேன்!''

அச்செய்தி முதலில் தந்தது மகிழ்ச்சியைத்தான். விஜு தாயென்றால், அவன் தந்தை. "எனக்கொரு மகனா?'' என்று உள்ளம் உயர உயரப் பறந்தது.

"உங்களை நம்பிவிட்டேன் நான். உடனே உலகமறிய என்னை மணந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால்...?'' அவள் கண்ணீர் பெருகியோட அவன் கையைப் பற்றினாள்.

அந்தக் கண்ணீரைக் கண்டவனுக்கு ஏனோ மனத்தில் அருவருப்புத் தோன்றியது. சட்டென்று விஜுவின் ஏழைமையை அவன் நினைத்துக் கொண்டான். அவள் சம்பாதிப்பதைக் கொண்டு அவளுடைய பெற்றோர்கள் உண்கிறார்கள். ஒரு தம்பி படிக்கிறான். அவளை மணந்து கொண்டால் வரதட்சிணையாக ஒரு பைசா கைக்கு வராது. அவள் தொடர்ந்து அலுவலகம் போய்க் கொண்டிருப்பாள். சம்பாதித்துப் பெற்றோர்களையும் தம்பியையும் ரட்சிக்க....

சமீபத்தில் தனவந்தர் ஒருவரின் அழகிய ஏக புதல் வியை மணந்துகொண்ட தன் நண்பன் ஒருவனை நினைத் துக் கொண்டான் அவன். அவனைப் போலவே கடனில் ஸ்கூட்டர் வாங்கி மாதத் தவணையில் அடைத்தவன். இன்று காரில் பறக்கிறான். டெரிலினாகவே ஜொலிக் கிறான். கையில் தங்கச் சங்கிலி போட்ட கடிகாரம். சோம்பேறித் தடியனுக்கு! ஆனால் அவன் கெட்டிக் காரன். என்னைப்போல் காதலில் இறங்கவில்லை. ஏழைப் பெண்ணோடு ஆயுசெல்லாம் இன்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகவும் இல்லை...

சட்டென்று குறுக்குப் புத்தி மின்னலாய் வெட்டி யது. "இவளை மணந்து கொள்ளத் தூண்டுவது என் மனச்சாட்சி ஒன்றுதான். அதை ஒதுக்கி வைத்து விட்டால்?'' எதிரே கண்ணீர் வழிய, உதடு துடிக்க நின்ற விஜுவைப் பார்த் தான். இதயம் கருணையில் கரைந்து



போயிற்று. பைத்தியக்கார இத யம்! வாழ்க்கையில் முன்னேற விடாமல் தடுத்துவிடும் போலிருக் கிறதே!

அந்த நிலையில் அவளை வார்த் தைகளால் சித்திரவதை செய்ய மனம் வரவில்லை. "அப்பா அம் மாவிடம் சொல்லிக் காரியத்தை



ருக்மிணி பார்த்தசாரதி

முடித்து விடுகிறேன்'' என்று கூறி அவனிடமிருந்தும், அந்தப் பாழாய்ப்போன கண்ணனிடமிருந்தும் தப்பித்துக் கொண்டான்.

ரயிலில் உட்காரும் வரையில்தான் இதயத்தில் அவனிடம் கருணை, இரக்கம், எல்லாம். வீணாவிடமிருந்து ரயில் விலக, விலக, தன் மனத்தையும் விலகிப் போகும்படி கட்டளையிட்டான்.

வீணையின் நாதம்போல் இனிமையானவள் வீணா. ஆழ்ந்த, கண்ணைப் பறிக்காத அழகு. பேச்சில் நிதானம். அவளிடம் அப்படியொன்றும் அசாத்திய 'பர்ஸனாலிடி' கிடையாது.

ஓராண்டு அவர்கள் நண்பர்களாகவே இருந்தார்கள். அவளை நன்றாக உணர்ந்துகொண்டு விட்டதாக அவனுள் தைரியம் தோன்றியது.

அவளைத் தனக்கு மிக மிக வேண்டியவளாக அவன் கருதத் தொடங்கி விட்டான். அவன் அகமகிழ்ந்து போனான். அவளிடம் அவனுக்கு இருந்த அன்பிலும் களங்கமே இல்லை. 'வஞ்சனை' என்ற வார்த்தையை அவன் நினைத்துப் பார்த்ததே இல்லை, இதுவரை.

ஆனால் இந்தத் திருப்பம் அவன் எதிர்பாராதது. ''அப்பா அம்மா என்ன சொல்வார்கள்? மூத்தா என்ன நினைப்பாள்?'' என்



காஞ்சிபுரத்தை அடுத்த ?வேலதாளத்தில் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் முன்னிலையில் வேத ரக்ஷண நிதி டிரஸ்டின் சார்பில் ஏழாவது ஒரு வேத சிக்ஷையை பூரணமாகப் பயின்று பரீட்சை கொடுத்துத் தேறிய இளம் மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் இரண்டாயிரம் ரூபாய் வரை பரிசு வழங்கப் பெற்றது. இவர்களில் 12 பேர்கள் ரிக் வேதத்தையும் 7 பேர்கள் யஜுர் வேதத்தையும் 4 பேர்கள் ஜைமினீ சாம வேதத்தையும் கற்றுத் தேர்ந்தனர்கள்.

ரல்லாம் திரும்பத் திரும்ப எண்ணமிட்டு, "விஜுவை மூதுக்கிவிட வேண்டும்" என்ற தீர்மானத்துக்கு உரம் தேடிக்கொண்டான்.

இதயம் மட்டும் விஜுவின் சார்பில் முணு முணுத்துக் கொண்டிருந்தது.

அவன் வீட்டை அடைந்தபோது அப்பாவும் அம்மாவும் இருந்தனர். முக்தா ஆஸ்பத்திரிக்குப் போயிருக்க வேண்டும்...

தன்னைக் கண்டு முகம் மலர வரவேற்ற அவர்கள் முகத்தில் இன்று இதென்ன புது விதமான நிறைவு மின்னுகிறது!

"என்ன அம்மா! இத்தனை சந்தோஷம்? லாட்டரியில் பரிசு விழுந்ததா?" என்று அவன் முறுவலோடு கேட்டான்.

"பொக்கிஷம் கிடைச்சிருக்குடா, பொக்கிஷம்! முக்தாவோட அறையில் போய்ப் பாரு!" என்றாள் அம்மா.

அவன் போனான். முக்தாவின் அறையில் என்றும்போல் பீரோ, அருகே மேஜை நாற்காலி, முக்தாவின் கட்டில்; அதன் அருகில் சுவரோரமாக... இதென்ன?

தொட்டில்!

அவன் விரைந்து சென்று தொட்டிலுக்குள் பார்த்தான். மூன்று மாதக் குழந்தை! மலரின் மென்மையோடு, தெய்வத்தின் பரிசுத்தத்தோடு, ஆழ்ந்த அன்பின் அழகோடு, சிறு கண்கள் மூடி உறங்கிக் கொண்டிருக்கும் பிஞ்சு உருவம்.

அவன் குழம்பிப் போனான். முக்தாவின் அறையில் தொட்டிலா? நாற்பது வயதைக் கடந்த அவனுடைய விதவைத் தமக்கையின் அருகே இந்த எழில் வடிவமான குழந்தை எப்படி வந்தது?

மறுபடியும் தாயின் அருகே வந்தான்.

"தூங்கறுதா குழந்தை?" என்றாள் அம்மா.

"ஆமாம்... அம்மா, வந்து..."

"எத்தனை அழகு பார்த்தாயா?"

"பார்த்தேன்.... இந்தக் குழந்தை..."

"முக்தா வளர்க்கிறாள்."

அப்பாவின் குரல் இப்போது ஆழ்ந்த நிறைவோடு ஒலித்தது. "முக்தாவைப் பத்தின கவலை இனி எங்களுக்கு இல்லேயடா. நாங்கள் கண்ணை மூடினால் அவள் தனிமரமாய் நிக்க மாட்டாள். இந்தப் பிள்ளை அவளுக்குத் துணை நிற்பான். பதினேழு வயதில் முக்தா விதவையானபோது எங்கள் மனசில் ஏறின பாரத்தை இந்தக் குழந்தை இறக்கி விட்டான். தீர்க்காயுசா இருக்கட்டும்."


அவன் பதில் சொல்லவில்லை. முக்தாவின் வளர்ப்புக் குழந்தை! இப்படியொரு சம்பவம் நடக்க அனுமதித்த தன் பெற்றோர்களையா அவன் 'கர்நாடக மனிதர்கள்' என்று நினைத்திருந்தான். இதுவரை?

ஆனால் மனத்தில் குழப்பம் இன்னும் தீரவில்லை. மீண்டும் முக்தாவின் அறைக்குள் சென்றான். தொட்டிலின் அருகில் சென்றபோது இதயத்தில் உணர்ச்சிகள் நிறைந்தன. மாசு மறுவற்ற குழந்தை... தாய்மையின் உருவம்.. சட்டென்று ஓர் எண்ணம் பளிச்

மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனால்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது–


தாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.



பரிய அணுக்கூறுகள் மெதுவாகக் கிரகிக்கப்படுகின்றன
- தாமத நிவாரணம்



நுண்ணிய அணுக்கூறுகள் விரைவில் கிரகிக்கப்படுகின்றன
அதிவேக நிவாரணம்



சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன.

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோ∴பைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • உடல் வலி • ஜலதோஷம் • ∴ப்ளு • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோ∴பைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.

நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.57 TM

59

59 வருஷங்களுக்குப் பிறகு மேற்கு ஜெர்மனியின் முன்னாள் பாங்குகள் லண்டன் நகரத்துக்குத் திரும்பிச் செல்கின்றன. 1914ம் ஆண்டு ஆகஸ்ட் 4ந் தேதி இந்தப் பாங்குகளை 'எதிரிகளின் சொத்து' என்று இங்கிலாந்து சர்க்கார் சொல்லியது.
-பி. எஸ். எம்.

விட்டது. ''இதைப்போன்றதொரு தாய்மை தான் வீணாவினுள் வளர்கிறது!''

''நான் என்ன செய்யத் துணிகிறேன்!'' என்று எண்ணிப் பார்த்தவன் ஒரு கணம் அவமானத்தால் குன்றிப் போனான். வீணாவின் கண்ணீரை நினைத்துக் கொண்டான். மீண்டும் தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டான்.

தொட்டிலில் குழந்தை சிணுங்கிற்று. அவன் தொட்டிலை இலேசாக ஆட்டி விட்டான். குழந்தை மீண்டும் தூங்கிவிட்டது.

'முக்தாவுக்கு வேறு வேலையில்லை! காலையில் ஒன்பது மணிக்கு ஆஸ்பத்திரிக்குச் சென்றால், ஆறு மணிக்கோ இன்னும் தாமதித்தோ அலுத்துக் களைத்து வீடு வருவாள். இங்கேயோ 'குவா குவா' என்ற வரவேற்புக் கிடைக்கும். நல்ல வாழ்க்கை!'

முக்தாவைப் பற்றி நினைத்தவாறே அவன் நாற்காலியில் அமர்ந்தான். அவளுக்குப் பதினாறு வயதில் திருமணம். அப்போது அவன் இரண்டு வயதுக் குழந்தை. மறு வருஷமே விதவையானாள் முக்தா. பின், பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு மருத்துவக் கல்லூரியில் மேல் படிப்பு... டாக்டராக உத்தியோகம். நாள் மேல் நாளாகக் கழிந்து, மாதங்களாகவும் வருடங்களாகவும் நழுவிப் போய்விட்ட வாழ்க்கை.

'தனி வாழ்க்கை... தவ வாழ்க்கை...

இப்போது, தென்றலாக, அமுதமாக, இந்தக் குழந்தை... அவளுடைய மகன்...

மாலை மணி ஐந்து. முக்தா திரும்பிவிட்டாள். உடை மாற்றிக் கொண்டு வந்தவள் நேரே குழந்தைக்கருகே சென்று வாரி அணைத்துக்கொண்டாள்.

அந்தக்காட்சி அவனை என்னவோ செய்தது. ஏனோ அவன் நெஞ்சில் ஒரு குற்ற உணர்வு.

ஆறு மணி. வழக்கம்போல் அப்பாவும் அம்மாவும் கோயிலுக்குப் போய்விட்டார்கள்.

அவன் முக்தாவின் அருகே வந்து உட்கார்ந்து கொண்டான். அவள் தன் குழப்பத்துக்கெல்லாம் விடை தருவாள் என்று நெஞ்சில் ஒரு நம்பிக்கை.

''எப்படி இருக்கிறான் குழந்தை?''

''அழகாயிருக்கிறான்.''

''இவனுடைய அம்மா இவனைவிட அழகு!''

''உனக்குத் தெரியுமா அவளை?''

''என் பேஷண்ட்தான் அவள்.''

''இப்போது அவள்....''

''இப்போது அவள் இல்லை...தற்கொலை செய்து கொண்டு விட்டாள்.''

''என்னது?''

''அவள் ஏழை. கணவனுக்கு மனைவியின் மீது இருந்த அன்பை விடப் பணத்தின் மீது அன்பு அதிகம். இடீரென்று ஒரு நாள் ஆளைக் காணோம். அவள் எப்படியெல்லாம் துடித்தாளோ? இவன் பிறந்த அன்று அவளுக்குச் செய்தி வந்தது. அவள் கணவன் பணக்காரி ஒருத்தியை மணந்து கொண்டு விட்டான் என்று.... தான் மணமானவன் என்று அவன் சொல்லவில்லை.''

''அநியாயமாயிருக்கிறதே!''

''அவளுக்கு மட்டும் அது தெரியாதா, என்ன? அந்நிலையை அவள் அறிந்தே தான் செய்தாள் என்பதில் என்ன சந்தேகம்?''

சாட்டையடி விழுந்தாற்போல் அவன் கூவினான்.. வீணா! வீணா....

''இவன் தாய் கிணற்றில் குதித்தாள். கணவனின் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொள்ள அதுவே சிறந்த வழி என்று நினைத்து. இவன் பத்து நாள் குழந்தை. இவன் தாயின் பெற்றோர்களோ வயதானவர்கள். கிழவருக்கு வாதம். நடமாட முடியாது. கிழவிக்கோ கண் பார்வை மோசம். நான் இவனை வளர்ப்பதாகக் கூறியபோது எல்லோருக்கும் நிம்மதி...''

குழந்தையின் தலைமயிரைக் கோதிவிட்டாள் முக்தா. குனிந்து நெற்றியில் முத்தமிட்டாள். பின் பேசலானாள். 'அந்தக் கிழவி என்னிடம் என்ன சொல்லிக் குழந்தையைக் கொடுத்தாள், தெரியுமா? 'இவன் பெற்றோரை நம்பிப் பிறக்கவில்லை. உறவே இல்லாத, மனம் மட்டுமே உள்ள உன்னை நம்பித்தான் பிறந்திருக்கிறான். இவன் உனக்கு மன வருத்தத்தைத் தரவே மாட்டான். இது என் ஆசீர்வாதம்!' அந்த வார்த்தைகளை நான் உயிருள்ளவரை மறக்கவே மாட்டேன்.''


அவன் நிர்மலமான மனத்தோடு நிமிர்ந்தான். பெற்றோரை நம்பித்தான் அவனுடைய குழந்தை பிறக்கப் போகிறது. தாய், தந்தை இருவரையும் நம்பி. அதுதான் முறை. அது தான் நியாயம். மனமறிந்து அநீதி இழைக்கும் பாவத்துக்கு அவன் ஆளாக வேண்டாம்.

''முக்தா! நான் ஒரு பெண்ணை மணக்க விரும்புகிறேன். அவள் ஏழை. பெயர் வீணா. இந்த விஷயத்தை அப்பா அம்மாவிடம் எப்படிப் பிரஸ்தாபிப்பது என்று தெரியவில்லை. நீ சொல்வாயா?'' என்றான் அவன்.

''கோயிலிலிருந்து அவர்கள் வந்தவுடன் முதல் காரியமாகச் சொல்லி விட மாட்டேனா?'' என்று அவள் மலர்ச்சி மயமாகக் கூறினாள்.

வீணையின் நாதம் தன் இதயமெல்லாம் நிறைவதை அவன் உணர்ந்தான்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras 600031
Managing Editor: T. Sadasivam


ஒவ்வொரு மரம்
வெட்டப்படும்போதும்
தேசத்தின் உயிரே
ஓரளவு பிரிகிறது
தேசத்தின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்காவது மரங்கள் வளர்ந்திருந்தாலன்றி அது நீடித்து நிற்க முடியாது. இந்த உண்மை இப்பொழுது விஞ்ஞான முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.
மேஜை, நாற்காலி முதலியன செய்வதற்கான மூலப்பொருளாகவும், விறகாகப் பயன்படுவதையும் விட அதிகமான முக்கியத்துவம் மரங்களுக்கு உண்டு. அவை நிலத்தை வளப்படுத்தி நன்கு இணைக்கின்றன, கரியமிலவாயுவைப் பிராணவாயுவாக மாற்றுகின்றன. மேகங்களை ஈர்த்து மழை பொழிய வைக்கின்றன. ஒளியின் கூசலை மட்டுப்படுத்தி உஷ்ணத்தையும் கட்டுப்படுத்துகின்றன.
மரங்கள் விஞ்ஞான முறைகளிலும் பலவிதத்தில் பயன்படுகின்றன. சாதாரண முறையில் அனுமானிக்க முடியாத சில நிலைகளைத் தெரியப்படுத்துகின்றன. உதாரணமாக, நீரின் ஆழத்தை அளவிடுவதைச் சொல்லலாம். அதனால், நீங்கள் தேசப்பற்று உள்ளவராயின், மரங்களை வாழ விடுங்கள்.
மரங்களைக் காப்பதன் மூலம் தேசத்தைக் காப்பாற்றுங்கள்
பொதுஜன நலனுக்காக வெளியிடுவோர்
டாடா ஸ்டீல்

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

